22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 பாலம் 11 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 01, 2012

# கனேடிய குடிசன மதிப்பீடு!



மே 10, 2011 இல் கனடாவில் நடைபெற்ற குடிசன மதிப்பீடு பற்றிய விபரங்கள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கனடாவின் சனத்தொகை 33,476,688 ஆக மே 2011 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த 50 ஆண்டுகளுக்கு (1961) முன்னர் இருந்ததை விட இருமடங்காலும், கடந்த 150 ஆண்டுகளுக்கு (1861) முன்னர் இருந்ததை விட பத்து மடங்காலும் அதிகரித்துள்ளது.

கனடாவின் சனத்தொகையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களது எண்ணிக்கை தற்போது 14.8% ஆக காணப்படுகிறது. இது ஐந்து வருடங்களுக்கு முன்னர் (2006) கனேடிய சனத்தொகையில் 13.8% ஆக இருந்தது. கனடாவில் வாழும் 100 வயதிற்கு மேற்பட்டோர் தொகையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. தற்போது கனடாவில் 5,825 நூறு வயதிற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறனர். இத்தொகை இன்னும் பத்து வருடங்களில் (2021) 11,100 ஆக அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகிறது. ஆண்களை விட பெண்களின் இறப்பு வீதம் பொதுவாக எல்லா வயதிலும் குறைவாக காணப்படுகிறது. இது 100 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் பொருந்தும். நூறு வயதிற்கு மேல் தற்போது கனடாவில் வாழ்பவர்களில் 4,870 பேர் பெண்கள், 955 பேர் மட்டுமே ஆண்கள்.

ரொறொன்ரோவில் இருக்கும் வேலை செய்யும் வயதினரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இளம் பிள்ளைகளை உடையவர்களும், வயது போனவர்களும் ரொறொன்ரோவை விட்டு விலகிச் செல்வதும் அவதானிக்கப்படுகிறது. ரொறொன்ரோவின் சனத்தொகையில் வேலை செய்யும் வயதினர் அதாவது 15 வயது தொடக்கம் 64 வயது வரை உள்ளோர் 70% ஆக காணப்படுகிறனர். 14 வயதிற்கு உட்பட்டவர்களது எண்ணிக்கை 16% ஆக காணப்படுகிறது.

இவ்வாறு சிறுவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு செல்வது ரொறொன்ரோ கல்விச் சபைக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்களின் எண்ணிக்கை ரொறொன்ரோவில் குறைந்ததால் பாடசாலைகளில் 65 ஆயிரம் மாணவர்களுக்கு உரிய இடம் மேலதிகமாக வந்துள்ளது. இது கிட்டத்தட்ட 170 பாடசாலைகள் ரொறொன்ரோவில் மேலதிகமாக உள்ளன என்பதைக் காட்டுகிறது.

சிறு பிள்ளைகள் உடையவர்கள் ரொறொன்ரோவை விட்டு அதன் அருகில் உள்ள நகரங்களான Ajax, Vaughan, Brampton மற்றும் Milton இற்கு இடம்பெயர்ந்துள்ளார்கள் என்பதையும் இக்குடிசன மதிப்பீடு காட்டுகிறது. மேற்கூறிய இடங்களில் 14 வயதிற்கு உட்பட்டவர்களது எண்ணிக்கை 20% அளவில் காணப்படுகிறது. இதனால் பீல் கல்விச்சபை இன்னொருவகையான சிக்கலை எதிர்நோக்குகிறது. கடந்த ஐந்து வருடங்களில் பீல் கல்விச்சபை 18 ஆரம்ப பாடசாலைகளையும் 4 உயர்தர பாட-சாலைகளையும் திறந்துள்ளது.

## குடிசன மதிப்பீடு தரும் சுவையான தகவல்கள் சில

- ஆண்களது எண்ணிக்கை மில்ரன் இன் வடக்கு பகுதியில் அதிகமாக உள்ளது. இங்கு 65% ஆனவர்கள் ஆண்கள். இங்குதான் வயது வந்த ஆண்களுக்கான சிறைச்சாலை இருப்பது குறிப்பிடத்தக்கது.

- பெண்களது எண்ணிக்கை Lakeshore மேற்குபகுதியில் அதிகமாக உள்ளது. இங்கு 73% ஆனவர்கள் பெண்கள். இங்குள்ளவர்களது சராசரி வயது 84.5 ஆகும். இங்கு வயோதிபர்களை பராமரிக்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099
E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232
3351Markham Rd., #129 Markaham & Steeles Tel: 416.609.2022

# கனேடிய...

**01ஆம் பக்கத்தொடர்ச்சி**

கும் இடம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

- 19 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்டோர் அதிகமாக வாழும் பகுதிகளாக Front St., Bathurst St., Spadina Ave. பகுதிகள் உள்ளன. இங்குதான் பல அடுக்குமாடி மனைகள் (Condos) உள்ளன. இங்கு 65% ஆனவர்கள் 19 இற்கும் 34 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக உள்ளனர்.



- குழந்தைகள் அதிகம் உள்ள இடமாக Oakville காணப்படுகிறது. இங்கு 3% ஆனவர்கள் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள்.

- பதின்மவயதினர் அதிகம் உள்ள இடமாக Aurora காணப்படுகிறது. இங்கு 17% ஆனவர்கள் பதின்ம வயதினர்.

# 25 முதன்மை குடிவரவாளர்கள்

கனடாவின் குடிவரவாளர்கள் சஞ்சிகையும் றோயல் வங்கி நிறுவனமும் இணைந்து நடத்தும் வருடாந்த முதன்மை குடிவரவாளர் விருது வழங்கும் வைபவம் ரொறொன்ரோவில் May 29, 2012 இல் நடைபெற்றது. இவ்விழா வன்கூவரில் ஜூன் 05, 2012 இல் நடைபெறும்.

இவ்விருது பெற்றவர்களுக்கு ஒரு சான்றிதழும் அவரின் சார்பில் அவர் தெரிவு செய்யும் ஒரு கனேடிய பொதுசேவை நிறுவனம் ஒன்றிற்கு $500உம் வழங்கப்படுவதுடன் அவர்களைப் பற்றிய கட்டுரை கனடாவின் குடிவரவாளர் சஞ்சிகையிலும் பிரசுரிக்கப்படும்.



இதில் கனடாவில் முதன்மைவாய்ந்த 25 குடிவரவாளர்களை 28 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்தார்கள். இவ்விருது வழங்கும் வைபவம் இவ்வருடம் நாலாவது வருடமாக நடைபெற்றது.

இத்தெரிவுக்கு 550 பேர் பிரேரிக்கப்பட்டிருந்தார்கள். அதில் இருந்து 75 பேரை ஒரு நடுவர்கள் குழு தெரிவு செய்தது. இவ் நடுவர் குழுவில் முன்னர் இவ்விருதுகள் பெற்றவர்கள் இருந்தனர். இந்த 75 பேரில் இருந்து 25 பேரை பொதுமக்கள் வாக்களிப்பின்மூலம் தெரிவு செய்தார்கள். சமுதாயத்தில் பொதுசேவை செய்பவர்கள், கலைஞர், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களிடம் செல்வாக்குப்பெற்ற குடிவரவாளர்கள் இத்தெரிவுக்கு பிரேரிப்பதற்கு தகுதி வாய்ந்தவர்களாக கருதப்படுகின்றனர்.

இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட 25 முதன்மைவாய்ந்த குடிவரவாளர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒலிவியா சோ மற்றும் ஒலிம்பிக் மல்யுத்த விளையாட்டு வீரர் டானில் இகாளி, சிறந்த ஹிப்ஹொப் பாடகரான ஹனான், நடிகர் றோன்யா லீ வில்லியம் ஆகியோர் அடங்குவர். தமிழ் சமுதாயத்தில் பிரபல்யமான சட்டத்தரணி மெலனி டேவிற் உம் இந்த 25 முதன்மை வாய்ந்த குடிவரவாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வருட விருது பெற்றவர்களில் ஐந்து பேர் இந்தியாவில் இருந்து வந்த குடிவரவாளர்கள். மற்றவர்கள் ஜோர்டான், கானா, கொங்கோங், வியட்நாம், சோமாலியா, பிரித்தானியா, தான்சானியா, காயானா, பிலிப்பைன்ஸ், கொரியா, நைஜீரியா, சிலி, ஈரான், எல்சல்வடோர் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து வந்த குடிவரவாளர்கள்.

# தமிழருக்கு சாதகமாக மாறிவரும் சர்வதேசச் சூழல்

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு ஆதரவாக சர்வதேசச் சூழல் மாறி வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது. இலங்கைக்குள்ளாகவே பரந்துபட்ட சுயாட்சி அதிகாரம் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரியிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், "எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் தாய்மண்ணை ஆட்சி செய்யவும், சொந்த மக்களைப் பாதுகாக்கவும், தங்களது பொருளாதா ரத்தை மேம்படுத்தவும் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்" என்றார். மட்டக்களப்பு நகரில் நடந்த கூட்டமைப்பின் 14-வது ஆண்டு மாநாட்டில் பேசியபோது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கடந்த 30 ஆண்டு காலப் போராட்டம் ரத்தம், கண்ணீர், வீரம், ஏக்கம், பேரழிவு ஆகியவற்றால் எழுதப்பட்ட அத்தியாயம் எனக் குறிப்பிட்ட அவர், இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் மாபெரும் சக்தியாக விடுதலைப்புலிகள் இயக்கம் எழுச்சி பெற்றது என்றார். இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாத அம்சம். தங்களது நலனுக்கு ஒவ்வாத எந்தவொரு அரசியல் தீர்வையும் இந்தியா வரவேற்காது என்பதை இந்தத் தலையீடு நமக்குத் தெளிவாக கற்றுத் தந்தது. அதேநேரத்தில் ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்கான

**தொடர்ச்சி 03ஆம் பக்கம்**

விளம்பரம் VLAMBARAM™

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

## வாசகர் எண்ணம்

### விமர்சனத்திற்கு ஒரு விமர்சனம்

ஒரு மனிதனின் வளர்ச்சி, பிரபல்யம், வெற்றி தோல்விகள் விமர்சனத்திலேயே தங்கியுள்ளது. அதாவது தனியொருவர் அவரைப்பற்றி அவரது நன்மை தீமைகளை விமர்சிப்பது (எங்களில் பலருக்கு நம்மைச் சுற்றியுள்ளவர்களைப்பற்றி நன்றாக விமர்சிக்கத்தெரியாது பாராட்டவும் தெரியாது)

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளுக்கு விமர்சனத்தில் பெரும்பங்குண்டு. கதை கட்டுரை மேடை நிகழ்ச்சிகள் முத்தமிழ் இயல் இசை நாடகம் சினிமா விமர்சனத்தின் மூலமே மக்கள் ஈர்க்கப்படுகின்றனர்.

கடந்த விளம்பர இதழில் வரசித்தி இந்துக்கல்லூரியின் 6 ஆவது ஆண்டு சிவத்தமிழ் விழா விமர்சனம் பார்த்ததும் வீடியோவில் நிகழ்ச்சி பார்த்ததுபோலிருந்தது. நான் நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் அங்குபாதி இங்குபாதியாக திரிந்ததில் முழுநிகழ்ச்சியையும் பார்க்க முடியவில்லை. ஆனால் விமர்சனம் விழாவைத் திரும்பிப் பார்க்க வைத்தது. நிகழ்ச்சி ஆரம்பித்த நேரத்திலிருந்து முடிவுவரை கோர்வையாக தெளிவாக விரிவாக விமர்சித்த ஞா. அருந்ததியின் விமர்சனத்தை கலகலப்பாக நான் விமர்சிக்க விரும்பவில்லை.

துணிந்து நில்! தொடர்ந்து செல்! தோல்வி கிடையாது.

- கலகலப்பு தீசன்

# குடிநீரில் ஈயம்!

ஈயம் என்றால் என்ன, எனது குடிநீரில் அது எப்படிக் கலக்கிறது?

ஈயம் ஒரு மென் உலோகம். அதனைக் கொண்டு நீர்க்குழாய்கள் உட்படப் பல பொருட்கள் ஆக்கப்படுகின்றன. உங்கள் குடிநீரில் ஈயம் கலக்கும் பிரதான வழிகளுள், ஈயத்தாலான தரைக்கீழ்ப் பெருநீர்க்குழாய் ஒன்று. அதிலிருந்து உங்கள் வீட்டுக்குள் வரும் நீர்க்குழாய் வழியாக உங்கள் குடிநீரில் ஈயம் கலக்கிறது. இக்குழாய் பெரிதும் ஈய வழங்கல் குழாய் எனப்படும். 1950-களின் நடுப்பகுதிக்கு முன்னர் அமைக்கப்பட்ட வீட்டில் நீங்கள் வசிக்கிறீர்கள் என்றால், உங்கள் வழங்கல் குழாய் ஈயத்தால் ஆனதாய் இருக்கக்கூடும். பெரிய கட்டிடங்களுக்கு ஈயத்தாலான வழங்கல் குழாய்கள் பயன்படுத்தப்பட வில்லை. நீங்கள் ஓர் அடுக்குமாடிக் கட்டிடத்தில் வசிப்பவர் என்றால், உங்கள் கட்டிடக் குழாய்கள் ஈயத்தால் ஆனவையாய் இருக்கமாட்டா.

உங்கள் நீர் வழங்கல் குழாய் இரு கூறுகள் கொண்டது - ஒன்று மாநகரத்துக்குரியது, மற்றது உங்கள் வளவிலிருந்து வீட்டுக்குள் செல்வது. உங்கள் கூறுக்கு நீங்களே பொறுப்பு. மாநகரம் அதற்குரிய குழாய்க் கூறில் மாத்திரமே மாற்றங்கள் செய்யும்.

ஈயம் எனது உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்குமா?

மூளை, நரம்புத் தொகுதிகள் வளரும் விதத்தை ஈயம் பாதிக்கக்கூடும். கருவிலுள்ள சிசு, குழந்தை, ஆறு வயதுக்கு உட்பட்ட சிறார் மீது இதன் தாக்கம் மிகவும் அதிகம். குழந்தைகளின் பிரதான உணவு பால்மா. ஆதலால், ஈயக்குழாய் வழியாக வரும் குடிநீர் கலந்த பால்மா ஊட்டப்படும் குழந்தைகள் மிகுந்தளவு ஈயத்தை உட்கொள்ளக்கூடும். இளம் பிள்ளைகளின் உடலில் ஈயம் மிகுந்தால், அவர்களை அது கவனக் குறைவுக்கும், புத்திப் பிரச்சனைகளுக்கும் நடத்தைப் பிரச்சனைகளுக்கும் இட்டுச் செல்லக் கூடும்.

எனது குடிநீரில் ஈயம் உண்டா என்பதை நான் கண்டறிவது எப்படி?

1. 1950-களின் நடுப்பகுதிக்கு முன்னர் கட்டிய வீடுகளின் வழங்கல் குழாய்கள் ஈயத்தால் ஆனவையாய் இருக்கலாம். நீங்கள் அத்தகைய வீட்டில் வசிக்கிறீர்களா என்பதைக் கண்டறியவும். நீங்கள் சொந்த வீட்டில் வசிப்பவர் என்றால், அதனை நீங்கள் வாங்கிய காலத்து ஆவணங்களைப் பார்த்தறியலாம். நீங்கள் வாடகை வீட்டில் வசிப்பவர் என்றால், உடைமையாளரைக் கேட்கவும்.

2. உங்கள் நீர்மானியுள் செல்லும் குழாயைப் பார்க்க இயலுமானால், பார்க்கவும். அது சாம்பல் நிறம் கொண்டதாகவும், எளிதில் சுரண்டக்கூடியதாகவும், தட்டும்பொழுது போறையொலி எழுப்பாததாகவும் அமைந்தி ருந்தால், அது ஈயத்தால் ஆனதாகலாம்.

1950-களின் நடுப்பகுதிக்கு முன்னர் கட்டிய வீடுகளில் வசிப்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:

1. நீங்கள் கருவுற்றிருந்தால், அத்துடன் அல்லது உங்களுக்கு ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தை இருந்தால்: குழாய் முனையில் நீர்வடிகலம் ஒன்றைப் பொருத்தவும். அதற்கு, தேசிய துப்புரவு நிறுவகம் (National Sanitation Foundation) அத்தாட்சிப்படுத்திய வடிகளை நாடவும். அவற்றின் விபரநுங்கில் "NSF-53 for lead removal/reduction" என்று பொறி க்கப்பட்டிருக்கும். நல்ல வடிகலங்கள் பற்றிய விபரங்களுக்கு அழைக்கவும்: 1-800-673-8010. அல்லது NSF இணையத்தளத்தை நாடவும்: www.nsf.org.

உங்கள் குழந்தைக்கு நீங்கள் பால்மா ஊட்டுகிறீர்கள் என்றால், குளிர்ந்த - வடித்த குழாய்நீரைக் கொதிக்க வைத்து, ஆறவிட்டு, 30 நிமிடங்களுக்குள் பயன்படுத்தவும். வடிகலம் பொருத்தும்வரை பருகுவதற்கும், குழந்தைக்குப் பால்மா கரைப்பதற்கும் புட்டித் தண்ணீர் பயன்படுத்தும் வாய்ப்பைகருத்தில் கொள்ளவும். உடன் ஊட்டுவதற்குரிய பால்மாவைப் பயன்படுத்தும் வாய்ப்பினையும் நீங்கள் கருத்தில் கொள்ளலாம்.

2. உங்கள் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டவும். தாய்ப்பால் உடல்நலத்துக்கு உகந்தது. குழாய் நீரைவிட தாய்ப்பாலில் உள்ள ஈயத்தின் அளவு மிகவும் குறைவு.

3. உங்கள் குழாய்நீர் ஒருசில மணித்தியாலங்களுக்கு மேல் பயன்படுத்தப்படாதிருந்தால், உங்கள் குழாயில் தேங்கிய நீரைப் பாய்ச்சவும். அதற்கு, நீர் மிகவும் குளிரும் கட்டம் வரும்வரை பாய விடவும். அந்தக் கட்டம் வந்த பின்னர், ஆகக்குறைந்தது 1 நிமிடத்துக்காவது பாய விடவும். இது 'குழாய்-நீர் பாய்ச்சல்' எனப்படும்.

4. குழாய்நீரைப் பாய்ச்சிய பின்னரும் கூட, சமைப்பதற்கும் குடிப்பதற்கும் குளிர்ந்த நீரையே பயன்படுத்தவும். குழாயில் உள்ள ஈயம், குளிர் நீரைவிட வெந்நீரிலேயே மிகவும் விரைந்து நகரும். ஆதலால் குளிர்நீரில் ஈயம் கலக்கும் வாய்ப்புக் குறைவு.

5. வழங்கல் குழாயின் உங்கள் கூறை மாற்றவும். மாநகரத்துக்கும் உங்களுக்கும் உரிய கூறுகள் இரண்டையும் மாற்றும்படி ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை பெரிதும் விதந்துரைக்கிறது. உங்கள் ஈய வழங்கல் குழாயின் கூறு எதையும் மாற்றும் பட்சத்தில், உங்கள் நீரை நீங்கள் பயன்படுத்த முன்னர் சில முக்கிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும். மேலதிக விபரங்களை அறிவதற்கு எமது இணையத்தளத்தை நாடவும்: www.toronto.ca/health. ஈயப் பாதிப்பைத் தணிக்க பொதுப்படையான ஆலோசனைக் குறிப்புகள்:

1. உங்கள் வீடு 1950-களின் நடுப்பகுதிக்குப் பின்னர், அதேவேளை 1989-ம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டது என்றால், உங்கள் நீர்க்குழாயை ஒழுங்காகப் பாய்ச்சிப் பயன்படுத்தவும். உங்கள் குழாய்க் கட்டுக்கோப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பற்றாசிலிருந்து (அல்லது மூட்டுகளிலிருந்து) உங்கள் நீரில் கலக்கக்கூடிய சிறிதளவு ஈயத்தைக் குறைப்பதற்கு, குளிர்நீரைப் பயன்படுத்தவும். நீங்கள் கருவுற்றிருந்தாலும், தாய்ப்பாலூட்டவர் என்றாலும், உங்களுக்கு ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தை இருந்தாலும், உங்கள் குழந்தைக்கு குழாய்நீர் பயன்படுத்தி பால்மா ஊட்டுபவர் என்றாலும், நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் அதுவே.

2. நீங்கள் மிகவும் பழைய விட்டில் வசிப்பவர் என்றால், சுவர்ப்பூச்சை தேய்க்கவோ, சுரண்டவோ வேண்டாம். அதில் ஈயம் இருக்கலாம். 1980-ம் ஆண்டுக்கு முன்னர் கட்டிய வீடுகளுக்குப் பயன்படுத்திய சுவர்ப்பூச்சில் ஈயம் இருக்கக்கூடும். அந்த ஈயம் உங்கள் வீட்டுத் தூசியில் கலக்கக்கூடும். எனவே ஓர் ஈர ஒற்றி அல்லது துணி கொண்டு ஒழுங்காகத் தூசி அகற்றத் தவறவேண்டாம்.

3. பிள்ளைகள் அடிக்கடி, குறிப்பாக உண்பதற்கும், படுப்பதற்கும் முன்னர் தங்கள் கைகளைக் கழுவி, அவற்றில் படியக்கூடிய ஈயத்தூசியை அகற்ற வேண்டும்.

4. உங்கள் வெளிப்புறக் காலணியை வீட்டினுள் அணிய வேண்டாம். உங்கள் காலணியின் அடியில் பற்றிக்கொள்ளும் அழுக்கில் ஈயமோ வேறு மாசுவகைகளோ படிந்திருக்கலாம்.

ஈய வண்ணக்கலவை, தூசி பற்றிய மேலதிக விபரங்களுக்கு, பின்வரும் இணையத்தளத்தில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் "Hidden Exposures" விபர மடல்களைப் பார்க்கவும்:

www.toronto.ca/health/hphe/children.htm. வழங்கல் குழாய்களை அகற்றும் மாநகரத் திட்டங்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இணையத்தளத்தை நாடவும்: www.toronto.ca/water

*- தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை*

# தமிழருக்கு சாதகமாக...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசியல் தீர்வைக் காண்பதற்குரிய வாய்ப்புகளை இந்தியாவின் உதவியுடனும் ஆசியுடனும் நாம் பெற்றோம். இந்தியாவுடன் நாம் கருத்து வேறுபாடு கொண்டதால், கடந்த 20 ஆண்டுகளில் தமிழர் பிரச்சினையிலிருந்து அந்த நாடு விலகியே இருந்து வருகிறது என்பதுடன், சில நேரங்களில் எதிராகவும் செயல்பட்டிருக்கி றது. இந்த வரலாற்றை நாம் மறந்துவிடக் கூடாது. இதேபோல மீண்டும் செயல்பட்டு சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பைச் சம்பாதித்து விடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.



தமிழர் பிரச்சினைக்காக மேலும் பல உயிர்களைத் தியாகம் செய்வதற்குப் பதிலாக, ஒருங்கிணைந்த இலங்கைக்குள் நமது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் வாழும் வகையிலான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை கூட்டமைப்பு முன்னெடுத்தது. கடந்த காலங்களில் இந்தியாவும் அமெரிக்காவும் தமிழர்களுக்கு எதிராக நின்றன. இப்போது சர்வதேசச் சூழல் நமக்குச் சாதகமாக மாறியிருக்கிறது. எதிர்த்து நின்ற இரு நாடுகளும் நமக்கு ஆதரவாகத் திரும்பியிருக்கின்றன.

ஐநா மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்ததை நமக்குச் சாதகமான மிகப்பெரிய திருப்பமாகக் கருதலாம் என்றார் சம்பந்தன்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# தற்கொலை செய்து கொள்ளலாமா?

***இந்தப் பிறவியில் சரியான வாழ்க்கை அமையவில்லை எனில், தற்கொலை செய்து கொண்டு அடுத்த பிறவியில் புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவதில் ஏதேனும் தவறு இருக்கிறதா என்று ஒரு சத்சங்கத்தில் ஈஷா தியான அன்பர் கேட்டபோது,***

சத்குரு: நீங்கள் இப்போது பார்க்கும் வேலை உங்களுக்கு சரியாக அமையவ-ில்லை எனில் வேலையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். உங்கள் திருமண வாழ்க்கை சரியாக அமையவில்லை எனில் விவாகரத்து செய்து கொள்ளுங்கள். சமூக உறவு உங்களுக்கு சரியாக அமைய வில்லையென-ில் ஈஷா யோக மையத்திற்கு வந்து விடுங்கள். யோகா மையமும் உங்களுக்கு சரியாக அமையவில்லை என்றால் பக்கத்திலுள்ள மலைக்கு சென்று அமர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் அளவிற்கு இவையெல்லாம் சரியான காரணமே கிடையாது. முதலில் இந்த உயிரை நீங்கள் உருவாக்கவில்லை. எனவே உயிரை அழிப்பது பற்றியும் நீங்கள் பேசக்கூடாது. தனிநபர் என்ற அடையா-ளத்தை எப்போது விடுகிறீர்களோ, நானும் படைப்பின் மூலமும் ஒன்றே என்ற நிலைக்கு எப்போது வருகிறீர்களோ, அப்போது நீங்கள் உங்கள் உடலை விழிப்புணர்வுடன் விட்டுவிடலாம். இந்த முறையில் வேண்டுமானால் நீங்கள் உங்கள் உடலை விட்டுவிடலாமே தவிர, உங்கள் உடலைக் காயப்படுத்திக் கொண்டோ அல்லது ஒரு மரத்தில் தூக்கில் தொங்கியோ விடக்கூடாது.


உங்கள் இலட்சியம் பெரியதாக இருக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கை எப்படிப் போனாலும் அது உங்களை பெரிதும் பாதிக்காது. வாழ்க்கை நன்றாக இருந்தாலும் அல்லது மோசமாக இருந்தாலும் அதில் கிடைக்கும் அனுபவங்களைக் கூட படிக்கல்லாக வைத்தே இலட்சியத்தை அடையமுடியுமா

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

என்று முயற்சிப்பீர்கள். நீங்கள் ஈடுபடும் எந்த செயலோடும் சிக்கிப் போகாதீர்கள். ஒவ்வொரு செயலிலும் உங்களை மிகவும் அடையாளப் படுத்திக் கொண்டால், பிறகு நீங்கள் நினைக்காதபடி நடக்காத போது, பிறகு வாழ்க்கையை முடித்துக்கொள்ளத்தான் தோன்றும். இன்று ஏதாவது சரியாகப் போகாவிட்டால் வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் தோன்றும். நாளை காலையிலேயே ஏதாவது சரியாக நிகழ்ந்து விட்டால் பிறகு வாழும் ஆசை வந்துவிடும். அப்போது இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்ளக்கூட திட்டம் போடுவீர்கள். உங்கள் மனதில் நீங்கள் விளையாடும் ஒரு விளையாட்டுத்தான் இது.

ஒரு முறை ஒரு குடியிருப்புக் காலனியின் திறப்பு விழா நடந்தது. காலனியில் பெரும்பாலான வீடுகளில் மக்கள் குடி புகுந்து விட்டார்கள். வேக்குவம் கிளீனர் (தரை கூட்டும் மெஷின்) விற்கும் ஒரு விற்பனை பிரதிநிதி, மற்றவர்கள் போட்டிக்கு வரும்முன், அந்த காலனி முழுவதும் தன் மெஷினை விற்றுவிட ஆர்வம் கொண்டார். முதலில் ஒரு வீட்டின் கதவைத்தட்டினார். வீட்டுக்கார பெண்மணி கதவைத் திறந்தவுடன் கண்ணிமைக்கும் நேரத்தில் தன் வசமிருந்த ஒரு வாளி மாட்டு சாணத்தை தரையில் கொட்டிவிட்டார். அந்தப் பெண்மணி வாய்திறக்கு முன், விற்பனைப் பிரதிநிதி சொன்னார், "நான் இந்த வேக்குவம் கிளீனர் கொண்டு முழுமையாக சுத்தம் செய்து தருகிறேன். தவறினால், கீழே சிந்தியுள்ள இந்த மாட்டு சாணத்தை ஒரு துளி மிச்சம் வைக்காமல் நானே சாப்பிட்டு விடுகிறேன்" என்றார். அப்போது அந்தப் பெண்மணி கேட்டார், "பாவம், முதலில் சிறிது தக்காளி சூப் சாப்பிடுகிறீர்களா? ஏனெனில் இந்த வீட்டில் இன்னும் கரெண்ட் கனெக்ஷன் கிடைக்கவில்லை".

இப்போது உங்களுக்கு என்ன தேவைப்படுகிறது என்றால் சிறிது தக்காளி சூப். அந்த சூப் நன்றாக இருந்தால் உடனே வாழ ஆசைப்படுவீர்கள். ஆனால் இன்று சாப்பிட சாணம்தான் கிடைத்தது என்றால்



## சத்குரு வாசுதேவ்

சாவதைப் பற்றி எண்ணமிடுவீர்கள். "சத்குரு" என்று அழைத்து வாழ்க்கையை முடித்துக் கொள்வது பற்றி என்னிடம் பேசுகிறீர்கள். இது போன்ற முட்டாள்தனம் எப்போதும் உங்கள் வாயிலிருந்து வரக்கூடாது. உங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணும்போது, நீங்கள் என்னை சத்குரு என்று அழைப்பதிலே எந்த அர்த்தமும் இல்லை. நீங்கள் சொல்வதன் அர்த்தம் என்ன, "நான் உங்கள் முன் உட்கார்ந்து கொண்டிருப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை, எனக்கு உங்கள் அருள் இல்லை" என்றுதானே. உங்கள் மனதில் இப்போது ஓடிக் கொண்டிருப்பதெல்லாம், தகுதியான வேலை கிடைக்கவில்லை, மனைவி என் பேச்சு கேட்பதில்லை போன்றவைதான். அந்த நினைவுகளை எல்லாம் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு, வெறுமனே இங்கு இருங்கள். திடீரென அனைத்துமே அழகானதாக, மதிப்புள்ளதாகத் தெரியும். நான் அதை உங்களுக்கு மதிப்புள்ளதாக்கித் தருகிறேன்.

# அமெரிக்க வெளியீட்டு நிறுவனச் சங்கங்களின் 2011க்கான உயர் விருது பெற்ற தமிழர் மைக்கல் தம்பிநாயகம்

உலகில் ஆண்டு தோறும் வெளிவரும் தொழில்சார், வித்துவச் சிறப்பான உரைநடை நூல்களுள், ஒவ்வொரு துறையிலும் ஒன்றைத் தெரிவு செய்து விருது வழங்குவது மேற்படி நிறுவனத்தின் சிறப்பான பணி. இவ்வாறு ஆண்டுதோறும் 45 துறைகளுக்கு மேல் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவற்றுள் ஆகக்கூடிய விருது R.R. ஹோக்கின்ஸ் என்பவரின் நினைவாக வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டுக்கான இந்த உயர்விருது 'The Diffusion Hard Book, Applies solutions for Engineers' என்ற எந்திரவியலறிஞர்களுக்காக R.K. மைக்கல் தம்பிநாயகம் எழுதிய நூலுக்கு வழங்கப்பட்டது. இதனை வெளியிட்ட மக்ஹோ ஹில் வெளியீட்டு நிறுவனத்தின் பிரதம பதிப்பாசிரியர் மைக்கல் பென் பெற்றுக்கொண்டார். இவ்வாறான இவ்விருதை முதன்முதலாக மக்ஹோ ஹில் நிறுவனம் பெற்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இத்துடன் இந்நூல், கணித பௌதீக, எந்திரவியல் தொழில்நுட்பத் துறைக்கான உயர் விருதையும் பெற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பரவுகை (Diffusion) என்பது 'எமது நாளாந்த வாழ்க்கையில் நடைபெறும் ஒரு



தொழிற்பாடு' என மைக்கல் பென் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது, வெப்பமானது உலோகங்களுக்கூடாகப் பரவி வீங்குதலையும் சுருங்குதலையும் உண்டாக்குகின்றது. எனவே பரவுகை சமன்பாட்டை பயன்படுத்தி எந்திரிகர்கள், உலோகப் பாலங்களிலுள்ள இடைவெளிகளையும், றெயில் பாதை இடைவெளிகளையும் தீர்மானிக்கிறார்கள். புற்றுநோய் கட்டிகள் பரவுகை செயற்பாட்டின் மூலமாகவே வளர்கின்றன. எனவே இவற்றின் இடமாறல் (Metastasis) பற்றி பரவுகைச் சமன்பாட்டை உபயோகித்தே உயிரியல் மருத்துவ எந்திரிகர்கள் தீர்மானிக்கிறார்கள். மேலும் முதலீட்டு அபாய நிலைமைகளையும் இச்சமன்பாட்டைப் பயன்படுத்தி ஊகித்தறியலாம். இவை மட்டுமல்ல பூமியின் வயது கூட இதனை வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது. 1864 இல் கெல்வின் பிரபு 'The Secular Cooling of the Earth' எனும் பிரசித்தி பெற்ற ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார். இவ்வாறு எமது நாளாந்த வாழ்வில் ஏற்படும் எண்ணற்ற சிறிய, பெரிய சிக்கல்களுக்கான மாதிரி விடைகளை இச்சமன்பாட்டைப் பிரயோகித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த நூல் இத்துறையில் வெளியிடப்பட்டுள்ள ஒரு முக்கிய நூலாகும் என்றார். இவ்விருது வழங்கும் சபையின் சபாநாயகரான ஜோன். ஏ. ஜென்கின்ஸ்.' இது மிகவும் ஆழமானதும் மிகவும் பரந்து பட்டதுமானது இது எந்திரவியல் துறையின் எல்லா பகுதியினருக்கும் உபயோகிக்கும் இச்சமன்பாட்டில் பிரயோகம் பற்றி கூறும் ஒரு அங்கீகாரம் பெற்ற கைநூலாகும். இது இன்னும் பல ஆண்டுகளுக்கு நிலைத்திருந்து எந்திரவியலறிஞர்களால் நன்கு பயன்படுத்தப்படும் என்பது உறுதி எனப் பாராட்டிக் கூறினார்.

இவ்விருதுகளுக்கான நூல்களை 14 புகழ் பெற்ற பேராசிரியர்களும் வெளியீட்டு நிறுவன உயர் அலுவலர்களுங் கொண்ட ஒருகுழு தெரிவு செய்தது. சென்ற ஆண்டு விருதுக்கு 512 நூல்கள் அனுப்பப்பட்டிருந்தன. இந்த விருதுகளைக் கடந்த 36 ஆண்டுகளாக வழங்கி வரும் அமெரிக்க வெளியீட்டுச் சங்கங்களின் நிறுவனத்துக்கு இதுவரைக்கும் வந்த நூல்களின் எண்ணிக்கையில் ஆகக்கூடியது கடந்த ஆண்டு வந்ததென இச்சங்கத் தலைவர் கூறினார். இவ்விருதுகள் சென்ற பெப்ரவரி மாதத்தில் வோஷிங்டன் மாநகரிலுள்ள Renaissance Mayflower Hotel இலில் நடந்த பகல் விருந்தின் போது விருதுகள் வழங்கப்பட்டன.

**- துறையூரான் -**

இவ்விருதினைப் பெற்ற மைக்கல் தம்பிநாயகம் பற்றிப் பார்ப்போம். இவர் ஒரு அமெரிக்க விஞ்ஞானி. இவர் எண்ணெய் வாயுத் தொழிலில் பல்வேறு உயர் பதவிகளை வகித்த எந்திரிகர். இங்கிலாந்திலுள்ள Schlumberger

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

- மோட்கேஜ் பேமென்ட் பிந்திபோச்சு !
- புறப்பட்டி ரக்ஸ் பேமென்ட் பிந்திபோச்சு !
- கிரடிட் காட்டிலையும் எடுக்க காசு இல்ல !
- றினுவல் வந்திருக்கு ஆனால் வட்டி கூட போட்டிருக்கினம் !

*போனில எல்லாம் செய்து தரலாம் எண்டு சொல்லுவினம்! பிறகு ........................... ......*

இந்தா, அந்தா, எண்டு இழுத்தடிப்பு !

கடைசி நேரத்தில கையை விடுகிறது !

போன் அடிச்சா எடுக்கிறதில்ல , !!!

**Our New Rates:**

| | |
|---|---|
| 3 Yr Fixed Rate | : 2.69 % |
| 5 Yr Fixed Rate | : 3.19 % |
| 10 Yr Fixed rate | : 3.89 % |
| 5 Yr Variable Rate | : 2.6 % |

OAC

உதுக்குத்தானே இப்ப வோக் - இன்

**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !



# 416-644-3555

FSCO LIC # 10156

**CENTUM Rapid Mortgages Inc.**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP

**Principal Broker / President**

FSCO License # M 08001083

**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP

**Team Leader & Agent**

FSCO License # M 09001428

**T.P : 416-624-4843**

# முதன் முறையாக கிண்ணத்தை வென்றது கொல்கத்தா: சென்னையின் ஹாட்ரிக் கனவு தகர்ந்தது.

## விளையாட்டுத்தகவல் 329

ஐ.பி.எல் 5 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அபார வெற்றி பெற்றுள்ளது. ஐந்தாவது ஐ.பி.எல் டி20 கிரிக்கெட் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கியது. இதில் சென்னை, கொல்கத்தா அணிகள் மோதிய இறுதிப் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி யின் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். சென்னை அணியில் எந்தவித மாற்றமும் செய்யப்பட வில்லை. ஆனால், கொல்கத்தா அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. சென்னை அணியின் சார்பில் தொடக்க வீரர்களாக மைக் ஹஸ்சியும், முரளி விஜய்யும் களமிறங்கினர். இருவரும் சென்னை அணிக்கு சிறந்த துவக்க மளித்தனர். முதல் விக்கெட்டுக்காக இந்த ஜோடி 88 ஓட்டங்கள் சேர்த்தது. மூன்றாவது பிளே ஆப் சுற்றில் டெல்லி அணிக்கு எதிராக சதமடித்த விஜய் 42 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதன் பின்னர் மைக் ஹஸ்சியுடன், சுரேஷ் ரெய்னா ஜோடி சேர்ந்தார். இருவரும் கொல்கத்தா அணியின் பந்து வீச்சை சமாளித்து அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தனர். 43 பந்தில் 54 ஓட்டங்கள் எடுத்த ஹஸ்சி, காலிஸ் பந்தில் போல்டானார். இதன் பின்னர் வந்த டோனி, ரெய்னாவுடன் இணைந்து ஓட்டங்கள் குவித்தார். ரெய்னா 38 பந்தில் 74 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டோனி 9 பந்தில் 14 ஓட்டங்கள் எடுத்து களத்தில் இருந்தார். இதனையடுத்து கொல்கத்தா அணிக்கு வெற்றி இலக்காக 191 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இதன் பின்னர் கடின இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அணியின் அணித்தலைவர் கவுதம் காம்பீர் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் பிஸ்லாவும், காலிசும் ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடினர். இருவரையும் பிரிக்க சென்னை அணி பந்துவீச்சாளர்கள் கடும் முயற்சி செய்தனர். பிஸ்லா 48 பந்தில் 89 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுக்லா 3 ஓட்டங்களிலும், யூசுப் பதான் ஒரு ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். காலிஸ் 69 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார். இறுதியில் 19.4 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்கள் எடுத்து கொல்கத்தா அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியது.

### சென்னைக்கு ஆதரவு தந்த திரிஷா, கொல்கத்தாவுக்கு ஜெனிலியா

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான இறுதிப் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு ஆதரவாக தமிழில் பல படங்கள் நடித்து பிரபலமான ஜெனிலியா, குரல் கொடுத்தார். அதேசமயம் நடிகை திரிஷா, உமா ரியாஸ் மற்றும் நடிகர் ஜெயம் ரவி உள்ளிட்டோர் சென்னை அணிக்கு ஆதரவு தெரிவித்தனர். சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியைக் காண பெரும் திரளான ரசிகர்கள் மட்டுமல்லாமல் திரைத்துறை



யினரும் திரண்டு வந்திருந்தனர். ஷங்கரின் பாய்ஸ் படம் மூலம் சினிமாவுக்கு அறிமுகமாகி, பல தமிழ்ப் படங்களில் நடித்துள்ளவருமான ஜெனிலியா, தனது கணவர் ரித்தேஷ் தேஷ்முக்குடன் போட்டியைக் காண வந்திருந்தார். அவர் கொல்கத்தாவுக்கு ஆதரவாக குரல் எழுப்பியபடியும், கை தட்டியபடியும் இருந்தார். சென்னையில் பிறந்தவரான பிரபல பாடகி உஷா உதூப்பும் கொல்கத்தாவுக்கு ஆதரவாக காணப்பட்டார். சென்னை சூப்பர் கிங்ஸுக்கும் திரையுலகினரின் ஆதரவு இருந்தது. நடிகர் ஜெயம் ரவி தனது மனைவியுடன் வந்திருந்து சென்னைக்கு ஆதரவாக குரல் கொடுத்தபடி இருந்தார். அதேபோல சின்னத்திரை நடிகை உமா ரியாஸ் உள்ளிட்டோரும் சென்னைக்கு ஆதரவுக்குரல் எழுப்பியடி காணப்பட்டனர். நடிகை திரிஷாவும் போட்டியை பரபரப்புடனும், பதட்டத்துடனும் பார்த்தார். சென்னை சூப்பர் கிங்ஸின் மோசமான களத்தடுப்பையும், எடுபடாத பந்துவீச்சையும் பார்த்து அவரது முகம் ஒரே சோகமாக காணப்பட்டது.

### ஐ.பி.எல் 5 தொடரின் விருதுகள்

ஐ.பி.எல் 5 தொடர் நிறைவடைந்ததையடுத்து, இத்தொடரில் சிறப்பாக விளையாடிய அணி மற்றும் வீரர்களுக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றது. 23 வயதிற்குட்பட்டோருக்கான சிறந்த வீரராக, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் மன்தீப் சிங்கிற்கு வளர்ந்து வரும் நட்சத்திரம் என்ற பெயரில் விருது வழங்கப்பட்டது. இவர் இத்தொடரில் 16 போட்டிகளில் விளையாடி 432 ஓட்டங்களைக் குவித்திருந்தார். அதிகபட்சமாக 75 ஓட்டங்களை எடுத்துள்ளார். சிறந்த விளையாட்டு உணர்வுடன் போட்டிகளில் பங்கேற்ற அணி என்ற விருதை ராஜஸ்தான் றொயல்ஸ் அணி பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக அவ்வணியின் அணித்தலைவர் ராகுல் ட்ராவிட் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டார். போட்டிகளில் விளையாடும் போது விதிமுறைகளை மதித்து நடக்கும் அணிக்காகவே இந்த விருது வழங்கப்படுகிறது. அதிக ஓட்டங்களைப் பெற்றவருக்கான ஆரஞ்சு நிறத்தொப்பி விருது பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ் அணியின் கிறிஸ் கெய்லுக்கு வழங்கப்பட்டது. அவர் 14 இன்னிங்ஸ்களில் 733 ஓட்டங்களைக் குவித்திருந்தார். ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாகக் கொண்டிருந்த அவர், 61.08 என்ற சராசரியில் 160.74 ரன்ரேட் பெற்றிருந்தார். அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவருக்கான கத்தரிப்பூ (Purple) நிறத் தொப்பி விருது டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் மோர்னே மார்கலுக்கு வழங்கப்பட்டது. அவர் 16 போட்டிகளில் 25 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். ஒரு ஓவருக்கு 7.19 என்ற சராசரியைக் கொண்டிருந்த அவர், 15.1 ஒரு பந்துகளுக்கு ஒரு தடவை ஒரு விக்கெட்டை சராசரியாகக் கைப்பற்றியிருந்தார். அவரது சிறந்த பந்துவீச்சாக 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துக் கைப்பற்றிய 4 விக்கெட்டுக்கள் அமைந்திருந்தன. இத்தொடரின் தொடர் நாயகனாக சுனில் நரைன் தெரிவு செய்யப்பட்டார். அவர் 15 போட்டிகளில் 24 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்திருந்தார்.

மார்கலை விட ஒரு விக்கெட் குறைவாக கைப்பற்றியிருந்த போதிலும், அவர் ஒரு போட்டி குறைவாக விளையாடியிருந்ததோடு, ஓர் ஓவருக்கு 5.47 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்ததோடு, 14.7 பந்துகளுக்கு ஒரு தடவை ஒரு விக்கெட்டை சராசரியாக வீழ்த்தியிருந்தார்.

### ஐரோப்பிய சாம்பியனானது செல்சி: ரியல்மாட்ரிட், பார்சிலோனா வாழ்த்து!

சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் பேயர்ன் மியூனிச் அணியை வீழ்த்தி புதிய ஐரோப்பிய சாம்பியனான செல்சி அணிக்கு பார்சிலோனா, ரியல்மாட்ரிட் அணிகள் வாழ்த்து தெரிவித்துள்ளன. சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் செல்சி, பேயர்ன் மியூனிச் அணிகள் மோதிய இறுதிப்போட்டி மியூனிச்சில் நடைபெற்றது. செல்சி அணி ஆரம்பம் முதலே அபாரமாக விளையாடிய போதிலும் பேயர்ன் மியூனிச் அணி சளைக்காமல் ஈடுகொடுத்து விளையாடியது. ஆனால் இறுதியில் செல்சி அணி, பேயர்ன் மியூனிச்சை 5-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி புதிய ஐரோப்பிய சாம்பியன் ஆனது. புதிய ஐரோப்பிய சாம்பியனுக்கு 4 முறை சாம்பியன்ஸ் லீக்கில் கிண்ணத்தை வென்ற பிரபல கால்பந்து அணியான பார்சிலோனா, 9 முறை சாம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்ற ரியல்மாட்ரிட் அணிகள் வாழ்த்து தெரிவித்துள்ளன. செல்சி கால்பந்தாட்ட அணியிலிருந்து விலகுவது வருத்தமளிக்கிறது: டிராக்போ செல்சி கால்பந்தாட்ட அணியிருலிந்து விலகுவது வருத்தமளிக்கிறது என்றும், விலகுவதற்காக எடுத்த முடிவு மிகக் கடினமானதாகக் காணப்பட்டது எனவும் செல்சி அணியிலிருந்து விலகவுள்ள பிரபல கால் பந்தாட்ட வீரர் டிடியர் ட்ரோக்பா தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை சாம்பியன்ஸ் லீக் பட்டம் வென்ற செல்சி அணியின் சார்பாக இறுதிப்போட்டியில் கோலொன்றை அடித்த ட்ரோக்பா, பின்னர் அதிமுக்கியமான பெனால்ட்டி கோலொன்றையும் அடித்து செல்சி அணியின் வெற்றிக்கு மிகமுக்கியமான காரணியாக அமைந்தார். செல்சி அணியுடனான தனது ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில், அணியிலிருந்து விலகுவதற்குத் தயாராகி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், மிகுந்த கவலை தரும் முடிவு என்ற போதிலும், இந்த அறிவிப்பை வெளியிடும் போது தனக்குப் பெருமையும் காணப்படுகிறது என்றார். சாம்பியன்ஸ் லீக் தொடரை வென்றது எனது முடிவிற்கான பிரதான காரணமாக அமைந்தது என்றும் அதன் பின்னரே விடைபெறுவதற்கான முடிவை எடுத்ததாகவும் கூறினார். அணியாக இணைந்து இந்த மிகப்பெரும் வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததாகத் தெரிவித்த அவர், மக்கள் அதனை தங்கள் ஞாபகங்களில் வைத்திருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாக வும் தெரிவித்துள்ளார்.



**எஸ். கணேஷ்**



**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# அடமானக்கடன் பெறுவதில் புதிய நடைமுறை!

நிதி நிறுவனங்கள் புதிதாக நடைமுறைப்படுத்த இருக்கும் முறை, அடமானக்கடன் பெறுவதில் மேலும் புதிய இறுக்கத்தை ஏற்படுத்தலாம். இதனால் பலர் இருக்கும் ஆதனத்தை இழக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம் என கனடிய அடமானக்கடன் புறோக்கர்கள் தெரிவித்துள்ளார்கள். புதிதாக நடைமுறைப்படுத்த இருக்கும் சட்டங்கள் பலவற்றை பற்றிய புதிய கருத்துகள் வெளிவரத்தொடங்கியுள்ளது. மிகவும் முக்கியமானதும், ஆழ்ந்த கவனம் எடுக்க வேண்டியது, ஏற்கெனவே அடமானம் பெற்று இப்பொழுது கடன் கொடுப்பனவு செய்து கொண்டு இருப்பவர்கள் அடமானக்கடனை புதுப்பிக்கும் போது (Renewal of the Mortgage) கொண்டுவரப்பட இருக்கும் சட்டமே ஆகும்.

ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் அடமானக்கடனை புதுப்பிக்கும் போது, எதுவித கேள்விகளும் இதுவரை இல்லாமல் தொடர்ச்சியான புதுப்பித்தல் முறை நடைமுறையில் உள்ளது. (கொடுப்பனவில் (Repayment இல்) பாரிய நெருக்கடி இருந்திருந்தால் தவிர (Mortgage payment Bounces) மற்றைய சந்தர்ப்பங்களில் Auto Renewal ஆகவே இருந்தது.

புதிய நடைமுறைப்படி அடமானக்கடன் புதுப்பிக்கும் போது தொழிலின் நிலைமை, வருமானம், ஆதனத்தின் இன்றைய பெறுமதி மற்றும் கடன்பெற்ற சரித்திரம், (Credit History) போன்றவை கவனத்தில் கொள்ளப்படும். இதனால் அடமானக்கடன் புதுப்பித்தலில் பலரிற்கு நெருக்கடி ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம். CAAMP (Canadian Association of Accredited Mortgage Professional) இன் தலைமை அதிகாரி ஜிம் மேபி (Jim Murphy) இது ஒரு பெரிய, பெரிய மாற்றம் என குறை கூறியுள்ளார். இதுவரை அடமானக்கடனில் இல்லாதது எனத்தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலைமை நடைமுறைக்கு வருமானால், புதுப்பித்தலில் பெரிய நெருக்கடி ஏற்படும் என எதிர்பார்க்கலாம். இது ஆதனத்தின் விலையில் இறக்கத்தை ஏற்படுத்தலாம் எனவும் ஜிம் அச்சம் தெரிவித்துள்ளார். இன்றைய கால கட்டத்தில் அடமானக்கடனே மிகப் பெரிய கடனாக கனடிய பொதுமக்களிற்கு உள்ளது. இந்த குறிப்பிட்ட சட்டம் பற்றிய முடிவு, யூன் 2012 இன் இறுதிப் பகுதியில் தெரிய வரலாம். அடமானக் கடனில் மேலும் ஒரு புதிய இறுக்கம் Home equaty loan பெறும்தொகை சட்டத்தில் வெளிப்படுத்தலாம், அதாவது இப்பொழுது நடைமுறையில் இருக்கும் வீட்டின் விலையில் 80% ஆன பெறுமதியிலிருந்து 65% ஆன பெறுமதிக்கு குறைக்கப்படலாம்.

உதாரணம் வீட்டுவிலை $400,000, எனக்கொள்வோம். இப்பொழுது பெறக்கூடிய Home Equity Loan upto $320,000 புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவர் பெறுமதி $260,000. கனடிய மக்கள் வீட்டைப் பாவித்து பணத்தைப் பெற்று விரயமாக்கின்றார்கள். அதனை தடுப்பதற்காகவே இவ்வாறு செய்வதாக தெரியப்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டின் ஜனவரிக் கடைசியில் கனடிய பெரிய 6 வங்கிகளினால் வழங்கயிருந்தது. (Royal Bank, TD Canada Trust, CIBC, Bank of Montreal, Scotia Bank மற்றும் National Bank)

ஆதனத்தின் மீதான மொத்த அடமானக் கடன் 912 Billion ஆகும். இதில் $730 Billion அடமானக்கடனும் (Mortgage)

## நாமும் நமது இல்லமும்

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 367**

$182 பில்லியன் பெறுமதி Home Equity Line of Credit, (HELOC) உம் அடங்கும் என்பது கவனிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும் நல்ல நிலையில் கடன்பெறும் சரித்திரம் உள்ளவர்கள் மேலதிக Line of Credit ஐப் பெறக்கூடிய சந்தர்ப்பம் இருக்கலாம். புதிதாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*


*Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**CONDO FOR RENT KENNEDY & HWY 401**
1 Bedroom condo for rent.
1 Parking,
1 Year old building.
Easy access. Rent $1100+

**CONDO. FOR SALE FINCH & MIDDLEFIELD**

2 + Den condo.
Close to GTA Square.
Asking Price $229,000

**OFFICE SPACE FOR LEASE / SALE FINCH & MIDDLEFIELD**
2 Room renovated.
Many uses Available.

**OFFICE SPACE FOR LEASE**

745 Sq.ft Embassy plaza.
2nd floor. All inclusive
Resonable rent. ($850)

**CONVENIENCE STORE FOR SALE**
Weekely sale (18k - 22k).
Lotto, video, CD, DVD.
Established store
Asking only $139,900.
Many other businesses can be done in this location.

**BUSINESS SPACE FOR SALE MARKHAM & STEELES**
-700 Sq.ft
-731 Sq.ft
Price negotiable.
Building sale.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# வழித்துணை

## கடந்த இதழ் தொடர்ச்சி...

றஷ்மியின் இந்தக் கவிதைகள் பத்து வருடங்களுக்கு மேலாக அவ்வவ்போது எழுதப்பட்டவை. அவற்றிற் சில வெவ்வேறு காலங்களில் பத்திரிகைகளில் பிரசுரமாகியும் உள்ளன. இப்போது அவர் அவற்றை தொகுத்திருக்கும் விதத்தில் ஒரு நீண்ட கவிதை ஒன்றுக்குரிய தன்மையைக் கொண்டதாக அவை அமைந்திருக்கின்றன. ஈழப்போராட்ட வரலாற்றின் பிரதிபலிப்புக்கள் இந்தக் கவிதைகளில் வெளிப்படுகின்றன. இனப் பிரச்சினையின் தொடக்கம் முதல் முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரையான காலப்பகுதியிலான எமது சமூக அரசியல் நிலைமையின் போக்கை அடையாளம் காணக்கூடிய போக்கில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

சேவல்கள் கூவாத காலம் (இரண்டாயிரம் வருச பழைய இருள், காடு சிநேகம் பூண்ட கதை, சைன்யம், இறந்து கொண்டிருந்த வனின் இறைச்சி) சேவல் கூவிய காலம் (போர்க் காட்சிகள் தலையாட்டிகளின் காலம், கனவில் சொல்லப்பட்டது, அன்னியர் வருகை, விதி எழுதியது, போர் காட்சிகள் தொடர்ச்சி) நான் பிறர் ஆன காலம் (மனச்சாட்சியைக் கொன்று தூக்கியமை, காவுகொள்ளப்பட்ட வாழ்வு, வாழ்வின் கதை, எதிர்க்கத் தகவற்றவர்களின் இரத்தம், மனிதர்களின் கதை, தோல்வி எழுதப்பட்டமை) ஈற்று (மரணமொன்றின் கதை, கொலைக் கருவியின் வாக்குமூலம், அழித்தொழிப்பின் நாட்கள், மரணம் குறித்தான அநுமானங்கள் இரண்டு) என்ற நான்கு பகுதிகளாகப் பிரியும் இந்த நீண்ட கவிதை ஈழப் போராட்ட காலம் முழுமைக்குமான றஷ்மியின் பதிவுகளைக் கொண்டதாக அமைகிறது. இந்த நான்கு பிரிவுகளின் தலைப்புகளுமே போராட்ட வரலாற்றின் போக்கினை தெளிவாக வெளிப்படுத்துவதுடன் ஒரு சாதாரண மனிதனாக மக்களில் ஒருவனாக கவிஞன் தனது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறான் என்பதைக் காட்டு கின்றன. இந்த உணர்வுகளின் உண்மைத் தன்மை போராட்டம் பற்றிய பதிவாகவும், விமர்சனமாகவும் ஏக்கமாகவும், துயரமாகவும் ஒரு கவிஞனுக்குரிய தளத்தில் அற்புதமான கவித்துவ வீச்சுடன் வெளிப்பட்டிருக்கிறது.

றஷ்மி கவிதையூடாக வெளிப்படுத்தும் அரசி யல் மிகவும் எளிமையானது. பாசாங்குகள் அற்றது. வெளிப்படையானது. பௌத்த மேலாதிக்கம் எமது மக்களின் வாழ்வை சேவல் கூவாத, விடிவைக் காணாத காலமாக மாற்றி விட்டிருக்கிறது. அந்தக்காலம் சிங்கள பௌத்தர்களல்லாத தமிழ் முஸ்லிம் மக்களின் வாழ்வு ஒடுக்கப்பட்டு 'காடாகிய' நாடெங்கும் 'மண்ணாசையைத் துறத்தல் இயலா' சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் சிதறிக்கிடப்பதை றஷ்மியின் வரிகள் இப்படி வெளிப்படுத்துகின்றன.

இரத்தினத் துவீபமதில்
புத்தம் ஒரு மதமாயல்லாமல்
கொலைஞர் கைக் கருவியாய்க்
கடவுள் பெயரால் உயிர்க்கொலையை
கடைப்பிடிக்க மார்க்கம் அவர்க் கனுமதித்தது.
தர்மம் போதித்த சீலங்கள் ஐந்தும்
காலம் அவதியாகிப் பழைய
சிவுரைத் துணிகளோடு குப்பையில்
மக்கிக் கொண்டிருந்தகாலம்
ஆண் மாறிப் பெண்ணும்
பெண்மாறி ஆணுமாய் ஆட்சியமைந்தது
தீவின் அரசு

ராவணனின் வாள் பிழந்த பாறைகளுள்
எறியுண்ட
கல்லாய் மலைகளில் மோதிச் சிதறிற்று
வாழ்வு.
..................................
..................................

ஆண்டுகள் ஆயிரம் இரண்டு பழைய புத்தர்
பூச்சு வாசம் புதிதாய்
மண்ணின் கண்ணிருந்து முகிழ்த்தார்.
இரவு ஒன்றிற்குள் வானளாவ மரம் வளர்ந்த
அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார்.
புனித பூமி இதுவென்றார்.
செவ்விருரத்தை இருந்த இடத்தில்
காலையில் வெள்ளலரி கமழ்ந்தது,
பச்சை நிறப்பின்னணியில்
பிறைக்குள் வெள்ளி அசைந்த கொடி
இறங்கி
பௌத்தரின் தலமாகிற்று'.

இந்த நிலைமையிலிருந்து விடுபடுவதற்காக 'தூர வெளிச்சத்தை கனவாய் கண்ட அடிமைப்பட்டோர் விழித்த' காலத்தில் 'எல்லோர் துயிலும் கலைய ஓர்நாள் கூவிற்று சேவல் 'கொண்டை சிவந்த சேவல்...' என்று ஈழப் போராட்டம் தொடங்குவதனை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளும் றஷ்மி இப்போராட்டத்தை விடிவுக்கான ஒரு போராட்டமாக அடையாளம் காண்கின்றார். ஆனால், அவரது இந்த அரசியல் வெறும் விமர்சனமற்ற அரசியலாக அமையவில்லை. போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டு அதை விடிவுக்கான வழியெனக் கூறிய அதேவேளை அதன் போக்கில் ஏற்பட்ட திசைவிலகல்களை நியாயப்படுத்தும் அளவுக்கு அவரது அரசியல் கண்மூடித்தன மானதாக இருக்கவில்லை.

புத்தர் தலைமறைந்து வாழ்ந்த கிராமங்களின்
நொந்தும் கடிந்தும் அறியா
அப்பாவிச் சனங்களின் மீது பதிந்திற்று
புலியின் கோரப்பல்

சிங்கள மக்கள் மீதான புலிகளின் தாக்குதலை இவ்வாறு விளிக்கும் அவர் அதே புலிகளை எதிர்க்கும் அமைதி காக்கவென வந்த இந்தியப்படையின் வருகையையும் அவர்களது நடவடிக்கைகளையும் விமர்சிக்கத் தயங்கவில்லை. அவர்களின் 'முறுக்கு மீசை தோய வீணிர் வடிந்த இரவுகளில் எமது பெண்கள் காணாமல் போயினர்.' என்ற விமர்சனத்தை முன்வைக்கும் அவரது இந்த அரசியல் பார்வை மிகவும் தெளிவானது, வெளிப்படையானது. சாதாரண மக்களது வாழ்வின் அனுபவ உணர்வுகளைப் பிரதிபலிப்பது. நியாயம் உண்மை என்பவற்றைப் பற்றிப் பேசுகின்ற மக்களின் வாழ்வின் ஆன்மாவுக்கு நெருக்கமானது. மக்கள் யுத்த காலத்தில் படும் துயரங்களையும் அவர்களின் உணர்வுகளையும் அவர் வெளிப்படுத்தும் விதம் மிகவும் ஆழமான படிமங்களால் ஆனது.

இலக்கத் தகடுகளற்ற வாகனங்களில் எமன்
திரிந்த நாட்களில் குழந்தைகளை
முந்தானைக்குள் மூட தாயால்
முடியவில்லை....

குலைந்த உடல்களைப் பொறுக்கி
குத்துமதிப்பாய் கோர்க்கும் ஆட்டத்தில்
மக்கள் தேர்ந்திருந்தனர்.
கதியிலிகளாய் மக்களை போருக்குள்
திணித்தது வாழ்வு
அந்த வாழ்வு பழகியும் போனது

இந்த வகையான நிலையிலிருந்து கவிஞரை போராட்டப் பாதையின் போக்கு நிதானித்து சிந்திக்க வைக்கிறது.

**- எஸ்.கே. விக்கினேஸ்வரன் -**

அவரது உணர்வு சலிப்புடன் இவ்வாறு வெளிப்படுகிறது.

கொல்வதே குலத்தொழிலாய்
சபிக்கப்பட்டவர்களிடம்
கற்பிக்க நியாயங்கள் இருந்தன
அது எல்லாத் தரப்பிடமும் இருந்தது....!

நிலைமை இத்துடன் நின்றுவிடவில்லை. இதைத் தொடர்ந்து பல நடவடிக்கைகள் போராட்டத்தின் பேரால் நடந்தன.

'எப்படி உங்களின் போர்
எங்களுக்குமுரியதாகவுமில்லையோ
அப்படியே
உங்களின் சமாதானமும்'

இத்தகைய ஒரு சூழலில் வந்த போர் நிறுத்தம் மக்களிடையே பெரும் மகிழ்வை தோற்றுவித்ததாக அவர் பதிவு செய்கிறார்.

மசகு இடல் தவிர்த்து
துவக்குகள் தூக்கப்படாத காலத்தில்
குழல்களை ஊதி இனிய
நாதங்களை எழுப்புவது பற்றிப் பாணர்களும்
சிவந்த முனைக் கத்தியால்
சித்திரங்களில் நவீனங்களை வரையச்
சைத்திரியர்களும்
தோட்டாக்களை நட்டு நறிய
மலர்களை விளைவிக்கும் கனவில்
கவிகளுமாய் மூழ்கியிருந்தனர்.

இந்த நிலையில் போராட்டம் தோல்வியை நோக்கி நகரத் தொடங்கி விட்டதை அவர் இனங்காண்கிறார். எதிரியை மறந்து தமக்குள்ளேயே போராளிகள் போராடத் தொடங்கியதை போராட்டத்தின் தோல்விக்கான ஆரம்பமாக அவர் அடையாளம் காண்கிறார்.

தெருத் தெருவாய் தமக்குள் விரட்டிக்
கொன்றுகொண்டிருந்த போராளி எதிரிகளை
சம்பாதித்துக்கொண்டே இருந்த போது
அழிவு நுழைய ஏதுவாய் அரண்களின்
கற்கள் உழுத்து விழுவதை
காலம் அவன் பார்வையிலிருந்து மறைத்து
வைத்தது.

இறுதியாக ஈற்று என்ற பகுதியில் போராட்டம் தோல்வியுறுவதை இவ்வாறு முடிக்கின்றார்.

இப்படியாக,
நட்சத்திரங்களின் தோற்றம் மற்றும்
நகர்வுகளும் அவனது காண்டமும்
கணித்தபடி
அனாதரவானதும் பரிதாபமிக்கதுமான
அவன்முடிவை
அவனது கைகளினால்
அவனாகவே எழுதிக்கொண்டான்.

அவர் தன் வரலாற்றுப் பதிவை இத்துடன் முடிக்கவில்லை. அதன் போதான முள்ளிவாய்க்கால் படுகொலைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் பற்றியும் பதிவு செய்திருக்கிறார்.


பிறகு
தாய் மகள் தமக்கையென
பிறந்த மேனியராய் பெண்கள் அவன்
ஆழ்மன வெளிக்கு அனுப்பி
வைக்கப்பட்டபோது
அவனது சேனை அனேகமாய்
எதிரியின் எல்லாப் பெண்களையும்
கொன்றும் புணர்ந்தும் ஆயிற்று.

ஆக, இந்த வரலாறு உண்மையில் ஈழப் போராட்டத்தின் வரலாறு பற்றிய ஒரு கவிஞனின் பதிவு. மக்களின் விடுதலை உணர்வுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அமைந்த, அதேவேளை உண்மையைப் பேசுகின்ற வரலாறு இது. இந்த நிலைக்குக் காரணம் வேறு எதுவும் இல்லை. கவிஞர் சொன்ன காரணம் ஒன்றுமட்டும் தான் உண்மை. 'ஈ தன் பெயரை மறந்து போனது.'

தொடரும்...

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


Sell your home
faster
and more money
Guildwd/Kingston
$346,000
3+1 Bedrooms, 2 W Rooms
Fireplace
Markham/Eglinton
$349,900
2 Bedrooms, 2 W Room
Ceramic Floor
Harmony/Coldstream
$407,900
3 Bedrooms, 3 W Rooms
Brimley / Denison
$399,900
3 Bedrooms, 2 W Rooms
Ceramic ,Hardwood Floor
Ravenscroft/Rossland
$429,900
3 Bedrooms, 3 W Rooms
Combined W/Dining
9th Line/ Hwy 7
$479,800
3 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
9th Line And Hoover Park
$498,000
3 Bedrooms, 3 W Rooms
Hardwood ,Ceramic Floor
Mccowan & Denison
$519,000
4 Bedrooms, 3 W Rooms
W/O To Yard
Neilson & Finch
$519,900
3+1 Bedrooms, 4W Rooms
Ceramic,Parquet Floor
Mccowan/Hwy 7
$599,000
3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor
16th Ave/Hwy 48
$599,900
4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor
Bur Oak/9th Line
$619,000
4 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floor
Markham/S. Of Steeles
$695,000
4 Bedrooms, 4 W Rooms
Ceramic, Hardwood Floor
Ravenshoe Rd /Hwy48
123 Acres
$649,000
Property for Sale
9th Line/ 407
$699,000
4 Bedrooms, 3 W Rooms
Hardwood,Ceramic Floor
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it
RE/MAX
Phl-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
KZG 647-200-5833
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# கனடா வாழ்வில் நாய் ஒன்றிடம் கடி வாங்கினால் நட்டஈடு பெறுவது எப்படி?

## நீதிமன்ற தீர்ப்புகளின் அனுபவங்கள்

## COMPENSATION FOR DOG BITE INJURIES

**தற்போது கனடாவில் கோடை காலம்!**

நம்மவர்கள் பலரும் கனடா வாழ்வில் தங்கள் வீடுகளில் வளர்ப்பு பிராணியாக நாய்கள் வளர்க்கின்றார்கள். வீதிகள், தெருக்கள், பூங்கா என பல இடங்களிலும் பலரும் தங்கள் வளர்ப்பு நாய்களுடன் தினமும் நடை பவனி வருகின்றனர். இவை கனடா வாழ்வில் ஒரு அன்றாட நிகழ்வு என்பது சகலரும் தெரிந்த விடயம்.

ஆனால் இந்த நாய் ஒன்று எவராவது ஒருவரை கடித்தால் (நாய் உரிமையாளர்கள் தவிர) பாதிக்கப்பட்டவர் நட்டஈடுகள் எங்கே? எப்படி? பெறுவது? என்பதனை கனடாவின் சட்டங்கள், நீதிமன்ற தீர்ப்புகள், எப்படி வரையறை செய்கின்றது? இதுவே இங்கு இதுவரை அறியவில்லையானால் அறிய வேண்டிய ஒரு தகவல் தொடர்!

**நாய் ஒன்று கடித்தால் என்ன செய்ய வேண்டும்?**

**ஒன்ராரியோ நாய் உரிமையாளர் பொறுப்பு சட்டத்திலும்** (Ontario Dog Owners Liability Act)

இச்சட்டங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு கோரிக்கைகளுக்காக நீதிமன்றங்களில் ஆஜராகும் சட்ட நிறுவனங்களின் இணையதள கட்டுரைகளிலும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. முதலில் தேவையான மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வதுடன் செய்யப்பட்ட மருத்துவ சிகிச்சைகளின் அறிக்கைகளை ஆதாரமாக வைத்திருத்தல் வேண்டும்.

2. நாய் உரிமையாளர் யார்? அவரது விலாசம் எது என்ற சகல அடையாளங்களையும் உறுதி செய்தல் வேண்டும்.

3. சம்பவம் நடந்த இடம், கடித்த வடிவம் (Description of Dog Attack) போன்றவை தயார் நிலையில் இருப்பதுடன், காயமடைந்த உடலின் பகுதி உட்பட படங்கள் எடுக்கக்கூடிய இடங்களை படங்கள் எடுத்து வைத்திருத்தல் வேண்டும்.



## கனடிய தகவல் தொடர் 173

4. மூன்றாம் நபர்களின் நேரடி சாட்சிகள் இருந்தால் அந்த ஆதாரங்கள் உதவிகளையும் பெற்றுக்கொள்தல் வேண்டும்.

5. எந்த நகரத்தில் சம்பவம் நடந்ததோ அந்த நகரசபை பிரிவிலுள்ள 'மிருக சேவை பகுதியினருக்கு' (City Animal Control Department) முறைப்பாடு செய்து அதற்குரிய பத்திரங்கள், பொலிசாருக்கு முறைப்பாடு செய்தால் அதற்குரிய பத்திரங்களை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

6. மேலதிகமாக சம்பவத்தினை நிருபிப்பதற்கு வேண்டிய எவ்வளவு ஆதாரங்களை பெறமுடியுமோ அவை யாவற்றினையும் பெற்று எடுத்து இத்தகைய நாய் கடித்த காயங்களுக்கான நட்டஈடு கோரல் வழக்குகளில் அனுபவமுள்ள வக்கீல் மூலமாக ஒன்ராரியோ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படல் வேண்டும். (காயமடைந்து மூன்று வருடத்தினுள் நட்டஈடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.)

7. நாயின் உரிமையாளருக்கு சொந்த வீட்டு காப்புறுதி (Home & Contents Insurance) அல்லது வளர்ப்பு பிராணிகளுக்குரிய காப்புறுதி (Pet Insurance) உள்ளதா? என்ற தகவல்களையும் அறிந்து வைத்திருத்தல்.

**பாதிக்கப்பட்டவருக்கு எவ்வளவு தொகை நட்டஈடு கிடைக்கலாம்?**

பின்வரும் காரணிகள், பாதிப்புகளை, அடிப்படையாக வைத்து நட்டஈடு தொகை தீர்மானிக்கப்படும். (குறைந்த $25,000 டொலர் வரை வழங்கப்படலாம்) என்பது காப்புறுதி முகவர் நிறுவனங்கள், வக்கீல் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களாகும்.

- காயத்தின் நிலைமை (Injury Nature)
- காயத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் (Pain & Suffering of Injuries)
- மருத்துவ செலவுகள் (Medical Bills)
- வேலை செய்யமுடியாத ஊதிய இழப்புகள் (Lost Wages)
- உளரீதியான பாதிப்பின் மதிப்பீடுகள் (Psychological Trauma)
- காயத்தளம்புகள் (Disfigurement)
- உடல் இயங்க முடியாத நிலைமை (Disability)
- எதிர்காலத்தில் உடல் தசைகளை சீரமைக்கும் சத்திரசிகிச்சை (Further Plastic Surgery Costs) செலவுகள் காயமடைந்து பாதிக்கப்பட்டவருக்குரிய நட்டஈட்டினை நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் பின்வரும் வழி மூலம் கொடுத்து தீர்க்கப்படும்.

1. கடித்த நாய் உரிமையாளரின் வீட்டு காப்புறுதியிலிருந்து வழங்கப்படும்.
இவ்வாறு வீடு, அதற்கு என காப்புறுதி திட்டம் இல்லையேல் இரண்டாவது வழி

2. வளர்ப்பு மிருகங்களின் பொறுப்பு காப்புறுதி திட்டத்திலிருந்து (Pet Liability Insurance) பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கப்படும் (பொதுவாக வளர்ப்பு



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Sitham Sam Shanmugam (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

Daisy Mart
Brand New
convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

New Market
7 M/Litre New gas statiuon for sale
Ultramar 3 Acre land

For Sale
Markham & Ellesmere
3 Bedrooms Condo. for sale

0 - 5 years Newer homes in Stouffville

Renovate and Sell
Old detached bungalow near University of Toronto

# நற்பொருள் நாற்பது

அரங்கேறிப் பேசும் அறிஞர் அனைவரையும்
வரங்கூர்நா வன்மையதால் வாசம் - தருங்கமலம்
வண்டுகளை ஈர்த்து மதுவழங்கல் போல்நன்கு
சுண்டி இழுப்பர் தொடர்ந்து. (12)
(வரங்கூர் - மேன்மை பொருந்திய.)

நாய்கள் மணந்துவரும் நாற்றம் மிகுந்துவரும்
நோய்கள் பெருகும் நுடங்காது - பேய்கள்
புழுக்கூழைக் காய்ச்சும் புறங்கூறல் வஞ்சம்
அழுக்காறு நெஞ்சம் அதில். (15)

பனைமரங்கள் காய்க்கா பழமரங்கள் பூக்கா
முனையும் முயற்சிகளும் முற்றா - மனையுள்ள
மேழிவளந் தானு மழியும் மிகுமின்னும்
ஏழைகளைப் பிழிவார்க் கிடர். (16)
ஆட்சிக் கொடுமை அயலார் அலர்செய்த
மாட்சிக் குறைவு வருமான - வீழ்ச்சியென்றே
நித்தமிடர் வந்தாலும் நேர்மை தவறாத
உத்தமரைப் போற்றும் உலகு. (17)

முன்னோர் வகுத்தவற்றை மூடநம் பிக்கையென
இந்நாள் சிலராய்ந் திகழ்கின்றார் - மன்னும்
அழகார் மதிமீதில் ஆனமறு கண்டும்
உழைவார் சிலரும் உளர். (18)
(உழைவார் - வருந்துவார்.)

நானே அதுசெய்தேன் நானே இதுசெய்தேன்
நானேநா னென்றுநிதம் நாணாமல் - தானே
செறிய நிமிராதீர் சீறுபுயற் காற்றில்
முறியும் முருங்கை மரம். (19)
(தானே செறிதல் - தான் என்னும் ஆணவம் மிகுதல்.)

தன்னியல்பைத் தானறியார் தன்குற்றம் காணாதார்
பின்னிப் பிறர்குற்றம் பேசுவது - மண்ணில்
இறப்பாரைக் கண்டும் இறவார்தாம் என்றே
இறும்பூது கொள்வார் இயல். (20)

'தூங்காமை கல்வி துணிவுடைமை' கொண்டவருக்(கு)
ஆங்காரம் வந்தால் அறிவிழந்து - தீங்குகளைச்
செய்யத் துணிவார் துணிந்தாற் சிறப்பில்லை
உய்யவும் மாட்டார் உணர். (21)

இந்திரனை எண்ணிமிக ஏங்குவதால் என்னபயன்
சந்திரனை வீழ்த்தச் சதிசெய்யும் - சிந்தனைதான்
யாருக்கு முண்டோ அளந்த அளவன்றி
நீருக்கும் இல்லை நிலம். (22)



கவிஞர் வி. கந்தவனம்


**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

*Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,* புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: *416.917.6883*

**TBC Toronto Business College**

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

**SECOND CAREER**

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப் பின் வேலை இழந்தவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.
Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

**ODSP, WSIB Recepients & New Immigrants Welcome**

**ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR**
35 WEEKS




JOB OPPORTUNITIES
- Payroll Clerk
- Pay Clerk
- Payroll & Benefit Clerk
- Accounting & Payroll Clerk
- Accounts Assistant

**COMPUTERIZED ACCOUNTING DIPLOMA**
26 WEEKS

JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Accounts Assistant



**MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA**
32 WEEKS



JOB OPPORTUNITIES
- Medical Secretary
- Medical Office Assistant
- Hospital Ward Clerk
- Medical Office Administrator
- Medical Record Clerk

**PERSONAL SUPPORT WORKER DIPLOMA**
26 WEEKS

JOB OPPORTUNITIES
- Patient Care Aide
- Hospital Attendant
- Long Term Care Aide
- Nurse Aide
- Personal Support Worker



**CERTIFICATE COURSES**

- Windows
- MS Office
- Quickbooks
- Simply Accounting
- Accpac
- Food Handler
- Medical Transcription
- First Aid & CPR
- OHIP Billing

**4465 Sheppard Avenue East, Suite 208**
**Toronto (Sheppard & Brimley)**
**info@tbcollege.com www.tbcollege.com**

**416-291-5155**

Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# Universal Community Help

### 1. EXPRESS METRO HOUSING

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

### 2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

### 3. FOOT CARE CLINIC

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

### 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

***10. Food handling certification certified food handle training.***

***11. UCH Legal Clinic***

## தொடர்புகளுக்கு: *416.744.3011*

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
*Monday to Sunday -* 416.744.4357
12.00pm to 10.00 pm
*Monday to Sunday -* 416.554.5040
9.00 am to 9.00 pm
*Special hot line*

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# தமிழ் இலக்கியத்தோட்டம்


மொழிகளிலுள்ள சொற்கள் இரண்டு வகையாகத் தோன்றி இருக்கின்றன. காற்று, கடல், வானம் என்பன முன்பு யாரோ இட்ட பெயர்கள். அதாவது இடுகுறிப் பெயர்ச் சொற்கள். இவற்றுக்கு ஏன் எதற்கு? என்பதற்கு விளக்கம் கூறமுடியாது. பாதை, வழி, தெரு, வீதி, நெடுஞ்சாலை என்பன காரணப் பெயர்ச் சொற்கள். இவை காரணம் கருதிச் சூட்டப்பட்ட பெயர்ச் சொற்கள். இச்சொற்களுக்கு விளக்கம் கூறலாம்.

இதேபோன்றுதான் 'தோட்டம்' என்ற சொல்லும் ஒரு காரணப் பெயர்ச் சொல்லாகும். தோட்டம் என்பது அரை ஏக்கர் அல்லது ஓர் ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கும். அதற்கு மேற்கொண்ட நிலப்பரப்பிலும் அமைந்திருக்கும். தோட்ட நிலத்திற்கு, கண்டிப்பாக ஓர் எல்லை வகுப்பு உண்டு.

காட்டுத் தடிகளாலும் ஓலைகளாலும் வேலி அடைத்து, அல்லது கட்டைகள் நாட்டி அதன்மேல் முட்கம்பி அடித்து, அவற்றில் வேர் ஊன்றி வளரக்கூடிய பூவரசு, ஒதி, கிளுவை, முள்முருங்கை போன்றவற்றின் தடிகளை நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் நாட்டி தண்ணீர் ஊற்றி வளர்த்து தோட்டக் காணியை 'இது இன்னாருடைய தோட்டம்' என்று பாதுகாப்பாக எல்லை போட்டு, வகுத்து வைத்திருப்பர்.

பூந்தோட்டம், பழத்தோட்டம், காய்கறித் தோட்டம், மஞ்சள் உள்ளி இஞ்சி வகையறாத் தோட்டங்கள், பெருந்தோட்டப் பயிர்கள், சிறுதோட்டப் பயிர்கள் எனப் பலவகையான தோட்டங்கள் விவசாய உற்பத்தி முறையில் உள்ளன.

கனடா 'ரொறன்ரோவில் இலக்கியத்திற்கும் இலங்கைத் தமிழர்கள் ஒரு 'தமிழ் இலக்கியத் தோட்டம்'



அமைத்துள்ளார்கள். பயிர்களை வளர்க்கத் தோட்டம் எப்படி முக்கியமோ அதே அக்கறையுடன் இந்தத் தோட்டத்துக்குள்ளும் இலக்கியப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

பயிர்க்கொடிகள் விளைச்சலைத் தந்து மனித உடலுக்கு ஊட்டத்தைக் கொடுத்து உயிர்களையும் காக்கின்றன. இந்த இலக்கியப் பயிர்கள் அறிவுக்கு ஊட்டம் கொடுத்து மனிதரை நன்னெறிப்படுத்தி, நல்ல சமுதாயத்தை அமைத்து, காலப்போக்கில் சிறந்த பாதுகாப்புள்ளதாக இந்த உலகம் உருவாக வழிவகுக்கின்றன.

கடற்கரை நிலத்தைக் கிண்டி, ஆமை ஆயிரம் முட்டைகளைப் போட்டுவிட்டு ஆரவாரமின்றி கடலுக்குள் சென்றுவிடும். அத்தகைய ஆரவாரமில்லாப் பெருமை இந்த ரொறன்ரோ 'தமிழ் இலக்கியத் தோட்டத்துக்கும்' உண்டு.

இவ்வமைப்புக்கு புரவலர்களும் சிறு கொடையாளிகளும் தொடர்ந்தும் ஆதரவு கொடுக்கவேண்டும். உலகளாவிய இலக்கியச் சிறப்பாளர்கள் வருடாவருடம் 'இயல் விருதை' பெறவேண்டும்.

இலக்கிய ஆர்வமிக்கவர்கள் இச்செயற் குழுவில் உறுப்பினர்களாக இயங்குகின்றனர். 'இயல்விருது' வழங்கும் வைபவம் கடந்த பல வருடங்களாக ஆனி மாதத்தில் ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இவ்வருடம் ரொறன்ரோவில் உள்ள ஹோட்டலில் நடைபெறுகிறது. தமிழக எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனுக்கு இயல்விருது கிடைக்கிறது.

'தமிழ் இலக்கியத் தோட்டத்தை' இயக்குவோரையும் கொடையாளிகளையும் ஆதரவு கொடுத்துச் சிறப்பிப்போரையும் எழுத்துலகம் நன்றி கலந்த பெருமையுடன் வானுயர வாழ்த்துகின்றது.

**- முத்துராஜா -**

# அமெரிக்க வெளியீடு...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

Cambridge Research நிறுவனத்திலும் முகாமையாளராகப் பணி புரிந்தவர். 1985 இல் இரசாயன எந்திரிகர் சங்கத்தின் (U.K) உயர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் தமது துறையில் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு உரிப்புரிமை பெற்றவர். பரவுகை பற்றிய விருது பெற்ற நூலே இவருக்குப் பெருமை சேர்த்துள்ளது என்பது கூறாமலே விளங்கும். இந்நூலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிக்கல்களுக்கு இவர் ஆய்வு செய்து விடைகளை விளக்கியுள்ளார். இவை இத்துறையிலுள்ள யாவருக்கும் மிக்க பயனுள்ளன எனப் பல அறிஞர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

கலாநிதி ராஜ்குமார் மைக்கல் தம்பிநாயகம், கொழும்பில் செப்ரெம்பர் 1949 இல் பிறந்தவர். 7ஆம் வகுப்புவரை சென். யோசப் கல்லூரியில் படித்தவர். 1962 இல் யாழ்ப்பாணம் ரெம்பின் வீதியில் இவரது குடும்பத்துடன் வசிக்க ஆரம்பித்தார். அப்போது சென். பற்றிக்ஸ் கல்லூரியில் (1962-1969) கல்வி கற்றார். பின்னர் 1969 இல் இராசாயன எந்திரவியற்றுறையில் கல்வி கற்க இங்கிலாந்து சென்றார். மான்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார். இவரது தகப்பனார் P.A தம்பிநாயகம் உதவி அரசாங்க அதிபராக



இலங்கையில் பணியாற்றியவர்.

மைக்கலின் மனைவி அக்னஸ் பத்மினி தம்பிநாயகம் யாழ். புனித குடும்பக்கன்னியர் மடப் பாடசாலையில் படித்தவர். இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் கொனெக்ரிக்கட் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டதாரி. இவர் இலங்கை வரலாற்றை ஆய்வு செய்து 'The Gentiles' A History of Srilanka 1498-1833 எனும் நூலை எழுதியுள்ளார். இதுவும் பலரது பாராட்டுகளைப் பெற்ற ஒரு சிறந்த நூல்.

எனவே கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து எமது இனத்துக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். இவர்களது சீரியபணி மென்மேலும் வளர ஆண்டவன் அருள் பாலிக்க வேண்டுகிறோம். வாழ்க வளமுடன்.

ஆந்திரேயா ஹொவாத், நீதன் சண் ஆகியோர் முறையே ஒன்ராரியோ என்.டி.பி கட்சியின் லீடராகவும், பிரசிடன் ஆகவும் தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டி ஒன்ராரியோ என்.டி.பி கட்சி றூஜ்றிவர் கிளையினரால் நிகழ்த்தப்படுகின்ற பாராட்டுக் கூட்டம்

எதிர்வரும் யூன் மாதம் 5ஆம் தேதி, செவ்வாய் கிழமை, பிற்பகல் 6.00 மணிக்கு 5183 Sheppard Ave. East இல் அமைந்துள்ள சீன கலாச்சார மண்டபத்தில் இந்நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. கடந்த மாகாணப் பாராளுமன்றத் தேர்தலிலும், அண்மையில் ஹாமில்ரனில் நடைபெற்ற ஒன்ராரியோ என்.டி.பி கட்சி மாநாட்டிலும் கட்சிக்காக உழைத்த என்.டி.பி அங்கத்தவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நன்றியையும், பாராட்டையையும் தெரிவிக்கும் நிகழ்வாகவும் மேலும் இந்நிகழ்வு அமையவுள்ளது. பத்து ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வில் சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

கனடிய மக்களின் சமூகநீதிக்காகவும், சிறுபான்மையினங்களின் சமத்துவத்துக்காகவும் உழைக்கின்ற, போராடுகின்ற என்.டி.பிக் கட்சியைப் பலப்படுத்துவது கனடா நாட்டிலே வாழுகின்ற பல்லினச் சமூகங்களின் வரலாற்றுக் கடமையாக அமைகின்றது. அந்த வகையில் இந்நிகழ்வில் ஸ்காபுரோ வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டு ஒன்ராரியோ என்.டி.பிக் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.
தொடர்புகளுக்கு 416-824-3399
ஒன்ராரியோ என்.டி.பி றூஜ்றிவர் கிளை


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹறாஜியின் உரைகள்



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| | Rogers Cable Channel - 20 |
| (416) 431-5000 | Bell Express vu |
| 1 877 707 3221 | Channel - 219 |

# அடமானக்கடன்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டுவரப்பட இருக்கும் சட்டத்தில் 'Cash Back' என்பது முற்றாக நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடமானக்கடன் பெறுபவர்களை தேவையில்லாமல் ஊக்குவித்து அவர்களை கடனாளிகள் ஆக்கப்படுகிவதாக பல பொருளாதார அறிஞர்கள் இதனை எதிர்த்தே வந்துள்ளார்கள்.

ஏற்கனவே அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், புதிதாக கொண்டுவரப்பட இருக்கும் என எதிர்பார்க்கப்படும் சட்டங்கள் யாவும் அடமானக்கடன் பெறுவதில் புதிய பரிமாணத்தை நிச்சயம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். தொடர்ச்சியான ஆதன விலை அதிகரிப்பிற்கு பிறேக் போடவேண்டும் என்பதே மத்திய அரசினதும் நிதி அமைச்சரினதும் அறைகூவலாகவே இருந்து வருவதனை விளம்பர வாசகர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள். அதற்கேற்ப தகுந்த பாதுகாப்பு கவசம் போடுவார்கள் என



எதிர்பார்க்கலாம். இதன் தாக்கம் உடனடியாக இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் நிச்சயமாக இருக்கும்.

# வெகுளாமை

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான ஆய்வுகளின் மூலம் மருத்துவ அணுகுமுறைகளால் வெகுளாமையைச் சீராக



வைத்திருப்பதற்கான புதிய வழிமுறைகள் தோன்றும் எனத் திடமாக நம்பலாம். இந்தக் கட்டுரையில் குறிக்கப்பட்ட ஆய்வுத் தகவல்கள் மூலம் மூளையின் தொழிற்பாட்டிற்கும் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டிற்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பைப் பற்றி நாங்கள் அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே அடிப்படையில் மூளையின் ஆரோக்கியத்தைப் பேணுவதன் மூலம் வெகுளாமை கொண்டு சிறந்து வாழலாம் என்று நாங்கள் திடமாகக் கூறலாம். மூளைக்கு ஆரோக்கியமான உணவுப் பொருட்கள், மூளைக்கான பயிற்சிகள் என்பவற்றில் கவனம் செலுத்துவதே மூளையை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான அணுகுமுறையாகும்.

அன்பான வாசகர்களே! வழமை போலாக இன்றும் வெகுளாமை கொண்டு வாழ்வதுடன் தொடர்புள்ள சில விடயங்களையும், ஆய்வுத்தகவல்களையும் பற்றி உரையாடிக்கொண்டோம். உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். தொடரும்.

## பிரக்ஞை: ஒரு அறிமுகம்
## பயிற்சிப்பட்டறையும் கலந்துரையாடலும்

பி. ப. 2.00 - 5.00 மணி - பயிற்சிப் பட்டறை
பிரக்ஞை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து, புரிந்து, அறிந்து கொள்வதற்கான பயிற்சிப் பட்டறை.

பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றுகின்றவர்கள் முன்கூட்டி பதிவு செய்வது விரும்பத்தக்கது என்பதுடன் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது வரும்படி கேட்கப்படுகின்றீர்கள். ஏனெனில் தாமதமாக வருகின்றவர்கள் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றுவதற்கோ அல்லது இணைத்துக் கொள்ளவதற்கோ முடியாதிருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

பயிற்சிப்பட்டறையில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் மின்னஞ்சலுக்கு முன்கூட்டியே பதிவு செய்யவும். ***meerabharathy@gmail.com***

பி. ப 6.00 - 9.00 மணி - பிரக்ஞை நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்
இடம்: 1315 Neilson Road (Community Center), Scarborough, Ontario.
(in Neilson Road & Between Mcliven & Tapscott )
திகதி: 09.06.2012 நாள் - சனிக்கிழமை
ஆர்வமுள்ள நண்பர்கள் அனைரும் கலந்து கொள்ளவும்.
நட்புடன் ஒரு வேண்டுகோள்! இந்த அழைப்பையும் தகவலையும் தங்கள் டொரொன்டோ வாழ் தமிழ் பேசும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.
நட்புடன்
மீராபாரதி

# கனடா வாழ்வில்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மிருங்கள் வைத்திருப்பவர்கள் இவ் இரு காப்புறுதி திட்டங்களில் ஏதாவது ஒன்று வைத்திருக்க வேண்டும் நகர சபைகளின் கீழ் இயங்கும் மிருக கட்டுப்பாடு சபையின் சட்ட விதிகளில் ஒன்றாகும்)

இவ் இரு காப்புறுதி திட்டங்களும் இல்லையேல் நாயின் உரிமையாளரிடமிருந்து சட்டரீதியாக அறவிடப்பட முயற்சிக்கலாம்.

ஆனால் இங்கு நாயிடம் கடி வாங்கிய ஒருவருக்கு 1995 ஆம் ஆண்டு ஒன்ராரியோ நீதிமன்றம் ஒரு மாறுபட்ட தீர்ப்பினை லோங்கரினி எதிர் சுலியானி (Longarini Vs Zuliani) என்னும் வழக்கில் வழங்கியிருந்தது.

அதாவது வாகன தரிப்பு இடத்தில் நிறுத்தியிருந்த திரு. ரொபேர்ரோ சுலியாணி (Mr. Roberto Zuliani) என்பவரது வாகனத்தினுள் இருந்த அவரது வளர்ப்பு நாய், கார் கண்ணாடி கதவு மூடப்படாமல் இருந்தமையால் அதன் அருகே நின்ற 'டேவிட் லோங்கரினி' (David Longarini) என்று சிறுவனை கடித்து காயப்படுத்தி விட்டது.

இவ்வழக்கில் வளர்ப்பு நாய் வாகனத்தில் கொண்டு போகும் போது இன்னொருவரை கடித்து காயப்படுத்தியதால் அவரின் வாகன காப்புறுதி மூலமே பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்ற தீர்ப்பு கனடாவின் சட்டத்துறை வரலாற்றில் ஒரு மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

(பொதுவாக கனடாவில் ஒவ்வொரு வருடமும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சராசரியாக நாயிடம் கடிவாங்கும் நிலைமைக்கு உட்படுகின்றனர் எனவும்



இதில் 60 பேர் சிறுவர்கள் எனவும் கனடாவின் மக்கள் சுகாதார நிறுவனம் (Public Health Agency of Canada) தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளது.)

**நாய் உரிமையாளரின் பொறுப்புகள் தொடர்பாக கனடாவின் சட்டங்கள்** (Dog Owners Liability Act - LOLA)

நாய் ஒன்றினை வளர்ப்பவர் அல்லது அதனை வெளியில் எடுத்து செல்பவர், அதனால் இன்னொரு மனிதனுக்கோ அல்லது இன்னொரு பிராணிகளுக்கோ, அல்லது எவரின் உடமைக்கும் பாதிப்பு எதுவும் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாரிய பொறுப்பு இந்த சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

முதல்முறை மட்டும் இன்னொருவரை தாக்கியது என்பது பதிவில் போனால் நட்டஈடுகள் காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து கொடுப்பதுடன் பிரச்சினை முடிந்து விடும். ஆனால் இரண்டாம் முறையும் இன்னொருவருக்கு பாதிப்பு நடந்தால் $10,000 டொலர் வரை பணத்தண்டனை ஆறுமாத கால சிறை ஆகியவற்றுடன் நகரசபையின் மிருக சேவை பிரிவினால் வளர்ப்பு நாயும் பறிமுதல் செய்யப்படும்.

# சில தகவல்கள்

1. ஸ்ரேற் பார்ம் இன்சூரன்ஸ் கம்பனியின் (STATE FARM INSURANCE COMPANY) தகவலின் படி 2011 ஆம் ஆண்டு சுமார் 3800 நாய் கடியால் பாதிக்கப்பட்ட நபர்களின் நட்டஈட்டு கோரிக்கைகள் கிடைத்து மொத்தம் 109 மில்லியன் டொலர் தொகை பணம் பகிர்ந்து வழங்கப்பட்டது என அறிவித்துள்ளனர்.

மேலும் இக்கம்பனி 2010 ஆம் ஆண்டில் கடி வாங்கிய 3500 பேரின் நட்டஈடு கோரலின் மொத்தம் 90 மில்லியன் டொலர் பகிர்ந்து வழங்கப்பட்டது என அறிவித்துள்ளனர்.

2. கனடா இன்சூரன்ஸ் தகவல் இன்ஸ்ரியூட்டின் (Insurance Information Institute of Canada) தகவலின்படி 2011 இல் கனடாவின் சகல காப்புறுதி கம்பனிகள் மொத்த கூட்டு கொடுப்பனவாக நாய் கடியால் பாதிக்கப்பட்டவருக்கு $479 மில்லியன் டொலர் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் இதேபோல் 2010 இல் $413 மில்லியன் தொகை மொத்தமாக பகிர்ந்து வழங்கப்பட்டது எனவும் அறிவித்துள்ளனர்.

3. நாய் கடியால் பாதிக்கப்பட்டவருக்கு எவ்வளவு தொகை நட்டஈடு கிடைக்கும் என்பதனை உறுதியாக குறிப்பிடுவது ஆரம்பத்தில் சிரமம் என இவ்வழக்கில் ஆஜராகி அனுபவமுள்ள வக்கீல்கள் தங்கள் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் 2008 ஆம் ஆண்டு இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு $300,000 - $350,000 வரை இழப்பீடு வழங்க வேண்டும் என ஒன்ராரியோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

4. வீடுகளுக்கு தபால் விநியோகிக்கும் ஊழியர்கள் (Canada Post Workers) ஒவ்வொரு வருடமும் சராசரி 500 பேர் என்று கடி வாங்குவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# வெகுளாமை (Calm) - 15

'கோபமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் 60 செக்கன்கள் மகிழ்ச்சியை இழக்கின்றோம்' என்று ரால்ப் வால்டோ எமேர்சனின் முதுமொழி கூறுகின்றது (For every minute you are angry you lose sixty seconds of happiness). மேலும் பெஞ்ஜமின் பிராங்லின் - கோபம் ஏதோ ஒரு காரணத்தினாலேயே ஏற்படும். ஆனால் அரிதாகத்தான் அதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கும்' என்று கூறியுள்ளார் ('Anger is never without a reason, but seldom with a good one').

பிலிப்பைன்ஸில் ஒரு உணவகத்தின் உரிமையாளர் புதுவிதமாக கோபம் அடைபவர்கள் தமது கோபத்தைத் தணித்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அழுத்தம் நீக்கும் சுவர் ஒன்றைக்கட்டி வைத்துள்ளார். கோபத்தில் உள்ள தமது வாடிக்கையாளர்கள் விரக்தியைத் தீர்த்துக் கொள்வதற்காக உணவு பரிமாறும் தட்டுக்களை எறிந்து தணித்துக் கொள்வதற்கு ஒழுங்கு செய்தார். இதற்காக பணியாளர்களுக்கு விசேட பயிற்சிகளையும் ஒழுங்கு செய்தார். மேலும் கோபம் கொள்ளும் வாடிக்கையாளர்களுடன் உரையாடல் செய்து அவர்களை அமைதிப்படுத்துவதற்காகப் பல்கலைக்கழக மாணவர்களை ஈடுபடுத்தினார். வெகுளாமையை வாடிக்கையாளரிடம் ஏற்படுத்த ஒரு உணவகத்தின் உரிமையாளர் செய்த இந்த நடவடிக்கை புதுமையானதாக இருப்பினும் மிகவும் பாராட்டப்படவேண்டிய செயற்பாடு ஆகும்.

கோபத்தைத் தணிப்பதற்கு சில மருத்துவ அணுகுமுறைகளும் வேறு வழிமுறைகளும் இருப்பினும் அடிப்படையில் கோபம் ஏற்படுவதற்கான காரணத்தை அறிய வேண்டியது அவசியம். சிறுபராயங்களில் துன்புறுத்தப்படுபவர்கள் அல்லது சரியான பராமரிப்பு இல்லாதவர்கள் அதிக கோபம் கொண்டவர்களாக மாறிவிடுகின்றார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அன்பும், ஆதரவும் சிறுவர்களுக்கு கிடைக்காமல் இருக்கும் பொழுது கோபத்தை நெறிப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளிடம் அன்பை வெளிப்படுத்துவதோடு அவர்களுடன் அதிக நேரத்தையும் செலவழிக்க வேண்டும். அத்துடன் சரியான பராமரிப்பின்றி வளரும் பிள்ளைகள் பிற்காலத்தில் கோபமடைகின்ற பொழுது வன்முறையில் ஈடுபடுகின்றார்கள். அதிக குடிப்பழக்கம் கொண்டவர்களும், போதைப் பழக்கம் கொண்டவர்களும் வெகுளாமை கொண்டு வாழ்வதில் அதிக சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள்.



நாம் உட்கொள்ளும் ஆரோக்கியமற்ற உணவுப்பொருட்களும் ஆக்கிரமிப்புத் தன்மையை ஏற்படுத்துகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இனிப்புப் பண்டங்கள், அதிக மாப்பொருள் போன்றவை இரத்தத்தில் சீனித்தன்மையைக் கூட்டி ஆக்கிரமிப்புத்தன்மையைக் கொடுத்து விடுகின்றன. சுத்திகரிக்கப்பட்ட உணவுகள் (Refined foods), தியாமின் (thiamine), குரோமியம் (chromium) போன்றவற்றைக் குறைவாகக் கொண்டிருக்கும். ஆக்கிரமிப்புத் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கும், இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைச் சீராக்கவும் தியாமின், குரோமியம் போன்றவை தேவைப்படுகின்றன. எனவே நாங்கள் உண்ணும் உணவுப்பொருட்களாலும் வெகுளாமையை ஏற்படுத்தலாம். சுத்திகரிக்கப்பட்ட உணவுகளையும், எண்ணை நிறைந்த உணவுப் பதார்த்தங்களையும் தவிர்ப்பது வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு உதவும் ஒரு நடவடிக்கையென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. யோக்கட் (Yogurt) சமிபாட்டுக்கு உதவுவதுடன் செரற்றோனின் (serotonin) அளவைக் கூட்டி அழுத்தத்தையும் குறைப்பதோடு வெகுளாமை கொண்டிருப்பதற்கும் உதவுகின்றது. சொக்கலேட்டும் (chocolate) வெகுளாமைக்கு உதவுகின்றது. அல்மென்ட்டில் (almond) உள்ள விட்டமின் B2, விட்டமின் E, மக்னீசியம், நாகம் (Zinc), விட்டமின் B என்பவை செரற்றோன் தயாரிப்பதற்கு உதவுவதன் மூலம் வெகுளாமை கொண்டிருக்க உதவுகின்றன. நாகம் எதிர்மறையான எண்ணத்தைத் தடுக்க உதவுகின்றது. விட்டமின் B12, B6 என்பவை வெகுளாமை சீராக இருக்க உதவும்.

வெகுளாமை சீராக இருப்பதற்கு தியானம், யோகா போன்ற பயிற்சிகளும் உதவுமென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் ஆக்கிரமிப்புத் தன்மையை முற்றாக நீக்கி அமைதியான மனநிலையுடன் வாழ்வதற்கு உதவுகின்றன.

திருமணமான தம்பதிகள் தங்களுக்குள் பிரச்சினைகள் தோன்றும்பொழுது எவ்வாறு ஒருவர் மற்றொருவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றார்கள் என்பதைப் பற்றிய ஆய்வுத் தகவல் (Science Daily May 21, 2012) வெளியாகியிருந்தது. பேய்லர் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கலாநிதி கெய்த் சன்போர்ட் இந்த ஆய்வினைச் செய்திருந்தார். தம்பதிகளில் ஒருவர் கோபமாக இருக்கும் பொழுது அந்தச் சமயத்தில் அவர்களின் மனநிலை வெளிப்படாது அவர்களின் திருமண உறவுநிலையே அதிகம் வெளிப்படும் என இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. பொதுவாக கோபம் அடையும் ஒருவருக்கு கவலையும் இருப்பது வழக்கம். ஒருவர் கோபத்தை வெளிப்படுத்தும் பொழுது எவ்வளவு கவலையுடன் இருக்கின்றார் என்பதை மற்றவர் புரிந்து கொள்வதில்லை என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. கோபம் இன்றி வெளிப்படும் கவலையை மற்றவர் இலகுவாகப் புரிந்து கொள்வார். கோபம் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மட்டும் ஏற்படும் விடயங்களைப் பற்றி இல்லாது குறிக்கப்பட்ட கால இடைவெளியில் அவர்களிற்கிடையில் ஏற்படும் விடயங்களில் தங்கி இருப்பதை அதிகமாகக் காண முடிந்ததாக ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது. இந்த ஆய்வு முடிவுகள் 83 பேரில் நடத்திய ஆய்வின் மூலம் தெரிவிக்கப்பட்டன. கலாநிதி சன்போர்ட் www.pairbuilder.com என்ற இணையத்தளத்தையும் உருவாக்கித் தம்பதிகளுக்கான ஆலோசனைகளையும், பயனுள்ள பல தகவல்களையும் இணையத்தளத்தில் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவர் உணவு அருந்தாது இருக்கும் பொழுதும், மன அழுத்தத்திற்கு உட்படும் பொழுதும் மூளையில் செரற்றோனின் (serotonin) அளவில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் மூளையில் கோபத்தை நெறிப்படுத்த உதவும் மூளையின் பகுதிகளில் பாதிப்பு ஏற்படுவதாக கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது (Science Daily September 15, 2011). இந்த ஆய்வின் பொழுது கோபம் அடையும் தருணத்தில் மூளையில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு கூடத்தில் மூளையைப் பரிசோதனை செய்து முடிவுகள் கண்டறியப்பட்டன. மூளையில் காணப்படும் செரற்றோனின் எனப்படும் இரசாயனப் பதார்த்தத்திற்கும், ஆக்கிரமிப்புத் தன்மைக்கும் உள்ள தொடர்பு பற்றி ஏற்கெனவே கண்டறியப்பட்டிருந்தாலும் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டின் அளவை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை இந்த ஆய்வின் மூலம் முதல் தடவையாகக்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Professional Pest Control
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997

• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders


LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# கருப்பைக் கட்டிகள் மறைய

## Healing Fibroid (uterus)

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

பெண்கள் அனைவரும் கருப்பை கட்டிகள் பற்றி (Fibroid) அறிந்திருக்க வேண்டியது அவசியம். கருப்பை கட்டிகள் என்றவுடன் உடனடியாக நினைவுக்கு வருவது அது புற்றுநோயாக இருக்குமோ என்ற சந்தேகம் தான். எந்த ஒரு சந்தேகமான கட்டியையும் சோதித்து பார்த்து அது புற்றுநோய் அல்ல என்பதை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். எனினும் இந்தக் கட்டிகளில் பெரும்பாலானவை (Fibroid) எனப்படும் சாதாரணவகை கட்டிகள் தான். இந்தக் கட்டிகள் 40 முதல் 50 வயது வரை உள்ள பெண்களுக்கே ஏற்படுகிறது. இப்போது இளம் பெண்களுக்குக் கூட இந்தக் கட்டிகள் ஏற்படுகிறது.



40 வயதில் இருக்கும் 100 பெண்களை எடுத்துக்கொண்டால் 40 பேருக்கு இந்தக் கட்டிகள் இருக்கிறது. அப்படி இருந்தாலும் இது அறிகுறிகளை ஏற்படுத்தாமல் இருப்பதால் அநேகமானோருக்கு இக்கட்டிகள் இருப்பது தெரியாமல் போகிறது.

### Fibroid கட்டி என்றால் என்ன?

கருப்பை என்பது பெண்களின் பொக்கிஷம். இந்தக் கருப்பையின் அமைப்பு அசாதாரண-மானது. சாதாரண காலத்தில் 60 முதல் 100 கிராம் எடை உள்ள இந்த பை கர்ப்ப காலத்தில் 5 கிலோ கொள்ளத்தக்கபடி வளர்ச்சியடைகிறது. அதற்குத் தக்கபடி அதன் தசை நார்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. இந்த தசைநார்களின் இடையேயும், உட்புறத்திலும், வெளிப்புறத்தி லும் ஏற்படும் முடிச்சே (Fibroid) ஆக உருமாறுகிறது. இது ஒன்றாகவும் இருக்கலாம். பலவாகவும் இருக்கலாம். கட்டிகள் இருக்கும் இடத்திற்கேற்ப தொந்தரவுகளைக் கொடுக்கும். இந்தக் கட்டிகளின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பது ஈஸ்ட்ரோன் ஹோர்மோன். இது அதிகமாக சுரக்கும் போது கட்டிகள் பெரிதாகிறது. இந்தக் ஹோர்மோன் உடலில் குறையும் போது கட்டிகள் சுருங்கத் தொடங்கும். மாதவிடாய் கோளாறு ஏற்படும்போது இதன் வளர்ச்சி அதிகமாகிறது.

### அறிகுறிகள்

இந்த Fibroid கட்டிகள் இருக்கும் எல்லா பெண்களிடத்திலும் அறிகுறிகள் தெரிவதில்லை. இவை பல அறிகுறிகளை ஏற்படுத்தலாம்.

1. மாதவிடாய் காலத்தில் அதிகம் இரத்தப் போக்கு
2. மாதவிடாய்களுக்கு இடையில் அதிக உதிரப்போக்கு ஏற்படுதல்
3. அடிவயிற்றில் ஏதோ இருப்பது போன்ற உணர்வு
4. அடிவயிறு வீங்குதல்



5. அதிகம் சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருத்தல்
6. முதுகுவலி அல்லது கால்வலி ஏற்படுதல்

கருப்பையின் உள்ளே வளரும் கட்டிகள் அளவுக்கு அதிகமான உதிரப்போக்கை ஏற்படுத்துகிறது. நீட்டிக் கொண்டிருக்கும் கட்டிகள் சிறுநீர் பையையோ அல்லது சிறுநீர் அகற்றும் குழாயையோ அழுத்தும். இதனால் சிறுநீர் பாதையில் உபாதைகள் ஏற்படும். மற்றும் கருப்பையின் பின் பகுதிகள் கட்டிகள் ஏற்பட்டால் பெருங்குடலை அழுத்தும். இதனால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. இது முதுகுத் தண்டு நரம்புகளை அழுத்தும் போது முதுகுவலி ஏற்படுகிறது.

### சிகிச்சை முறைகள்

கருப்பை கட்டிகளுக்குரிய சிகிச்சை முறைகளில் பலமுறை உள்ளன. நோயாளிக்கு கடுமையான தொந்தரவு என்று மருத்துவர் கருதும் பட்சத்தில் கருப்பையை அகற்றுவதற்குப் பரிந்துரைப்பார். இது மிக இலகுவான முறை என்றாலும் அதன் பின்பு நோயாளி பக்க விளைவுகளுக்கும் மன அழுத்தத்திற்கும் ஆளாக வேண்டிவரும். இது தவிர இப்போது Ultrasound மூலமாக கட்டிகளைக் கரைக்கும் முறைகள் உள்ளன.

மேலும் இந்தக் கட்டிகளின் வளர்ச்சியைத் தூண்டும் மேற்குறிப்பிட்ட ஹார்மோன்களை உடலில் அதிகரிக்கச் செய்யும் உணவுவகைகளை முடிந்தவரை தவிர்ப்பது சிறந்தது. உதாரணமாக சதைப்பற்றை வளர்க்கக் கூடிய உணவுகளான இறைச்சிவகைகள், பால், எண்ணெய் கலந்த உணவுகள் Vitamins அதிகமான உணவு வகைகளை நீக்குவது இந்த கட்டிகளின் வளர்ச்சிகளைக் குறைக்க உதவும்.



### யோகாசன சிகிச்சையில் முழுமையான தீர்வு

பொதுவாக யோகாசனங்கள் செய்து வரும் பெண்களுக்கு கருப்பை கட்டிகள் (Fibroid) வர சிறிதளவும் வாய்ப்பில்லை. எனினும் இத்தகைய நோயாளிகளுக்கு சில முக்கிய ஆசனங்கள், கிரியைமுறைகள், மூச்சுப் பயிற்சி வகைகளை தேர்ந்தெடுத்து சில மாதங்கள் பழகி வந்தால் இக்கட்டிகள் முற்றிலும் கரைந்து சுருங்கிவிடும்.

ஆசனங்கள்

1. விபரீதகரணி - மச்சாசனம் (மாற்று)
2. தனுராசனம் - ஹலாசனம் (மாற்று)
3. பஸ்ஸிமொத்தாசனம் - சக்ராசனம் (மாற்று)
4. உட்டியாண - பந்தம்
5. அக்னிசாரக் கிரியை

### பிராணாயாமம்

1. கபாலபாதி - மூச்சுப் பயிற்சி
2. பரமாரி

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை பழக ஆரம்பித்ததும் சிலருக்கு கடினமாக இருந்தாலும் நாளடைவில் இலகுவாகி விடும். ஒரு சில நாட்களிலேயே கட்டிகள் சுருங்குவதை பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ள முடியும். இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் பயிற்சி பெறலாம்.





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033 after 7:00pm**
**416.617.5721**


# உயிர் காக்க உதவுங்கள்

1993 ஆம் ஆண்டு 4 வயதில் கனடாவுக்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த மயூரனுக்கு கடந்த வருடம் கோடை காலத்தில் Leukemia என்ற புற்று நோய் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. பல சிகிச்சைகளின் பின்னர் Stem cells மாற்று சிகிச்சையினால் மட்டுமே குணப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மயூரனுக்கும் 34 தென் ஆசிய கனடிய நோயாளிகளுக்கும் ஏற்ற எலும்பு மச்சை கொடையாளிகளை கண்டுபிடிப்பதற்கான மற்றொரு பதிவு செய்கின்ற நிகழ்வு இலக்கம் 635 Middle Field Road என்னும் முகவரி கொண்ட கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் ஜுன் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

தென் ஆசிய நோயாளிகளுக்கு தென்னாசிய கொடையாளிகள் வழங்கினால் பொருந்தக் கூடிய சாத்தியம் அதிகமாகும். எவருக்கும் எலும்பு மச்சையை கொடையாக வழங்கக்கூடிய உடல் நலம் மிக்க 17 லிருந்து 50 வயதுவரையான ஆண்களும் பெண்களும் தேவைப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

கனஷ்கா (Kaneshca): 647.707.5146 / ஷாண் (Shan): 416.712.2216



# பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து மூன்று நாட்களுக்கு இச் ஜெபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும் இச் ஜெபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும். **“ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி”**

**ஆமென்**

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்கனா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

## GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

## ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க **ARU KRISH** ஜை

இன்றே அழையுங்கள்

**இலவச ஆலோசனைகளுக்கு**

# (416) 556-9287

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# குடும்ப வன்முறை (FAMILY VIOLENCE)

அன்றாடம் உலகெங்கும் நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் கணக்கற்றவை. அதற்குரிய காரணங்களும் எண்ணிக்கை யற்றவை. நடைபெறும் வன்செயல்கள் யாவும் குடும்பங்களிலிருந்தே முதலில் தோற்றுவாய் பெறுகின்றன என்பது சமூகவியலாளரின் கருத்தாகும். அதாவது பெற்றோர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற குற்றமிழைப்புக்கள் படிப்படியாக பிள்ளைகளின் வன்செயல்களுக்கு தூபமிடுகின்றன. உண்மையில் குடும்பங்களில் நடைபெகின்ற வன்முறைகள் பரம்பரையாக தொடர்ந்து செல்லுகின்றன என்பது பலருக்குத் தெரிவதில்லை. குடும்ப வன்முறைகள் என்னும் போது பெற்றோர்கள் பிள்ளைகளைத் தாக்குவது முதல் உறவினர்களால் பிள்ளைகள் பாதிக்கப்படுவது வரையில் பல சம்பவங்கள் அன்றாடம் நிகழ்கின்றன. குடும்ப வன்முறைகள் பல குற்றச் செயல் புரிபவர்களையும் வன்முறையாளர்களையும் சமூகத்திற்கு வழங்கி வருகின்றன.

வீடுகளில் அல்லது குடும்பங்களில் இவ்வாறான வன்செயல்கள் ஏற்படுவதற்கு காரணங்கள் எவை? இதன் தாக்கங்கள் எவ்வாறு ஏற்படும் என்பதுபற்றி அறிய சமூகவியலாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். சமூக மயமாக்குதலுக்கும் (Socialization) நெறிபிறழ்வுக்கும் (Delinquency) இடையில் உள்ள தொடர்புகள் பற்றியும் விளக்கம் பெற முயன்றுள்ளனர். நெறிபிறழ்பவர்களால் சமூகத்திற்கு பெரிய ஆபத்து நிகழ்கின்றது என்பது இவர்களது முடிவாகும். கனடிய சுகாதார அறிக்கையின்படி பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்கும் பெற்றோர்கள் உள்ள குடும்பங்களில் நெறிபிறழ்வோர் தொகை குறைவாகவே உள்ளது என்பது தெரியவந்துள்ளது.

'குடும்பமே பிள்ளைகளின் முதலாவது சமூக மயமாக்கல் நிலையம், பெற்றோர்களே முதல் மாதிரி வடிவம்' எனலாம். பெற்றோர்கள் மூலமே பிள்ளைகள் சமூகக் கட்டுப்பாடு, மற்றையவர்களை நேசித்தல், தமது நடத்தைகளைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றினை அறிந்து கொள்கின்றனர். சமூகக்கட்டுப்பாடு எழுவதற்கு முன்பே பல பிள்ளைகள் இளம்வயதிலேயே வன்செயல்களில் ஈடுபட ஆரம்பித்துவிடுகின்றனர். எனவே குடும்பத்திலிருந்து தான் இவர்கள் இதனைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. எனவே குடும்பமே குற்றச்செயல்களின் தொட்டில் (Home as the cradle of violence) என்று கூறலாம்.

ஒழுங்கீனமான குடும்பங்களிலிருந்தும் ஒற்றுமையில்லாத குடும்பங்களிலிருந்தும் பிள்ளைகள் வன்முறையாளர்களாக உருவாகின்றனர். அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வுப்படி, ஆறு மில்லியன் பிள்ளைகளும் 3 மில்லியன் குடும்பத் துணையாளர்களும் வன்செயல்களுக்கு உட்பட்டுள்ளனர். அதுவும் குறிப்பாக நாலு பெண்களில் ஒருவரும், ஏழு ஆண்களில் ஒருவரும் பாலியல் வன்முறைக்கு உட்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உலகம் எங்கும் கணக்கெடுத்தால் இத்தொகை மிக அதிகமாக நடைபெறும் குற்றச்செயல்களில் அரைவாசிக்கு மேல் குடும்ப உறுப்பினர்களாலேயே நிகழ்த்தப்பட்டுள்ளன. இதனால் குடும்பமே சமூக நிறுவனங்களில் ஆபத்தான நிலையம் என்று



சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். குடும்பத்தில் ஏற்படும் வன்செயல்களுக்கு முதற்காரணம் குடும்ப முரண்பாடுகள் (Family Conflicts) ஆகும். ஒழுங்கீனமான குடும்பங்கள் பலவற்றில் தலைமைத்துவம் என்பது சிக்கலாக உள்ளது. சில குடும்பங்களில் சொந்த நலன்கள், பிரச்சினைகள் காரணமாகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளைகள் மற்றையோரில் நம்பிக்கை அற்றவர்களாக அன்பு காட்ட முடியாதவர்களாக உருவாகின்றனர். பிள்ளைகளை நாம் சாதாரண உயிரற்ற பொருட்கள் போன்று மதிப்பிடக்கூடாது. அவர்கள் மிகவும் மென்மையானவர்கள், உணர்ச்சியுடையவர்கள் என்று கருத்தில் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு சில உரிமைகள் உள்ளன. எதிர்காலத்தின் நம்பிக்கைச்சுடர் அவர்களே தான். பல பெற்றோர்கள் இதனைத் தெரிந்து கொள்ளாமல் அவர்களை அடித்து வளர்க்க முற்படுகின்றனர். 'அடியாத மாடு படியாது', 'அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான்' போன்ற பழமொழிகள் பிள்ளைகளைத் தண்டித்து வளர்க்க வேண்டும் என்பதற்காக முன்பு உருவாகின. ஆனால் தற்கால உளவியலாளர்கள் இக்கருத்துக்களை மறுத்துள்ளார்கள். உளவியல் ரீதியில் அடித்து வளர்ப்பது என்பது தவறான அணுகு முறையாகும். கண்ணாடியில் எமது உருவத்தை நாம் பார்ப்பது போன்று நாம் எதனைச் செய்விக்கின்றோமோ பிள்ளைகளும் அதனையே செய்வார்கள். நாம் ஏசினால் அவர்களும் ஏசுவார்கள். நாம் அடித்தால் அவர்களும் அடிக்க முற்படுவார்கள். நாம் செய்கின்ற ஒவ்வொரு பிரதிபலிப்புக்களையும் அவர்களும் செய்வார்கள். எனவே நல்ல பெற்றோர்களாக, மாதிரி வடிவங்களாக (Role Model) நாம் இருந்தால் மட்டுமே எமது பிள்ளைகளும் நல்லவர்களாக உருவாகுவார்கள். குடும்ப வன்முறைகளில் முக்கிய பங்கு வகிக்கும் இன்னொரு அம்சம் குடும்பப் பிரிவினையாகும். சில வேளைகளில் தனியாக பெற்றோர்களால் வளர்க்கப்படும் பிள்ளைகளும் உள்ளனர். சிலவேளைகளில் பெற்றோர் மரணிப்பதால் அநாதரவாகக் கைவிடப்பட்ட பிள்ளைகளும் உள்ளனர். சில பெற்றோர்கள் தாம் வாழும் பொழுதே தம் பிள்ளைகளைக் கைவிடுவதால் அவர்கள் ஆதரவற்றவர்களாகின்றார்கள். ஹென்றி வார்ட் (Henry Wark Beaher) என்ற அறிஞர், 'குழந்தைக்குத் தாய் பாடும் பாடல் தொட்டிலிருந்து மரணம் வரை செல்லும்' என்கிறார். இதனால் வளர்ப்புமுறை சிறப்பாக ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதுவே வாழ்க்கைக் காலம் முழுவதும் வளமாக அமைய உதவும். பெற்றோர்கள் பிள்ளைகளைத் தாலாட்டி சீராட்டி வளர்க்கும் போது அவர்களின் நடத்தையிலும் நல்ல முன்னேற்றமேற்படும்.

பிள்ளைகள் வன்செயல்களில் ஈடுபடுதற்கு இன்னோர் காரணம் பெற்றோர்கள் ஒருவரை ஒருவர் தாக்கும் சம்பவம் ஆகும். பொதுவாக மனைவியை கணவர் தாக்கும் சம்பவம் நிகழ்ந்துவருகின்றது. முற்காலத்தில் இருந்து மனைவியை துன்புறுத்தல் (Wife Abuse) செய்வதில் கணவர்மார் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்வாறு மனைவியை கணவன் அடிப்பது அல்லது தாக்குவது சமூகத்தில் எதுவித எதிர்ப்பும் இல்லாத காலமும் இருந்தது. யாரும் இதுபற்றி கவலைப்படவும் இல்லை. 1980 இல் Murray Strauss, Richard Gelles, Suzzane ஆகியோரது ஆய்வுப்படி கணவன் மனைவியை தாக்குவது அவசியமானதாகக் கூட இருந்துள்ளது. முக்கியமாகவும் கருதப்பட்டது. ஆனால் பின்பு தோன்றிய பெண்கள் இயக்கங்களால் இது கண்டிக்கப்பட்டது. Ellis and Deke Gerdey என்போர் 1996 இல் செய்த ஆய்வுப்படி கூடுதலாக பெண்களே கணவன்மாரினால் தாக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. இவ்வாறு மனைவியை கணவன் தாக்கும் வேளையில் பிள்ளைகள் அதனை அவதானிக்கின்ற நிலையில் பிள்ளைகளும் பின்பு இவ்வாறு நடந்துகொள்ள முன்வருகின்றனர். கனடிய புள்ளி விபரப்படி 10 பெண்களில் மூன்று பேர் தாக்குதலுக்கு உட்படுகின்றனர். இவ்வாறான சம்பவம் தொடர்ச்சியாக நிகழும் வேளையில் பிள்ளைகள் வலுத்தாக்கல் உணர்வு பெறுகின்றனர். பரம்பரை ரீதியாகவும் இது தொடர வாய்ப்புள்ளது. வன்செயல் உள்ள குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் பிற்காலத்தில் பிரபல குற்றவாளிகளாக மாறியுள்ளதினை புள்ளிவிபரம் காட்டுகிறது. 1986 இல் Kalmness and Sectzer செய்த ஆய்வுப்படி பெற்றோர்கள் தாக்குவதனை பார்க்கின்ற பிள்ளைகள் பிற்காலத்தில் தாமும் தாக்கவே செய்கின்றனர் என்பதனை நிரூபித்துள்ளனர். பொதுவாக ஆண்களே பெண்களைத் தாக்குகின்றனர். சில வேளைகளில் பெண்கள் ஆண்களைத் தாக்குவதும் இடம் பெறலாம். எனவே பிள்ளைகள் தொடர்ந்து ஆண்களின் அதிகார உணர்வினைத் தாமும் பெறுகின்றனர். அதனைச் சரி என்று நியாயப்படுத்தவும் முயல்கின்றனர்.

தற்போது பெண்கள் மீதான குற்றமிழைத்தலைத் தண்டிக்க பல பெண் நிறுவனங்கள், இயக்கங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பெண்களின் சம உரிமை, நியாயமான வாழ்வுரிமை போன்றவற்றினை முன்னெடுத்துச் செல்கின்றனர். இவற்றின் ஆய்வுப்படி 40 வீதம் பிள்ளைகள் பெற்றோரின் சண்டைகளில் நெறி பிறழ்ந்து போகின்றார்கள் என்று கருத முடிகிறது. வரும் வேளையில் பிள்ளைகள் பாலிய நெறிப்பிறழ்வு (Juvenile Delin quency) நிலைக்கு உட்படுகின்றனர். களவு, போதை, வஸ்து, மதுபோதை, வீதிகளில் வாழ்தல் போன்ற பழக்கங்களுக்கு உட்படுவதுடன் வீடுகளை விட்டு வெளியேறியும் வருகின்றனர். மனநிலை பாதிக்கப்பட்ட இவர்கள் மற்றவர்கள் மீது கருணையின்றி, எதிர்காலத்தினை சூனியமாக்கி வாழ முற்பட்டு வருகின்றனர். இதற்காக பல இளங் குற்றவாளிகள் பற்றிய சட்டங்கள் எழுகின்றன.

குடும்பத்தில் உள்ள சில தகராறுகள், நெறிமுறைகள் காரணமாகவும் இவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர். முன்னர் குறிப்பிட்ட குடும்ப அமைப்பில் வருமான சூழ்நிலையும் அதனால் ஏற்படக்கூடிய பின்னடைவுகளும் பிள்ளைகளை நெறி பிறழ்வுக்குத் தூண்டுகின்றன. வருமானம் குறைந்த பெற்றோர் பொதுவாகவே பிள்ளைகளைப் பராமரிப்பது குறைவு. இவ்வாறான குடும்பத்துப் பிள்ளைகள் களவு செயல்களிலும், வீதியில் இளம் குழுக்களுடனும் சேர்ந்து செயல்படுகின்றனர். இதனை வேறு வழிகளில் ஆராயும்போது பிள்ளைகளை சரியாகக் கவனிக்கின்ற பெற்றோர்கள் மூலமும் இப்பிரச்சினை எழ வாய்ப்புண்டு. பெற்றோர்கள் இறந்து விடுதல். பெற்றோர் வாழ்ந்தும் பிள்ளைகளைக் கைவிடுதல், கல்வியறிவினை வழங்க முற்படாமை போன்ற பல சூழ்நிலைகள் பிள்ளைகளைத் தாக்குகின்றன. இவ்வாறான குடும்பங்களில் பிறந்த குழந்தைகளை பின்பு திருத்துவது



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்




Starting From The Low

# $90,000'S

# RETAIL CONDOS

## The New Westwood Square

The Shops at Westwood Square

# Grand Opening Sales Event

Westwood Square sales office
7205 Goreway Drive Mississauga
Ontario, L4T 2T9

- Wal-Mart
- Fresco
- LCBO
- Food Court
- Saloon / SPA
- Grocery store
- Banks / Institutions
- Professional Office (2nd Floor)

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave, E, #203, Toronto.

**Call: 416.321.6969**




***Special Price For HomeLife / GTA Realty Buyers.**

**Occupancy 2013**

*Independently Owned & Operated

# மெய்மறந்து இன்பக்கடலில் மிதக்க வைத்த... TVI இன் இராக சங்கமம் மாபெரும் இறுதிப்போட்டி!



கடந்த மே மாதம் 13ம் திகதி மாலை 6 மணிக்கு Agincourt Collegiate கலையரங்கில் நடைபெற்ற இராக சங்கமத்தின் இறுதிப்போட்டிக்கு செல்ல வாய்ப்புக்கிட்டியது. தொலைக்காட்சி நிறுவனம் நடத்துவதால் குறிக்கப்பட்ட நேரத்துக்கு ஆரம்பிப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் மண்டபத்தினுள் நுழைந்த பொழுது மண்டபம் ஓரளவுக்கு நிறைந்த நிலையில் போட்டியாளர்கள், நடுவர்கள், TVI கலைஞர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள் என அனைவரும் குறித்த நேரத்துக்கு முன்பதாகவே தயார் நிலையில் இருப்பதைக் கண்ணுற்ற எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சரியாக மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பித்தபொழுது இராக சங்கமத்தின் நோக்கம் பற்றி குறிப்பிடுகை யில் "நமது கலைஞர்களை நாமே வளர்த்தெடுப்போம்" என்ற உன்னத நோக்கோடு உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் வரிசையில் இராகசங்கமம் மூன்றாவது மாபெரும் போட்டியென கூறினார்கள். கடந்த வருடம் Super Star Season 1ம், இவ்வருட ஆரம்பத்தில் Super Star Season 2வும், நடனத்தாரகை Season 1 போட்டிகளும் நடைபெற்றதை அறிவேன். கடந்த ஒரு வருடமாக TVI தொலைக்காட்சியில் பல சுற்றுக்களாக நடைபெற்ற இந்நிகழ்ச்சி தற்பொழுது நிறைவுபெறும் வேளை 30 போட்டியாளர்களுடன் ஆரம்பித்து கடைந்தெடுத்து 6 சிறந்த இறுதிப் போட்டியாளர்களை நடுவர்கள் எம்முன் நிறுத்தியிருக்கின்றார்கள்! கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக்கொண்டு 15 வயதிற்கு உட்பட்ட இளம் பாடகர்களுக்கான போட்டி என்பதால் போட்டியாளர்களிடமிருந்து அதி உன்னத திறமைகளை எதிர்பார்த்து நான் இந்நிகழ்ச்சிக்குச் செல்லவில்லை. எனினும் சிறந்த பாடகர்கள் உருவாகுவதற்கு அல்லது இனங்காண்பதற்கான நிகழ்ச்சியாகவே எதிர்பார்த்திருந்தேன். அவ்வப்பொழுது தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சியை பார்த்தமையினால் தூண்டப்பட்டே இந்நிகழ்ச்சியைப்பார்க்க சென்றிருந்தேன். எமது இசையின் அம்சங்களாகவும் வெவ்வேறு இசை வடிவங்களாகவும் உள்வாங்கப்பட்டிருக்கும் பண் இசை, திருப்புகழ், தேவாரம், திருவாசகம், திருக்குறள், தமிழிசை போன்றவற்றில் தமிழ் தனித்துவமான அழகும் ஆழமும் நிறைந்துள்ளதென்பதும், இதை போட்டியில் சேர்ப்பதன் மூலம் தமிழ் உச்சரிப்பு, அவற்றைக் கையாளும் முறை, ஒவ்வொருசொற்கள் எழுப்பும் ஒலி அதன் அர்த்தங்களையும், பாவங்களையும் வெளிக் கொண்டுவருதல் என்பன போட்டியின் குறிக்கோள்களில் சிலவாகுமென குறிப்பிட்டிருந்தார்கள். இறுதிப்போட்டி இரு சுற்றுக்களாக நடைபெறுமெனவும் முதலாவது சுற்று சினிமாப்பாடல், இரண்டாவது சுற்று கர்நாடக சங்கீத பாடலா க இருக்குமென தெரிவிக்கப்பட்டது. முதலில் 6 இறுதிப் போட்டியாளர்களும், நடுவர்களும் முதல் சுற்றுக்காக மேடையில் அறிமுகப்படுத்தப் பட்டார்கள். சினிமா பாடல் சுற்றில் தாரணி சாந்தபவன் - 'கண்ணா வருவாயா', சாகித்தியா சிறீரஞ்சன் - 'கண்கள் எங்கே', அமுதீசர் சச்சிதானந்தன் - 'முல்லை மலர் மேலே', சப்தவி பாஸ்கரன் - 'இதழில் கதை எழுதும்', நீர்ஜா ஸ்கந்தராஜா – 'வசந்தமுல்லை போலே', ஐஸ்வர்யா சந்திரபாலா – 'தென்றல் வந்து என்னை' பாடல்களைப் பாடினார்கள். சபையில் இருந்தோர் மிகவும் உற்சாகமாக கரவொலியெழுப்பி போட்டியாளர்களையும் அணிசேர் கலைஞர்களையும் உற்சாகப்படுத்தினர். நடுவர்கள் திருமதி. சீலா பரத், திரு.நெய்வேலி சந்தான கோபாலன், திரு. கார்த்திக் ராமலிங்கம் ஆகியோர் தமது கருத்துக்களை கூறியதோடு எதிர்கால இசைப்பயணத்திற்கான ஊக்கத்தையும் கொடுத்தனர். சினிமாப்பாடல்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு இராகங்களில் அமைந்த பாடல்களைப் பாடிய பொழுது எம்மையறியாமலே தாளம் போட வைத்து விட்டார்கள் போட்டியாளர்கள்! முறையாக சங்கீதம் பயிலும் மாணவர்களை அடையா-ளம் காண்பது மட்டுமல்லாது அவர்களுக்குள் புதைந்திருக்கும் திறமைகள் இனம் காட்டப்படுகின்றன. அத்துடன் இந்த இசைப் பயணத்தில் கடந்த ஒரு வருடமாக பயணித்தவர்களது தனித்துவமான ஆக்கத் திறன், ஆற்றல் கொண்ட இளம்படைப்பாளிகளாக வருவார்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளவைத்து விட்டது. தொடர்ந்து இரண்டாவது சுற்று கர்நாடக சங்கீதப் பாடல்கள் போட்டி ஆரம்பித்த பொழுது நடுவர்களாக திருமதி. சீலா பரத், கலாநிதி அனந்த நாராயணன், மற்றும் சிறப்பு நடுவராக நெய்வேலி திரு. சந்தான கோபாலன் அவர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். போட்டி ஆரம்பமாகியதும் சபையில் மிக அமைதி நிலவ ஐஸ்வர்யா பந்துவராலி இராகத்திலும், அமுதீசர் பகுதாரி இராகத்திலும், தாரணி தோடி இராகத்திலும், நீர்ஜா லதாங்கி இராகத்திலும், சாகித்தியா பூர்வகல்யாணி இராகத்திலும், சப்தவி கரகரப்பிரியா இராகத்திலும் இசைமழைபெ-ாழிய, சபையோர் அதற்கு ஏற்றால் போல் தாளம் போட பார்வையாளர்கள் அனைவருக்கும் தேனையும் பாலையும் கலந்து இசையாக செவிகளில் பரவவிட்டமை போன்றதோர் உணர்வைத் தந்தது. எமது கவலைகள் மறந்து இந்த இளம்கலைஞர்களது உயர்தர சங்கீதத்தைக்கேட்குங்கால் நாம் மெய்மறந்து இன்பக்கடலில் முழ்கடிக்கப்பட்டோம். சங்கீதம் பயிலுவதினால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியடையுமென முன்னோர் கூறக் கேட்டிருக்கின்றோம்.

**-R. பொன்னம்பலம்-**

ஆனால் எமக்கு அருந்த அருந்த தாகம் தீராத தெவிட்டாத இனிமை தரும் வற்றாத ஓர் பேரிசையாக செவிகளில் இராக சங்கமம் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. தொடர்ந்து சிறப்பு நடுவராக இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பிரபல சங்கீத வித்துவான் திரு. நெய்வேலி சந்தான கோபாலன் அவர்களது கச்சேரி மேலும் எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தென்னிந்தியாவுக்கு வெளியே நிகழ்த்தப்பட்ட மிகப்பெரும் இசைப்போட்டி யாக அல்ல இசைக்கச்சேரியாக வழங்கிய இராகசங்கமத்தில் பங்குபற்றிய அனைத்து போட்டியாளர்களும் வெற்றியாளர்களே! எனினும் முறையே முதலாவது இடத்தை ஐஸ்வர்யா சந்திரபாலாவும், இராண்டாவது இடத்தை சப்தவி பாஸ்கரனும் மூன்றாவது இடத்தை தாரணி சாந்தபவனும், அமுதீசர் சச்சிதானந்தனும் பெற்றுக்கொண்டனர். முடிவுகள் நடுவர்களதும், சபையோரது வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டிருந்தது. அத்துடன் Toronto வின் முன்னணி கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் பலர் சபையில் இருந்ததையும் அவர்களும் பார்வைகள் போன்றே வாக்களித்திருந்த மையை அவதானிக்க கூடியதாகவிருந்தது. நிறைவாக நிகழ்ச்சியில் சில குறைபாடுகள் இருப்பினும், "நமது கலைஞர்களை நாமே வளர்தெடுப்போம்" என்ற உன்னத நோக்கோடு TVI யால் தயாரித்து நேரடியாக வழங்கப்பட்ட நிகழ்வுக்காக கனடியத் தமிழர் பெருமை கொள்ளல் வேண்டும். ஏனெனில் சிறந்த இளம் கலைஞர்கள் கனடாவில்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்





பொழுதுபோக்கு இது
உங்களுக்கு உரியது
இப்பொழுது உங்களுக்கு விருப்பமான அலைவரிசைகளை றோஜேர்ஸ் டிஜிட்டல் அடிப்படை டிவி பொதி மூலம் பெருந்தொகையான தமிழ் அலைவரிசைகளில் இருந்து தெரிவு செய்யுங்கள்.
VIJAY
tamil one
JAYA TV
tvi
CBN
ATN CRICKET
NDTV 24x7
HEADLINES TODAY
இத்துடன் மேலும் பல அலைவரிசைகள் உங்கள் தெரிவுக்காகவே காத்திருக்கின்றன. கட்டணங்கள் மாற்றமடையலாம்
இப்பொழுது ஆரம்பிக்கிறது
$33.42/மாதாந்தம்1
சேமியுங்கள் $462 2 வருட காலத்திற்கு
(உள்ளடங்கலாக $23.32/மாதாந்தம் டிஜிட்டல் அடிப்படை டிவி சாந்தா, ஒரு தமிழ் அலைவரிசை $10.10 எல்லா மாதாந்தக் கட்டணங்களும் உட்பட, அத்துடன் நியமத்தர டிஜிட்டல் பெட்டி வாடகை)
இன்றே மாற்றுங்கள் அத்துடன் சேமியுங்கள்!
அழையுங்கள் 1 877 426-6399 இணையத்தள விலாசம் www.rogers.com/MyTamilEntertainment
றோஜேர்ஸ் விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்
action ENTERTAIN SPORTS ENTERTAIN MOVIES
புதிய வெளியீடுகள் LIVE வியப்பில் ஆழ்த்தும் LIVE
ANYPLACE STUNNING ANYPLACE சௌகரியமான இதயம் கவர்ந்த EXCITING
Creating World-Leading Internet Experiences.
ROGERS
Offer available to new Rogers Digital TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. Regular monthly rates apply after promotional period. 1 Includes monthly Digital Service Fee of $2.99, standard definition digital box rental of $4.49, $23.32/mo. Digital Basic TV subscription, an eligible Tamil channel of $10.10/mo. and where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription 2 Savings based on $19.27/mo. (Digital Basic TV monthly discount including Local Programming Improvement Fund) for 24 months. © 2012

# மங்கலதேவி - கண்ணகி கோட்டம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

தேக்கடியில் இருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில், தமிழ்நாடு - கேரளா எல்லைப் பகுதியில், மேற்கு தொடர்ச்சி மலையின் உச்சியில் 5000 மீட்டர் உயரத்தில் இருக்கிறது, சிலப்பதிகார நாயகி யான கண்ணகியின் கோவில். கேரளாவில் மங்கல தேவி கோவில் என்று இதைச் சொல்கிறார்கள். மதுரையை எரித்த பிறகு நடந்தே இங்கு வந்த கண்ணகி, இங்கிருந்துதான் தேவலோகம் சென்றதாக வரலாறு. அவள் மறைந்த இடத்தில் எழுப்பப்பட்ட இந்தக் கோயில் 2000 வருடப் பழமையானது.

சோழநாட்டின் வணிகரான மாசாத்துவான் மகளாகப் பிறந்தவள் கண்ணகி. அவளது கணவன் கோவலன். நாட்டிய மங்கையான மாதவி மீது கோவலனுக்கு ஆசை ஏற்பட்டு, கண்ணகியைப் பிரிந்து சென்றான். மாதவியுடன் கோவலான் இருந்த காலங்களில் பொன், பொருள் உட்பட அனைத்து சொத்துக்களையும் இழந்தான். அதன்பிறகு மாதவியிடமிருந்து மனவேறுபாட்டால் பிரிந்த கோவலன்,



## கேரளா சுற்றுலா இடங்கள் - 11

மீண்டும் கண்ணகியுடன் சேர்ந்தான். இனிமேல் ஒழுங்காக இருக்க வேண்டும், வியாபாரத்தை நன்றாக கவனிக்க வேண்டும் என முடிவு செய்த கோவலன், சமணப் பெண் துறவி கவுந்தியடிகள் துணையுடன் கண்ணகியை அழைத்துக்கொண்டு பாண்டிய நாட்டுத் தலைநகரமான மதுரை வந்தான். மதுரையில் கோவலன் வாணிபம் செய்வதற்காகக் கண்ணகியின் ஒரு கால் சிலம்பை விற்கச் செல்கிறான். அப்போது, அரசியின் கால் சிலம்பு திருடுபோய், கள்வனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு சம்பவங்களும் இணைந்து, சிலம்பு திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனால் மரண தண்டனை அளித்துக் கொல்லப்படுகிறான், கோவலன். இச்செய்தி அறிந்த கண்ணகி அரண்மனைக்குச் சென்று தன்னிடமுள்ள மற்றொரு கால் சிலம்பை உடைத்துக் காண்பித்துத் தன் கணவன் குற்றமற்றவன் என நிரூபிக்கிறாள். அறநெறி கொன்ற பாண்டிய மன்னனையும், துணை நின்ற தீயோரையும், அவர்கள் வாழ்ந்த மதுரை மாநகரையும் தன் கற்பின் சக்தியால் எரிந்து போகச் சாபமிடுகிறாள். அவள் சாபத்தால் மதுரை மாநகரமே தீப்பற்றி எரிந்து சாம்பலானது. மதுரையை எரித்த கண்ணகி அங்கிருந்து வைகை ஆற்றின் தென்கரை வழியாக, 14 நாட்கள் நடந்து சென்று சேரநாட்டு எல்லையான விண்ணோத்திப் பாறை என்ற, இப்பொழுது கண்ணகி கோயில் இருக்கும் இடத்துக்கு வந்தடை கிறாள்.

இப்பகுதியில் வசித்து வந்த குன்றக்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

# உருமி - திரை விமர்சனம்



- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

உருமி என்றால் ஒரு தாளக்கருவி என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'கேட்டுக் கோடி உருமி மேளம், போட்டுக்கோடி கோப தாளம்' என்ற சிவாஜி பட பாட்டு புகழ் காரணம். ஆனால், இந்தப் படம் உருமி என்பது ஒரு உறைவாள் என்கிறது. இந்தியாவிற்குள் வியாபாரம் செய்ய வந்து, நாட்டையே பிடிக்க முயற்சித்த, ஒரு ஆரம்ப கால வெள்ளைக்காரரை, இரண்டு நண்பர்கள் ஒரு உறுமி துணையுடன் எதிர்கொண்டு விரட்டி அடித்த கதைதான் இந்தப் படம். இந்தியாவை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார் என்று பள்ளிப் பாடப் புத்தகங்களில் அறிமுகப்படுத்தப்படும் வாஸ்கோடா காமாவின். நல்லவர், வல்லவர், நிறைய நாடுகளை கஷ்டப்பட்டு கண்டுபிடித்தவர்... என்ற பிம்பத்தையெல்லாம் தலைகீழாகப் புரட்டிப் போடுகிறது உருமி!

பிருதிவிராஜும் பிரபுதேவாவும் நண்பர்கள். பிரதிவிராஜுக்கு சொந்தமாக பப் ஒன்று உள்ளது. ஏராளம் கடனும் உள்ளது. கடனில் இருந்து மீள, கேரளாவில் இருக்கும் ஒரு சொந்த இடத்தை விற்க முடிவு செய்கின்றார். அதனை வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு கார்ப்பரேட் நிறுவனம் விலைக்கு வாங்க வருகிறது. இதற்காக, அந்த இடம் உள்ள கேரளாவில் உள்ள கண்ணாடிக்காடு என்ற இடத்திற்கு வருகிறார், பிரதிவிராஜ். குறிப்பிட்ட இடத்தில் வித்யாபாலன் அப்பகுதி மக்களுக்காக பள்ளி ஒன்றை நடத்தி வருகிறார். "இடத்தை விற்க வேண்டுமெனில் இங்குள்ள ஆதிவாசி மக்களுக்கு பதில் சொல்லிவிட்டு விற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார், வித்யாபாலன்.

ஆதிவாசிகளிடம் செல்கிறார் பிரிதிவிராஜ். அங்கே குகைகால மனிதனாக வரும் ஆர்யா, அந்த இடத்துக்கும் பிரிதிவிராஜுக்கும் எப்படி சம்பந்தம் வந்தது? பிரதிவிராஜின் மூதாதையர்கள் யார்? அந்த இடத்தின் பெருமை என்ன? என்பதை அவருக்கு விளக்குகிறார். அப்போது துவங்குகிறது 15ஆம் நூற்றாண்டுக் கதை.

கி.பி.1498ஆம் ஆண்டு... தன் சகாக்களுடன் நான்கு கப்பல்களில் ஆப்பிரிக்காவில் கால் பதிக்கும் வாஸ்கோடகாமா, அவர்களை வென்றபிறகு அங்கேயிருந்த குஜராத்தி மாலுமியை சிறைபிடித்து காலிகட் நோக்கி பயணம் ஆகிறான். கேரளாவில் இருக்கும் மிளகைக் கண்டு ஆச்சரியம் அடைகிறான். அதற்காக மூன்று மடங்கு விலை தர முன் வந்தும் கேரள ராஜா செம்பூதிரி வணிகத்துக்கு மறுக்கிறார். ஆனால், தனது நாட்டுக்கு திரும்பிச் சென்ற வாஸ்கோடகாமாவுக்கு மிளகின் மேல் கொண்ட காதலை மறக்க முடியவில்லை. 1502இல் மீண்டும் பெரும் படையோடு கேரளாவுக்கு வருகிறான். வரும் வழியில் நானூறு முஸ்லீம்களோடு மெக்காவுக்கு சென்று வரும் நான்கு கப்பல்களை சிறைபிடித்து வைத்துக்கொள்கிறான். இதை கேள்விப்பட்ட ராஜா கொத்துவால் (ஆர்யா), ஒரு நம்பூதிரியை தனது எட்டு வயதான மகனோடு சமாதானம் பேச தூதனுப்புகிறான். ஆனால், அந்த நம்பூதிரியை கொன்று விடுகிறான் வாஸ்கோட காமா. கோபம் கொண்ட கொத்துவால் கப்பலில் புகுந்து வாஸ்கோட காமாவைத் தாக்குகிறான். வாஸ்கோடகாமா தப்பித்துவிட கொத்துவால் கொல்லப்படுகிறான். கொத்துவாலின் மகன் கேளு கடலில் குதித்து தப்பிக்கிறான். கப்பல் தீ வைக்கப்பட்டு எல்லோரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் ஒரு

தொடர்ச்சி 23ஆம் பக்கம்




Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)


* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

# உருமி...

பெண்மணி அவர்களிடம் உள்ள நகைகளை சிறுவனாக இருக்கும் கேளு கையில் கொடுத்து நாட்டை காப்பாற்றும் படி சொல்லிவிட்டு இறந்து போகிறார்.

அனாதையாக நிற்கும் சிறுவன் கேளு (பிரதிவிராஜ்), சிறு வயது பிரபுதேவாவின் வீட்டில் வளர்கிறான். காலச்சக்கரம் சுழல, 22 வருடங்களுக்கு பிறகு வீரனாக வளர்ந்து நிற்கிறார் கேளு (பிரிதிவிராஜ்). அந்தப் பெண் தந்த நகைகளை தனது முஸ்லிம் நண்பனுடன் (பிரபுதேவா) சேர்ந்து உருக்கி, வாஸ்கோடகாமாவை கொல்ல ஆயுதம் செய்கிறான். அதுதான் உருமி.

அப்போது வாஸ்கோடகாமாவும் அவரது மகனும் சேரநாட்டில் அட்டகாசம் செய்து வருகின்றனர். சிரக்கல் மன்னனின் மகளான நித்யாமேனனை வாஸ்கோடகாமாவின் கூட்டம் சுற்றி வளைக்க, பிரிதிவிராஜும் பிரபுதேவாவும் அவளைக் காப்பாற்றுகிறார் கள். வாஸ்கோடகாமா கூட்டத்தை நாட்டை விட்டு விரட்டும் முயற்சியில் சிரக்கல் மன்னனும் இறங்குகிறார். ஆனால், அவரது அமைச்சராக வரும் தளபதி சேனாச்சேரியும் மன்னின் மகனான பானுவிக்கிரமனும் வாஸ்கோடகாமாவிற்கு ரகசியமாக உதவி செய்கின்றனர். தன் மகளை கைப்பற்ற நினைத்த வாஸ்கோடகாமாவின் மகனை சிறைப்பிடித்து கொண்டு வரும் பொறுப்பை பிரிதிவராஜிடம் கொடுக்கிறார் சிரக்கல் மன்னன். கூடவே அவரது படையினரில் 5 பேரையும் அனுப்புகிறார். பிரிதிவிராஜும் பிரபுதேவாவும் தங்களது திறமையால் வாஸ்கோடகாமாவின் மகனை சிறைபிடித்து வருகின்றனர். கூட வந்தோர் அரக்கலில் இருக்கும் முஸ்லிம் பெண்களான ஜெனிலியா கூட்டத்தை சிறைபிடித்து வருகின்றனர். பிரிதிவிராஜின் திறமையை பாராட்டும் அரசர், அவருக்கும் பிரபுதேவாவிற்கும் தளபதி பொறுப்பை அளித்து வாஸ்கோடகாமாவை அழிக்க சொல்கிறார். இதனிடையே நித்யாமேனனுக்கும் பிரபுதேவாவிற்கும் காதல் மலர்கிறது. பிரிதிவிராஜிற்கும் ஜெனிலியாவிற்கும் காதல் மலர்கிறது.

சிரக்கல் அரசனின் மகனும் அமைச்சனும் செய்கின்ற சதியால் வாஸ்கோடகாமாவின் மகன் தப்பிச் செல்கிறான். சிரக்கல் மன்னன் கொல்லப்படுகிறார். அரசனின் ஆதரவற்று இருக்கும் பிரிதிவிராஜும் பிரபுதேவாவும் வாஸ்கோடகாமா கூட்டத்தை எப்படி விரட்டி அடித்தார்கள் என்பதுதான் மீதிக் கதை.



ஆர்யா, பிரபுதேவா, பிருத்விராஜ், ஜெனி லியா, நித்யாமேனன், வித்யாபாலன், தபு என்று ஏகப்பட்ட நட்சத்திரப் பட்டாளங்கள். சேதிராயன் மகன் கேளுராயனாக வரும் பிருதிவிராஜ்தான் நாயகன். வீரனுக்கேற்ற உடல்வாகு, தேர்ந்த போர் பயிற்சி என நன்றாகவே நடித்திருக்கிறார். நண்பன் வாலி யாக வரும் பிரபுதேவா சில இடங்களில் சிரிப்பு காட்டினாலும், கதையோட்டத்தில் தன் பங்கை திறம்பட செய்திருக்கிறார். அரக்கல் ஆயிஷாவாக வருகிறார் ஜெனிலியா. வழக்கமாக லூஸுப் பெண்ணாக வரும் ஜெனிலியா, இதில் ஆக்ரோஷமாக வாள் வீசி சண்டை போடுகிறார். களறியையும் அநாசயமாக செய்கிறார். சிரக்கல் பாலாவாக வரும் நித்யா மேனனும் தன் பங்கை சிறப்பாக செய்திருக்கிறார். சேரநாட்டு தளபதி சேதிராயனாக வரும் ஆர்யா, நடிப்பிலும் வீரத்திலும் மிரட்டி இருக்கிறார். குகை கால மனிதன் தண்டப்பனாக வரும் ஆர்யாவின் சங்கத் தமிழ் இனிக்கிறது. அரவாணி அமைச்சர் சேனாச்சேரியாக வரும் ஜெகதீஷ் ஸ்ரீகுமாரின் நடிப்பில் வில்லனுக்கேற்ற நரித்தனம். வாஸ்கோட காமாவாக வரும் ராபினை விட, அவரது மகன் எஸ்தாலியோ காமாவாக வரும் அலெக்ஸின் நடிப்பு அசத்தல்.

கதை, திரைக்கதை, வசனம்: சங்கர் ராமகிருஷ்ணன். வாஸ்கோட காமா, மூன்று முறை இந்தியா வந்துசென்ற உண்மை நிகழ்வுகளை வைத்துக்கொண்டு கதை பின்னியிருக்கிறார். இவருடன் சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு, தீபக் தேவின் இசை, ஸ்ரீகர் பிரசாத்தின் நேர்த்தியான படத்தொகுப்பு அனைத்தும் இணைந்து 15ஆம் நூற்றாண்டுக்கே நம்மை அழைத்துச் செல்கிறது. வைரமுத்துவின் வரிகளில் பாடல்கள் நிறைவாக இருக்கின்றன. சந்தோஷ் சிவன் கேமராவிற்கு மட்டும் எங்கிருந்துதான் இப்படிப்பட்ட காட்சிகள் கிடைக்கிறதோ. ஒவ்வொரு பிரேமும் மனதை அள்ளுகிறது. பசுமை, வானம், தண்ணீர், மலை எல்லாவற்றையும் கூடுதல் அழகோடு காட்டுகிறது. வித்யாபாலன் வரும் ஒரு பாடலில் ஒளிப்பதிவு விளையாடுகிறது. இயக்கத்தில் சந்தோஷ்சிவன், பொறுப்பாக செயல்பட்டிருக்கிறார். ஒவ்வொரு காட்சியையும் செதுக்கி எடுத்திருக்கிறார்.

உருமி - பார்க்கலாம்!



## BASEMENT RENT

### KENNEDY & EGLINTON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Sri Lankan lady preferred. Avail. immediately.
416.495.1253 / 647.706.5256

### MARKHAM & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

### MARKHAM & SHEPPARD
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6278

### WARDEN & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 15, 2012.
3 Bedroom also avail in main floor.
தொடர்புகளுக்கு: 416.302.9022

### MARKHAM & STEELES
2 Bedroom bsmt for rent. Sep. entrance,parking, laundry. Close to TTC, YRT, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.9509

### MARKHAM & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.2535

### MARKHAM & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. July 01, 2012.
905.201.6043 / 416.725.3665

### LAWRENCE & ORTONPARK
தனிவழியுடன் கூடிய Bsmt இல் சகல வசதிகளுடனும் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
647.928.0667 / 416.701.0667

### MARKHAM & DENISON
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to plaza, Highschool, elementary school. தொடர்புகளுக்கு:
416.728.8552 / 905.201.8552

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt for rent.Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.624.6290 / 416.278.1132

### MARKHAM & SHEPPARED
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, Spicyland. Avail. Anytime. One Room also available.
தொடர்புகளுக்கு: 416.754.7172

### MCCOWAN & 14 AVE.
Newly done 2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, living room, dining room, parking, laundry. Closet to YRT, mall. Avail. June 01, 2012.
One Room also avail. தொடர்புகளுக்கு:
416.845.4568 / 905.946.8843

### MORNINGSIDE & SHEPPARD
1 Bedroom walk-out bsmt for rent. Close to all facilities. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.946.5167 / 416.281.2509 / 416.473.7518

### KENNEDY & FINCH
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, tamil stores, temple, Grace Hospital, school. Avail. immediately.
416.230.7696 / 647.966.8612

### KENNEDY & FINCH
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temle. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.2796

### MORNINGSIDE & OLDFINCH
3 bedroom + 2 washroom - $1200.
2 bedroom - $900. Bachlor apt. - $550.
Sept. entrance, laundry, cable. Close to Centennial college U of T.
தொடர்புகளுக்கு: 416.722.3450

### MORNINGSIDE & NIGHTSTAR
1 Bedroom bsmt for rent. Sep. entrance, full washroom, kitchen. Close to TTC (116 & 133), school. Couple preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.464.4132 (After 5:00pm)

### MARKHAM & ELSON
Newly done 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.9912

### MORNINGSIDE & STAINS
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.880.8585

### MORNINGSIDE & SHEPPARD
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

### MARKHAM / STEELES / STAINS RD
2 Bedroom, sep. entrance. School, TTC bus very close. Cable, parking, internet included. Walmart, nofrills, Tamil stores எல்லாம் மிக அருகாமையில் உள்ளன.
Available June 15, 2012.
416.554.6557 / 416.299.7794

### BRIMLEY & STLEELES
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.701.8681 / 647.947.9172

### MCCOWAN & DENISON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314

### MCCOWAN & ELLESMERE
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Minutes to Scarborough Town Centre, Hwy 401, 2 - 24-hour bus routes. Please no smoking or pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.9918

### BELLAMY & EGLINTON
2 Bedroom bsmt for rent. 3 Rooms also avail. Close to all facilities. Avail. immediately. 416.261.4130 / 416.278.4133 / 416.286.0203

### OASIS & SEASONS
2 bedroom walkout bsmt with separate entrance for rent in Scarborough. Walk to school, TTC & park. Close to shopping mall, Highway 401&407. Separate laundry room, New paint, one outdoor parking. Available Immediately.
Call Kenga @ 416.318.0171
email to Kengak@Capitalink.ca

### NEILSON & FINCH
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

### MIDLAND & KINGSTON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

### MCCOWAN & ELSON
2 Bedroom apt with washroom & kitchen, sep. entrance. Walking distance to Amadala Public School. Close to Elson street.
905.201.6670 / 647.962.1492

### MIDDLEFIELD & DENISON
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All utilities, parking. Close to TTC, plaza & school. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.817.9994

### KENNEDY & FINCH
2 Bedroom bsmt apt. for rent with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. July 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.779.3411

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to bus (24 hrs), Sobey's, Wal-mart. Avail. July 01, 2012.
416.724.9125/647.895.4336

### MCCOWAN & STEELES
சகல வசதிகளுடன் கூடிய 2 Bedroom bsmt வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to TTC, school.
தொடர்புகளுக்கு: 416.919.6196

### BIRCHMOUNT & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Asking $1100. Avail. immediately.
647.716.2951 / 416.754.6713

### MORNINGSIDE & SHEPPARD
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, mall, tamil stores. Avail. immediately.
416.724.9125 / 647.895.4336

### MORNINGSIDE & LAWRENCE
1 Large Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.994.7849

### BIRCHMOUNT & MCNICOLL
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.783.4850 / 905.294.2674
416.293.6211

### WESTNEY & ROSELAND
2 Bedroom walk-out bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
647.898.6474 / 647.889.3217

### MARKHAM & 14TH AVE.
1 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.894.9122
201 - 1 East Vale Dr.

### SHEPPARD & NEILSON
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2012.
647.857.8011 / 416.284.4717

### MIDDLEFIELD & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. TTC. Avail. July 01, 2012. தொடர்புகளுக்கு:
905.201.9901 / 416.648.1987

### MARKHAM & STEELES
1 Bedroom bsmt for rent. Close to all facilities. TTC, YRT. Avail. immediately. No pets. தொடர்புகளுக்கு:
647.701.3316 / 905.472.1370

### MARKHAM & HIGHGLEN
Newly finished bsmt at Middlefield & Highglen. 2 Bedrooms, 1 washroom, kitchen, laundry, Sep. entrance. All necessities within walking distance: high school, public school, mall, banks.
647.287.2807 / 905.554.1931

### BELLAMY & EGLINTON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.269.0545

### WARDEN & ST.CLAIR
2 Bedroom, 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
647.693.3107/ 416.637.2277

### MIDDLEFIELD & DENISON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. immediately.
905.910.9926 / 647.885.1429

### MEADOWVALE & KINGSTON
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

## BASEMENT RENT

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.648.0257

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, living room, kitchen. Close to TTC, shopping, winston churchill. Avail. Anytime.
416.551.4419 / 289.244.8555

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & Tamil stores. Avail. immediately.
905.471.8615 / 416.951.3457

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. 3 bedroom apt. for rent - upper level. Close to TTC, mall. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred.
905.599.1622 / 416.939.8656

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.931.3444

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom in a bsmt available $325 inclu. utilities. Sep. entrance.
தொடர்புகளுக்கு: 416.890.5267

## ROOM RENT

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc.
தொடர்புகளுக்கு: 647.981.3771

**MARKHAM & MCNICOLL**
2 Bedroom for rent in a main floor. Parking. Close to all facilities. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.837.9441

**WARDEN & FINCH**
2 Bedroom condo வில் 1 bedroom வாடகைக்கு உள்ளது. Sep. washroom, parking. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.623.9121

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

## ROOM RENT

**MCCOWAN & SHEPPARD**
1 Bedroom for rent. parking, laundry. Close to TTC, Scarborough Town Center. Avail. immediately.
647.628.6494 / 647.350.3956

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Internet. Walmart, TTC, YRT. Avail. immediately. Working women or student preferred.
416.722.5631 / 905.472.8212

**BSMT / ROOMS FOR RENT**
**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. avail. immediately. Close to TTC, mall, centennial college.
647.706.4881 / 416.439.4076

**MCCOWAN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall. Avail. immediately. Students or வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.929.0539

**MIDDLEFIELD & DENISON**
Rooms for rent. Parking, internet. விரும்பினால் உணவும் கொடுக்கப்படும். Furniture also. Avail.immediately. தொடர்புகளுக்கு:
905.201.9901 / 416.648.1987

**MORNINGSIDE & NEILSON**
1 Master room for rent. Washroom. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.210.4292

**KEELE & FINCH**
Furnished room for rent in condo. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.648.1679

**KEELE & RUTHERFORD**
One Master bedroom with washroom. 1 Bedroom also avail. Close to all facilities. Avail. immediately. Ladies or young couple preferred.
647.389.9193 / 905.832.2203

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.8999

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom main floor for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
416.291.1752 / 416.460.2549

**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.282.1095

**MCCOWAN & ELSON**
4 bedroom House for rent. parking, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

## CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**
2 bedroom Condo.வில் 1 bedroom வாடகைக்கு உண்டு. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.896.8388

## CONDO. FOR SALE

**MIDLAND & LAWRENCE**
2 Bedroom + 2 washroom condo. for sale. Close to RT, TTC, mall. Sell after July 10, 2012.
647.300.3535 / 647.924.6679

**WARDEN & FINCH**
2 Bedroom condo. for sale. Close to all facilities. Avail. August 31, 2012.
647.856.7248 / 416.871.5260

**KENNEDY & EGLINTON**
2 Bedroom + den. condo. for sale. Close to all facilities. Avail. August 01, 2012.
289.232.3119 / 647.201.3924

## HOUSE FOR LEASE

**MCCOWAN & STEELES**
3 Bedroom + 3washroom house for lease. Close to TTC, mall, school.
416.438.5085 / 647.628.6236

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

## JOB JOB JOB

**MIDDLEFIELD & FINCH**
வயோதிபப் பெண்மணி ஒருவரை பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.274.9726

### HANDYMAN

Renovation, repairs & paint.
போன்ற வேலைகளுக்கு
அழையுங்கள்: 647.998.3535

**Experienced Hardwood installer**
Monday - Friday - 8.00am - 6.00pm. Stairs maker also wanted in factory.
தொடர்புகளுக்கு: 416.613.1919

**B.K HOME RENOVATION**
Bsmt, flooring, washroom, painting, kitchen, plumping, tiling போன்ற வேலைகளுக்கு அழையுங்கள். Free estimate.
Basgar: 416.712.8949

**YONGE & YORKMILLS**
Sandwich maker & chef in the kitchen. Part-time, full-time.
தொடர்புகளுக்கு: 416.823.3849

### சமையல் வல்லுனர் தேவை

இலங்கை இந்திய உணவு வகைகள் தயாரிக்க கூடிய சமையல்காரர் தேவை. Experience உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 416.464.4200

Pizza கடை ஒன்றிற்கு Delivery driver தேவை. வாகனம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.875.6869

### வேலைக்கு ஆள் தேவை

தையல் வேலை தெரிந்த பெண்கள் வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 416.751.1337

**MORNINGSIDE & OLD FINCH**
Saree Blouse உட்பட அனைத்து தையல் வேலைகளுக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 647.317.4540

**FINCH & MIDDLEFIELD**
GTA Square இல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு Cook, Cashier வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு: 647.430.8238

**QUEEN STREET E. & WOODBINE**
Delivery driver & kitchen helper wanted.
தொடர்புகளுக்கு: 647.863.4345

## ROOM FOR RENT

### WARDEN & FINCH

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு உண்டு. அருகாமையில் பஸ் வசதியுடன் June 01, 2012 இருந்து வாடகைக்கு விடப்படும்.

**தொடர்புகளுக்கு: 647.402.9490**



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

**Tutorial 292 Answers**

(1) A plane paralled to the y z plane has directions a = (0, 1, 0) and b = (0, 0, 1). This plane throught the point (6, 4, 2) a vector equation is
r = (6, 4, 2) + s (0, 1, 0) + t (0, 0, 1)

(b) A plane contains the x - axis and 0 the point (A - 1, -4, -7). Two points non the x - axis are 0 (0, 0, 0) and B (1, 0, 0). Two direction are AO = (1, 4, 7) and oB = (1, 0, 0) An equation is r = s (1, 0, 0) + t (1, 4, 7)

(2) A plane contains the intersecting lines x - 2/1 = y/2 = 2 + 3/3 and x - 2/-3 = y / 4 = 2 + 3/2 the common points is (2, 0, -3) and two direction vectors are a = (1, 2, 3) & b = (-3, 4, 2)
Normal to the plane is h = a x b = (-10, -11, 10)
The scalar equation is 10x + 11y - 10z + D = 0 since it passe thro point (2, 0, -3) 20 + 30 + D = 0 D =-50 Equation is 10x + 11y - 10z - 50 = 0

(3) (a) 6 4 8 00 $2^5 . 3^4 . 5^2$ Here we form three term sequences where there are 6 choices for the 1st term (0, 1, 2, 3, 4 & 5) and for each of there 5 choice for the 2nd term and 3 for 3rd term. Hence there are 6.5.3 = 90 interger divisers.

(b) For even divisers, the 1st term of our sequence must be one 1, 2, 3, 4 or 5 5 choices, hence there are 5.5.3 = 75 even division of 64800.

(4) Let the lenghthly be 2x and the heighty we know $x^2 + y^2 = 100$
$y = + \sqrt{100 - x^2}$ Omit (Negetive) area = 2x4 $=2x\sqrt{100 - x^2}$

$A= 2x\sqrt{100 - x^2}$ $0 < 10$ $dA/dx = 2\sqrt{100 - x^2} + 2y. 1/2 (100 - x^2)^{1/2} (-2x)$
For max or min dA/dx = 0 $\sqrt{00-x2 - 2x2} = 0$
$2\sqrt{100 - x^2} - 2x^2 = 0$ $100 = 2x^2$ $x^2 = 50$ $x = 5\sqrt{2}$
The Largest area occum when $x = 5\sqrt{2}$
And the area is = $10\sqrt{2}\ \sqrt{100 - 50} = 10\sqrt{2}\ \sqrt{50}$ = 100sq.units.

(5) $P = 5000 (1.07)^t$ To find the population in 3 years let = t = 3
$p = 5000 (1 - 07)^3$ =6125 The population will be =6125 in 3 years.

***Questions - 293***

(1) Determine the vector equation of a plane
(a) Parallel to the Y Z palne containing the point (6, 4, 2)
(b) The plane containing the x - axis and the point (-1, -4, -7) (For Gr 11 &12)

(2) Find the scalar equation of the plane that contains the intersecting lines x - 2/1 = y/2 = z + 3/3 and x - 2/-3 = y/4 = z + 3/z (For Gr. 11&12)

(3) The integers 64,800 can be factored as $2^5 \times 3^4 \times 5^2$
(a) How many division does 64,800 have?
(b) What fraction of these divisors is even? (For Gr. 11 &12)

(4) Find the area of the largest rectangle that can be inscribed inside a semi circle with radius of 10 units. place the length of the rectangly along the diameter? (For Gr. 12)

(5) A river in stoeked with 5000 salmm. The popular of salmons. The population of salmon increases by 7% per year. What will the population in 3 years? (For Gr.12)

BRIMLEY PLAZA
(BRIMLEY & SHEPPARD)
SPACES FOR RENT
Retails And Offices




300sq.ft To 4000sq.ft
Units are Available

Contact
K. Ganesh: 647.998.9467
K.Peran : 647.405.9900

E - Mail: ganeshmail@hotmail.com
2101 Brimley Road # 207, Scarborough, ON, M1S 2B4.
(BRIMLEY & SHEPPARD)

## PRIVATE HOUSE FOR SALE

**MCCOWAN & DENISON**

3 Bedroom + single garage house for sale. House number 59. 4 Car parking. Close to school,mall, TTC, etc.
416.670.8248 / 416.900.7782

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு: 416.267.5825

## HOUSE SALE BY OWNER

**PICKERING / HWY 401 & BROCK ROAD NORTH**

Brand new3 bedroom + 3 washroom house for sale. Close to all facilities. 1450 - 2000 Sq.ft. Immediate sale.
தொடர்புகளுக்கு: 416.823.3552

## காணி விற்பனைக்கு

வெள்ளவத்தையில் 131/2 perchase காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
416.716.6422 / 647.427.5469

## FOR SALE

கொழும்பு நாரயம்பிட்டியாவில் New upgraded 2 Bedroom apartment சகல வசதிகளுடனும் விற்பனக்கு உள்ளது. Nice neighborhood.
தொடர்புகளுக்கு: 416.496.3327

## RESTAURANT FOR SALE IN AJAX

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.230.5535
(Leave Message)

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

மேலும் பக்கங்கள் 24, 25

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## SPACE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
***(North East Corner)***

Office space is available on the 2nd Floor, 695 Markham Road, Scarborough,Ontario. There are plenty of parking available. Closer to all four major banks.
Contact, ***416.707.5341***

## SPACE FOR SALE

**ST.CLAIR & VICTORIA PARK**

Restaurant, stores, classes, போன்றவை நடத்தக்கூடிய இடம் விற்பனைக்கு உண்டு.
Price $289,000.
தொடர்புகளுக்கு: 416.454.4466

## தமிழ் உணவகம் விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் குறைந்த வாடகையுள்ள Take-Out Catering உணவகம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.587.8902

## AIR CONDITIONER FOR SALE

$150.............
Simplicity 7300 BTU air conditioner. Excellent condition. It was purchased at canadian tire.
Call: 905.237.2674

## JAI SAI FLORIST

Jasmine, Lily, Lotus, Mullai, Roses, Kanagamparam, Carnations Rose Petal Garland, Jasmine Garland, Carnations Garland & More,
Specially மதுர மல்லிகை.
416.396.9888 / 647.707.0369

## BUSINESS FOR SALE

**MCCOWAN & EGLINTON**

Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது.
1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து Toronto வில் வேலை பார்க்கும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## TUTORING

By tutor experienced at colombo schools, university & technical college.

- Math 6 - 12,
- Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders, birthdays etc.
Contact: 416.706.1654

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## VAN FOR SALE

03 Pontiac Montana. 236,000km. Good condition with remote starter.
Call: 905.237.2674

## CAR SALE

Nizan Sentra 2004 Black colour car for sale. Engine 1.8. 115, 000 km.
647.300.3535 / 647.924.6679

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## TUTORING

Grade 6 - 10: Math/Science
Grade 11 - 12: Physics / Chemistry
Biology / Accounting
647.893.9253 / 647.994.3341

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## மணமகன் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், விவாகமாகி குறுகிய காலத்தில் விவகாரத்து பெற்ற 30 வயது பிராமணப்பெண்ணுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்திமான மாப்பிள்ளை தேவை.
தொடர்புகளுக்கு: maha78@live.com

## HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.

kulagan: ***647.880.1416***

## JOB JOB JOB

Financial Office is located in Mississauga which is need an office Assistant with Tele marketer hourly pay will be $12.00 per an hour and commission.

***Contact: 416-646-8860***

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
**Sales Representative**



cell: **647-895-3466**
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
**31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6**

**each office independently owned and operated*
*** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.*

# டிசெம்பர் 21, 2012 இல் உலகம் அழியாது!

*சென்ற இதழின் தொடர்ச்சி*

சென்ற தடவையில் ஏன் டிசெம்பர் 21, 2012ல் உலகம் அழியாது என்பதற்கான காரணங்களை மதங்களின் வழியிலாகப் பார்த்தோம். இன்று விஞ்ஞான வழியிலாகப் பார்ப்போம். முதலில் கோள் எக்ஸ் (Planet X) விவகாரம். கதிரவனின் இன்னொரு பெரிய கோள் ஒன்று கதிரவத் தொகுதியில் இருப்பதாகவும், தொலைதூரத்தில் இருந்த அக்கோள் இப்போது கதிரவனுக்கு அண்மையாக வந்துள்ளது என்றும் கூறி, அதனால் புவி அழிந்துவிடலாம் என்று கூறுகின்றார்கள். அதன் அறிகுறிதான் புவியின் எழுந்தமாறான காலநிலை மாற்றங்கள் என்கிறார்கள். நாசாவிற்குக் கூட இது தெரியும், ஆனால் அவர்கள் மறைக்கிறார்கள் எனவும் கதை அடிபடுகிறது. முதலில் ஏன் நாசா இதனை மறைக்க வேண்டும்? புவியிற்கு அருகாகச் செல்லப் போகிற விண்கல் ஒருவேளை புவியையும் மோதலாம் போன்ற விபரங்களைத் தந்த நாசா இந்த விவகாரத்தை மட்டும் ஏன் மறைக்க வேண்டும்? அதனால் யாருக்கு என்ன லாபம்? இயற்கை அனர்த்தங்கள் புவி தோன்றிய காலம் முதலாகவே நிகழ்கின்றன. அண்மைக் காலங்களில் வந்த சுனாமிகள், பூகம்பங்கள், எரிமலைக் கொந்தளிப்புகள், சூறாவளிகள் போன்றவற்றையும் விட மோசமான இயற்கை அழிவுகள் புவியில் பல தடவை ஏற்பட்டிருந்தன. அப்பொழுதெல்லாம் கோள்



எக்ஸ் அருகில் வந்து விட்டுப் போனதா? இல்லையே, அதற்கான சான்றுகள் கூட இல்லை. இவையெல்லாம் நிகழ்வது சர்வசாதாரணந்தான். இன்னமும் சொல்லப் போனால், இந்த இயற்கையின் சிலும்பல்களின் பின்னராகப் புவியுடன் இணைந்து மனிதர்களும் மேலும் வலுப்பட்டார்கள் என்றுதான் சரித்திரம் கூறுகின்றது. நியூட்டனின் ஈர்ப்புவிதியின் வரவிற்குப் பின்னால் கோள்களின் இயக்கங்களை அறிய முற்பட்ட வேளையில்தான் இந்தகோள் எக்ஸ் எனவொன்று இருக்க வேண்டும் என்பது விஞ்ஞானிகளிடையே எழுந்தது. அதில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டவைதான் யுரேனஸ், நெப்ரியூன் புளூட்டோ மற்றும் சேனா போன்ற கதிரவக் குடும்பத்து உறுப்பினர்கள். ஆக, கோள் எக்ஸ் என்ற எடுகோள் கூட எங்களின் அறிவியல் தெளிவுகளை வலுப்படுத்தியுள்ளதே தவிர, எமக்குத் தீங்கு ஏதும் செய்து விடவில்லை. பிளனற் எக்ஸ் பயம் தேவையே இல்லை.

இன்னொன்று மகா கதிரவப் புயல் அச்சுறுத்தல். மகா கதிரவப் புயல் இப்பொழுதே ஆரம்பமாகிவிட்டது. இதுகூட இயற்கையின் சாதாரண நிகழ்வுகளில் ஒன்று. கிட்டத்தட்ட ஒவ்வொரு 500 ஆண்டுக்கு ஒரு தடவை வருகிறது. 1859ம் ஆண்டு ஆகஸ்து மாதமும் ஒரு மகா கதிரவப் புயல் தோன்றி புவியினைத் தாக்கியது. அதுபற்றிய விபரம் எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அதுபாட்டிற்கு வந்திட்டுப் போகும். பெரிய தாக்கங்கள் என ஒன்றும் ஏற்படாது என்கிறார்கள் நாசாவின் விஞ்ஞானிகள். இது பற்றிய விபரமான கட்டுரை ஒன்றை சென்ற வருடம் விளம்பரத்தில் எழுதியிருந்ததை நீங்கள் அறிவீர்கள்தானே! இயல்பை விடச் சற்று வித்தியாசமான மகா கதிரவப்புயல் மின்சாரத் தடை, தொடர்பு சாதன இடைஞ்சல்கள், செய்மதிச் சமிக்கை இடைஞ்சல்கள் போன்ற சில சேதங்களை உண்டாக்கச் செய்யும்தான். ஆனால் எமது புவியையே அழிக்கிற அளவிற்கு, நாங்கள் பயப்படவே தேவையில்லை.

அடுத்து, சற்று ஆழமான விஞ்ஞானத் தகவல்களைத் தருகிற விடயம். எங்களது பால்வழி கலக்சியின் மையத்தில் இருக்கின்ற பிரமாண்டமான திணிவுடைய கருந்துளையும், கதிரவனும், புவியும் ஒரே நேர்கோட்டில் வரப்போகின்றனவாம். அதனால் இப்பெரும் கருந்துளையின் தாக்கமானது புவியின் ஒழுங்கமைப்பினைச் சின்னாபின்னப்படுத்தப் புவி அழிந்துவிடும் என சில விஞ்ஞானத் தனமான ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பால்வழியின் மத்தியில் எமது கதிரவனின் திணிவினைப் போல் பில்லியன் மடங்கு பாரமான கருந்துளை இருப்பதென்னவோ உண்மைதான். ஆனாலும் அது 27,000 ஒளியாண்டு தொலைவிற்கும் அப்பால் உள்ளது. ஒரு ஒளியாண்டு என்பது ஒளி ஒரு ஆண்டில் செல்லும் தூரம். அது மட்டுமே கிட்டத்தட்ட 365 24 3600 300,000 கிலோமீற்றர் தூரமாகும். இவ்வளவு தொலைவில் உள்ள கருந்துளையின் திணிவினாலான ஈர்ப்பின் தாக்கமானது, நியூட்டனின் நேர்மாறு வர்க்கவிதியின்படி பார்க்கையில் மிகவும் சிறியதாகிவிடும். அக்கருந்துளையை விட, சந்திரனால் ஏற்படக் கூடிய ஈர்ப்பின் தாக்கம் பெரியதாக இருக்கும். சந்திரனால் எமது புவியிற்கு எதுவித ஆபத்தும் இதுவரையில் வந்ததில்லையே. எனவே இதையிட்டுக் கூட நாம் பயம் கொள்ளத் தேவையில்லை.

இன்னொரு சமாச்சாரம், காந்த அச்சு நிலை மாற்றம். அயன்ஸ்ரைனும் புவியின் இந்தக் காந்த அச்சு மாற்றம் பற்றிய கருத்தினைக் குறிப்பிட்டு இருக்கின்றார். ஆனால் எப்பொழுது, எப்படி நிகழும் என அவர் குறிப்பிடவில்லை. காந்த அச்சு மாற்றம் என்பது, புவிக் காந்தத்தின், காந்த வடமுனைவும் தென் முனைவும் அப்படியே இடம் மாற்றப்படுவதாகும். இதனை ஏற்படுத்தப்போவது மகா கதிரவப் புயல் அல்லது நேர்கோட்டில் வரும் புவி, கதிரவன், கருந்துளை நிலை எனக் கூறுகிறார்கள். ஏற்கெனவே இவ்விரண்டினதும் தாக்க வீரியம் பற்றிப் பார்த்து விட்டோம். இவ்விரண்டு நிகழ்வுகளினாலும் காந்த அச்சு மாற்றம் நிகழப் போவதில்லை. புவியில் காந்த அச்சு நிலைமாற்றம் நிகழ்ந்ததற்கான தடயங்கள் உண்டு. ஆனால் எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை அம்மாற்றம் நிகழ்கிறது என்பது இன்னமும் அறிய முடியாமல் இருக்கின்றது. இன்னொரு தடவை அப்படியொரு மாற்றம் நிகழுமா என்பது கூடச் சரியாகத் தெரியாது. அயன்ஸ்ரைனின் சமன்பாடுகள் கூட இதனைக் கூறவில்லை. அப்படியிருக்க, தெரி யாத அந்த விடயம் பற்றி ஏன் இப்போதைக்கு அலட்டிக் கொள்ள வேண்டும். இதை இப்ப கொண்டு வந்து கதைப்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல இருக்கிறது கிட்டத்தட்ட எல்லாப் பயமுறுத்தல்களுக்கான காரணங்களின் மறுப்புகளைத் தெரிந்து கொண்டோம். தெளிவும் பிறந்திருக்கும், தைரியமும் வந்திருக்கும். இனியென்ன கவலை. டிசெம்பர் 21, 2012 அல்ல அதுபோன்ற எத்தனை பிதற்றல்கள் வந்தாலும் கருத்திற் கொள்ளத் தேவை யில்லை. இது போன்ற எத்தனையோ 'பேய்க்காட்டு'களைக் கண்டும் வந்திருக்கிறோம், கேட்டும் வந்திருக்கிறோம். இது என்ன புதுசா? அப்படிக் கேட்க வேண்டும் போல இருக்குதல்லவா, கேட்டுவிடுங்கள்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

**10th ITaFF - 2011**

June 23, 2012 நடைபெறவுள்ளது

பத்தாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட
விழா படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால் கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத்தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பணப் பரிசுகள் வழங்கப்படும்.

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
'படைப்புக்கள் June 01, 2012க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
'படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
'படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
'படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள் நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
'படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
'தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
'படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8
Toronto, ON. Canada, M1B 5K3
மேலதிக தொடர்புகளுக்கு:: 1-416.450.6833 / 1-416.804.3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

# ஏர்வின் ஷ்றோடிஞ்சர் (*Erwin Schrondinger*) மாக்ஸ் போனின் (*Max Born*) நிறுவல்

## நுண்ணுலகியல் 35

அணுவில் இலத்திரன்கள் அலைவடிவில் காணப்படுகின்றன என்று டி புரோக்லி காட்டியது மிகப் பொருத்தம்தான். ஆனால் இந்த இலத்திரன் அலைகள் எவ்விதம் அமைகின்றன அல்லது எப்படியானது என்பதுதான் சற்றுச் சிக்கலான விடயம். இச்சிக்கல் அதிக காலத்திற்கு இருக்க வில்லை. ஆஸ்ரியாவின் விஞ்ஞானியான ஏர்வின் ஷ்றோடிஞ்சர் (Erwin Schordinger) என்பவர் கணித வடிவில் இதற்கான உறுதிப்பாட்டினைத் தந்தார். அணுக்களில் இலத்திரன்களின் அலைவடிவிற்கான அருமையான இச்சமன்பாடு, சற்று கடினமான விளக்கத்தினைக் கொடுத்தாலும், போரின் அமைப்பை இதுவும் உறுதியாக்கியது. இச்சமன்பாட்டின் தீர்வின்படி, சின்னஞ்சிறிய இலத்திரனானது, அணுக்கருவில் குறிப்பிட்ட ஓரொழுக்கில் இயங்குகையில் தன்னைப் பரவலாக்கிக் கொள்ளுகிறது. இது எப்படியெனில் ஒரு நிறமானது எப்படிப் பரவிக் கொள்ளுமோ அவ்விதம் இலத்திரன் நடந்து கொள்கிறது என்பது போலானது. இப்பரவலின் பரவும் அளவும் இடத்திற்கு இடம் மாற்றமடைவதாகவும் இருக்க, அலை வடிவம் தோற்றுவிக்கப்படுகின்றது. அதனாற்றான் இலத்திரனின் இயக்கமானது அலைவடிவில் அமைகின்றது என்றார் ஷ்றோடிஞ்சர். இதனை விளங்கிக் கொள்வதில் சிக்கல்தான். ஏனெனில், ஷ்றோடிஞ்சரின் சமன்பாட்டின் தீர்வின் அடிப்படையில், ஒரு கணத்தில் ஓரிலத்திர னின் பரவலின் ஒரு பகுதியை ஓரிடத்திலும், இன்னொரு பகுதியை இன்னோர் இடத்திலும் காணலாம் என்பது போல உள்ளது. விளங்கிக் கொள்வதற்குச் சற்று சிரமமானதாயினும், டி புரோக்லியின் அலைவடிவத்திற்கு நல்ல கணித வடிவ நிறுவலாக இது அமைந்திருந்தது.

மேலும், ஷ்றோடிஞ்சரின் சமன்பாட்டின் தீர்வானது, அணுவில் இலத்திரனின் முப்பரி-மாண அலை வடிவத்தினையும் காட்டியது. அத்துடன் வெவ்வேறு அலைவடிவங்கள் வெவ்வேறு சக்தி மட்டங்களுக்கான இலத்திரன்களின் அலைகளைக் காட்டின. டீ புரோக்லியின் அலைவடிவக் கொள்கைகளை இது சரியாக ஒத்திருந்தது. இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், இலத்திரன்கள் பெற்றுக் கொள்ளுகின்ற அல்லது இழக்கின்ற சக்திக்கு ஏற்ப, அலைவடிவங்களும் மாற்றமடைவதை அவரின் சமன்பாட்டின் தீர்வுகள் காட்டின. இது 'போர்' கூறியபடியான, அணுவில் சக்தியைப் பெற்று தம் ஒழுக்குகளை மாற்றுகின்ற இலத்திரன்களின் இயல்பை சரியாகக் காட்டுவதாக இருந்தது. இதே காலப்பகுதியில் டி புரோக்லியின் அலை இலத்திரனின் அலைவடிவம் என்றார். அதாவது ஒழுக்குகளில் இலத்திரன்கள் காணப்படக்கூடிய நிகழ்தகவினைக் கொண்டு இலத்திரன் அலைகளை காட்டலாம் என்பது போனின் கணிப்பு. ஆக, இலத்திரன்கள் அணுக்களில் நிகழ்தகவு அலைகளாக (Probability wave) என்பது போனினால்



## குவாண்ரம் பிறந்த கதை

வடிவத்திற்கான தெளிவினை இன்னொரு விஞ்ஞானியும் தந்தார். ஜெர்மனியின் மாக்ஸ் போன் (Max Born) என்பவர் இலத்திரன்களின் இருமை இயல்பிற்காக சிறந்த விளக்கத்தினைக் கொடுத்தார். துணிக்கை - அலை தொடர்புக்கான அந்த அற்புதமான விளக்கத்தினைப் பார்ப்போம். இதனை விளங்கிக் கொள்வதற்கு அவர் கருதியபடியேயான நீர் அலையைக் கருதுவோம். நீரலையில் நாம் ஒரு முடியினையும் (உயர்வு) அதனை அடுத்து ஒரு பள்ளத்தினையும் (தாழ்வினையும்) காண்கிறோம். அலையியக்கத்தின் போது இவை மாறிமாறிக் காணப்படும். இது நம்மனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம்தான். ஆனால் அதனை 'போன்' கண்டு கொண்ட விடம்தான் வித்தியாசம். இதில் ஒரு அருமையான கருதுகோளை போன் எடுத்தார். உயர்வான இடங்களில் நீரின் துணிக்கைகளை அதிகம் காணமுடியும், தாழ்வான பகுதிகளில் நீரின் துணிக்கைகளை அதிகம் காணமுடியாது. வளியில் ஒலி (சத்தம்) செல்லுகையிலும், வளித் துணிக்கைகளின் நெருக்கல்களையும் ஐதாக்கல்களையும் கூட இதேபோலவே நாம் காணலாம். நெருக்கல்களில் கூடுதலாக வளித் துணிக்கைளையும் ஐதாக்கல்களில் வளித் துணிக்கையின் நிலையை குறைவாகவும் காணலாம். இதன்படி, அலை இயக்கத்திற்கு புதியதாக ஒரு வரைவிலக்கணத்தினை 'போன்' குறிப்பிட்டார்.

இதனைத்தான் டி புரோக்லியின் அணுவில் இலத்திரன்களின் அலையியக்கத்தில் போன் கண்டார். இலத்திரனின் பாதையில் அவை சில இடங்களில் கூடுதலாகக் காணப்படு வதாகவும் சில இடங்களில் குறைவாக காணப்படுவதாகவும் இருப்பதுதான் அணுவில் இனம் காட்டப்பட்டது. அதன்படி, அணுவில் இலத்திரன்கள் குறிப்பிட்ட ஒழுக்குகளில் இயங்குகையில், சில இடங்களின் அதிகமாகக் காணமுடியும் என்பதாயும், சில இடங்களில் மிகக் குறைந்த அளவிலேயே காணமுடியும் என்பதாயும் ஆன முறையில் இயங்குகின்றன. இதுவே நிகழ்தகவு அலைக்கான போனின் விதியாக அமைகி ன்றது. ஷ்றோடிஞ்சரின் சமன்பாட்டின் தீர்வுகளும், போரின் விதியும் டி புரோக்லியின் இலத்திரனுக்கான துணிக்கை-அலை இருமைத் தன்மையை உறுதிப்படுத்த, குவாண்டமானது சாதாரண செம்மைப் பொறிமுறையில் இருந்தும் முற்றிலும் வேறுபாடான இயக்கத்தைக் காட்டுவது நிரூபிக்கப்பட்டது. இதனை மேலும் உறுதியாகக் கூற, கைசன்பேர்க்கின் உறுதியின்மைத் தத்துவமும் வந்து சேர்ந்து கொண்டது. அதனை அடுத்த தடவையில் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டம் - 109



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022


5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# "உலக விடுதலை இயக்க அனுபவங்களுடன் ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்வைத்து வரலாற்றை உற்று நோக்கத் துவங்கினேன்."

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

ஒரு மார்க்சிய விமர்சகர், சீரிய இலக்கிய ஆய்வாளர், சினிமா விமர்சகர், உலக அரசியல் ஆய்வாளர் என பல பரிமாணங் களையும் உலகங்களையும் உங்களது எழுத்தில் தரிசிக்கலாம். நீங்கள் எழுத்து உலகத்துக்கு வர காரணமாக இருந்தவை என்ன? உங்களது ஆரம்பம் பற்றி கூறுங்கள்.



எழுத்தாளன், கவிஞன், நாவலாசிரியன், சிறுகதையாசிரியன், விமர்சகன் என்பதெல்லாம் மிகக் குறுகிய அடையா-ளங்கள். இன்னும் ஒரு மார்க்சியர் இவை எதன் ஒன்றினுள்ளும் தங்கிவிடுவதில்லை. கார்ல் மார்க்ஸ் காதல் கவிதைகள் எழுதியவர். நாவல் எழுதியவர். மிகப்பெரும் இலக்கிய வாசகர். அவரது எழுத்துக்களில் அவர் மேற்கோள் காட்டும் உலக இலக்கியப் படைப்புக்கள் பற்றி மட்டுமே ஒரு விரிவான ஆய்வு நூல் வந்திருக்கிறது. மார்க்ஸின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பிரான்சிஸ் வீன் மார்க்சின் மூலதனத்தை இலக்கியப் பிரதியாகப் பார்த்து ஒரு முழுநூலை எழுதியிருக்கிறார். லெனின் இலக்கியம் பற்றி எழுதியவை தொகுக்கப்பட்டிருக்கிறது. கே. பாலதண்டாயுதம் இலக்கியம் பற்றி எழுதியிருக்கிறார். கலாச்சாரம் குறித்து மிகவிரிவாக எழுதியவர் அந்தோனியோ கிராம்ஸி.

கலை, இலக்கியம் உலகை மாற்றுவ தில்லை. அது உலகு குறித்த ஒரு தரிசனத்தைத் தருகிறது. மனிதர்களைப் புரிந்துகொள்ள, நேசிக்க இலக்கியம் கற்றுத் தருகிறது. அரசியல் உலகை மாற்றுகிறது. கலையும் இலக்கியமும் தம்மளவில் ஒரு கற்பனாபூர்வமான, சாத்தியமான மாற்று உலகங்களைப் படைக்கிறது. அவ்வகையில் இலக்கியம் என்பதும் ஒரு கருத்தியல் நடவடிக்கைதான். தமிழகத்தில் சீரிய மார்க்சிய சிந்தனையாளர்களான எஸ்.வி. ராஜதுரை, ஞானி போன்றவர்கள் ஆரம்பநாட் களில் படைப்பிலக்கியத்தில் ஈடுபாடு செலுத்தியிருக்கிறார்கள். ராஜதுரை மனோ என்னும் பெயரில் சிறுகதைகள் எழுதியிருக் கிறார். ஞானி கல்லிகை என கவிதைக் குறுங்காவியத்தைப் படைத்திருக்கிறார். எஸ்.என். நாகராசன் பழந்தமிழ் இலக்கிய வாசிப்புக் கொண்டவர். ஆர்கே.கண்ணன் அதிகம் எழுதாத, இசை நுட்பங்கள் தெரிந்த மார்க்சியர். இவர்களது எழுத்துத் தேர்வுகளுக்கு அவரவர்களுக்கு நிச்சயம் சமூகத்தேவைகள் இருந்திருக்கிறது. இந்த அளவில் இவர்களை கவிஞர்கள், சிறுகதையாசிரியர்கள், விமர்சகர்கள் என வகைப்படுத்த முடியாது. முழுநேரத்தையும் இலக்கியத்திற்கென அர்ப்பணிக்க ஒரு மார்க்சியரால் இயலாது.

யோசித்துப் பார்க்கும்போது ஒரு மார்க்சியனுக்கு இருக்கிற பல்துறை ஈடுபாடு, பரந்த வாசிப்பு, பல்துறை ஆற்றல் பிற துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு இல்லை. இன்னும் மார்க்சியர்கள் கலை இலக்கியம் மட்டுமில்லை, அனைத்துத்துறைகள் சார்ந்தும் உருவாக்கிய தாக்கம் போல பிறதனித்த துறைகள் சார்ந்து ஈடுபடுபவர்கள் உருவாக்க வில்லை. 2000 ஆண்டுகளில் தோன்றிய தனியொரு சிந்தனையாளர் என கார்ல் மார்க்ஸ் போற்றப்படுவது இதனால்தான்.

தோழர் தியாகுவை எடுத்துக் கொள்ளுங்கள். தனது வாழ்வை உக்கிரமாக வாழ்ந்தவர். அவரது சுவருக்குள் சித்திரங்கள் புனைவுத் தன்மையும் நாடகீயமும் கொண்டிருந்த சுயவாழ்க்கை அனுபவங்கள். அவர் பிற்பாடு அத்தகைய நூல்களை எழுதவில்லை. அவர் பல்லாண்டுகள் உழைப்பில் மூலதனத்தை மொழிபெயர்த்தார். அவரிடம் திருக்குறளைப் பற்றியும் பாரதிராஜாவின் திரைப்படங்களைப் பற்றியும் பேசிப்பாருங்கள். மிகச் சிறந்த இலக்கியத்தோய்வும் திரை ரசனையும் கொண்டவர் அவர். அவர் இது குறித்து ஏதும் எழுதியதில்லை. அவரது முன்னுரிமைகளும் தேர்வுகளும் வேறு. மார்க்சியர்கள் இப்படித் தான். கட்சிப் பிரசுரத்திற்குக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்த, பிழைதிருத்துனராகச் செயலாற்றிய ஜோஸே ஸரமாகோ தனது பிற்காலத்தில்தான் புனைவிலக்கியத்தில் ஈடுபாடு காட்டத்துவங்கினார். இலக்கியத்திற் கான நோபல் பரிசையும் பெற்றார். கம்யூனிச இயக்கம்தான் ஜெயகாந்தனைத் தோற்றுவித்தது. எனது கம்யூனிச ஈடுபாட்டின் பகுதியாகத்தான் எனது அனைத்துவிதமான அக்கறைகளும் பிறக்கிறது. இலக்கியம், திரைப்படம், அரசியல், புகைப்படம், ஓவியம் என அனைத்திலும் சாதனை செய்த படைப்பாளிகளை எடுத்துப் பாருங்கள். அதில் முன்வரிசையில் மார்க்சியத்தினால் ஆதர்ஷம் பெற்ற படைப்பாளிகளை நீங்கள் காண்பீர்கள். ஒரு மார்க்சீயரின் முன்னுரிமை களை அவர் வாழ நேர்ந்த காலத்தின் சூழலே தீர்மானிக்கிறது.

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அரசியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.

கோவை நகரம் கவிஞர்களின் நகரம். வானம்பாடி இயக்கம் அங்குதான் தோன்றியது. அவர்கள் கவிதையை சமூக இயக்கமாக எடுத்துச் சென்றார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கிய இதழான தாமரையில் இருந்து வந்த படைப்பாளிகள் தான் பூமணி, பா.செயப்பிரகாசம், வண்ண நிலவன், பிரபஞ்சன், பொன்னீலன் போன்றவர் கள். நான் முதலில் நிறையக் கவிதைகள் எழுதினேன். தோழர்கள் பாடுவதற்கென பாடல்கள் எழுதினேன். நிறையக் கவிதைகள் மொழிபெயர்ப்புக்கள் செய்தேன். வேறு வேறு காரணங்களால் இவை அனைத்தையும் என்னால் தொகுக்க முடியாது போனது. பிற்பாடு கோட்பாடு, திரைப்படம் குறித்து குறுநூல்கள் கொண்டு வந்தோம். ஈழவிடுதலைப் போராட்டமும் அதனைத் தொடர்ந்த காலமும் நிறைய வாசிப்பையும் புரிதலையும் கோரிய காலம். எனது முன்னுரிமைகள் இப்போது அரசியல் மொழி-பெயர்ப்புகள் சார்ந்ததாக ஆனது. என்றாலும் அவ்வப்போது அறந்தை நாராயணனின் கல்பனா இதழில் திரைப்படக் கட்டுரைகள் எழுதினேன். தொண்ணூறுகள் வரை நான் எழுதிய பல கட்டுரைகள், செய்த மொழி பெயர்ப்புக்கள், எனது அசலான கவிதைகள் என்பது தொகுக்கமுடியாமலே போனது.

புலப்பெயர்வின் பின்தான் எனது எழுத்துக்கள் தொகுக்கப்படலாயின. தாமரை ச் செல்வி பதிப்பகம் எனது திரைப்பட எழுத்துக்களையும் கவிதை மொழி பெயர்ப்புக்களையும் நூல்களாக்கின. கவிஞர் அருந்ததி, தமிழ் தகவல் நடுவம் வரதகுமார், உயிர்நிழல் லக்சுமி, கலைச்செல்வன் போன்றோர் இதன் பின்னணியில் இருந்தனர். புகலிடத்தில் வெளியான இலக்கிய அரசியல் சஞ்சிகைகள் அனைத்திலும் நான் எழுதினேன். எனது முப்பதாண்டு கால நண்பர் மனுஷ்யபுத்திரனின் உயிர்மை இதழின் வழி என்னால் பரவலான வாசகர்களைச் சென்றடைய முடிந்தது. உயிர்மை மட்டும் என்னுடைய 13 நூல்களைப் பதிப்பித்தது.

எனது தேர்வுகளும் முன்னுரிமைகளும் குறித்த ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாவலுக்கான முன்வரைவை எழுதினேன். எனது பாலுறவுத் தேடல்களும் அரசியல் பிரக்ஞையும் முகிழ்ச்சி பெற்ற எழுபதுகள் குறித்தது அந்த நாவல். இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது அதனது அரசியல் பின்னணி. 2009 மே மாதம் நிகழ்ந்த பேரழிவு என்பது எனது தலைமுறையின் எல்லாத் தமிழர்களும் போலவே தனிப்பட்ட முறையில் எனக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. உலக விடுதலை இயக்க அனுபவங்களுடன் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்வைத்து வரலாற்றை உற்று நோக்கத் துவங்கினேன். கடந்த மூன்று ஆண்டுகளில் இது குறித்து மட்டும் 60 கட்டுரைகள் எழுதினேன். இதில் 48 கட்டுரைகள் தொகுக்கப்பட்டு அடையா-ளம் பதிப்பகம், ஈழம் : எதிர்ப்பு அரசியலின் எதிர்காலம் என 650 பக்கங்களில் நூலாக வெளிக்கொண்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட மிகப்பெரும் அரசியல் எழுச்சியான அரபுப் புரட்சியை மார்க்சியர்களால் புரிந்துகொள்ளவே முடிய வில்லை எனும் எண்ணம் எனக்கு இருந்தது. அது குறித்து நான் எழுதிய 25 கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுத்த 18 கட்டுரைகள் அரபுப் புரட்சி எனும் தலைப்பில் அடையாளம் பதிப்பகத்திலிருந்து நூலாக வெளியாகிறது. இடையில் 1000 பக்கங்களில் இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளிலும் வெளியான அரசியல் திரைப் படங்கள் குறித்த நூலை முழுமை செய்திருக்கிறேன். எவ்ஜனியா மரியா பிரேவோ மற்றும் கிஸ்வர் நஹீத் எனும் சிலி மற்றும் பாகிஸ்தான் பெண் கவிஞர்களின் கவிதைகளை எனது நண்பன் உதய குமாருடன் சேர்ந்து இறுதிப்படுத்தியிருக்கி றேன். இந்த நூல்கள் இந்த ஆண்டின் இறுதிக்குள் உயிர்மை பதிப்பக வெளியீடுகளாக வரவிருக்கிறது.

ஒரே சமயத்தில் குறைந்த பட்சம் ஏழெட்டு நூல்களை வாசிக்கிறேன். இரண்டு மூன்று திரைப்படங்களைப் பார்க்கிறேன். நாவல், வரலாறு, கோட்பாடு, சமகால அரசியல் என அனைத்தும் சார்ந்ததாக, இரு மொழிகளிலும் நான் தேர்ந்து செயல்படுகிறேன். கடந்த ஓராண்டாக குளோபல் தமிழ் நியூஸ் இயக்குனர் நண்பர் குருபரனுடன் சேர்ந்து செயல்படுவது என்பது எனது எழுத்து வாழ்வின் வசந்தகாலம் என்பேன்.

சமூக மனிதனாக உங்களை நாங்கள் அறிந்திருக்கிறோம். உங்களது தனிப்பட்ட, குடும்ப வாழ்வு குறித்துச் சொல்லுங்கள்.

நான் எப்போதும் தனிமையை மிகவும் விரும்புபவன். அந்தரங்க வாழ்வை எப்போதும் பேண விரும்புபவன். தமது தனிப்பட்ட வாழ்வு குறித்த கேள்விகளுக்கு மிஷேல் பூக்கோ சொன்ன பதில் எனக்கும் பொருந்தும். எழுத்துக்கு அப்பால் எனது தனிப்பட்ட வாழ்வுக்கு எதுவும் முக்கியத்துவ மில்லை. எனது தனிப்பட்ட வாழ்வு என்பது கூட பிறரது சந்தோஷங்களுடனும் வலிகளுடனும் தோல்விகளுடனும்தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவில் என்னோடு சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்புபடுத்தாமல் இதனைப் பற்றிப் பேசமுடியும் என எனக்குத் தெரியவில்லை. இங்கு எனது எல்லைகள் என்ன, எனது சுதந்திரம் என்ன என்கிற கேள்விகளும் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்கிறேன். கணக்காளரான எனது துணைவியுடன் நான் இலண்டனில் வாழ்ந்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். ஒரு ஆண் குழந்தை. இதுவே எனது தனிப்பட்ட வாழ்வு குறித்து நான் சொல்ல விரும்புவது.

இந்தியா - இலங்கைப் பிரச்சினையில் என்ன பங்கை முறையாக செய்துள்ளது? தவறாக செய்துள்ளது? என்ன செய்யும் என நினைக்கின்றீர்கள்?

எந்தப் பிரச்சினையிலும் எந்த வெளிச் சக்திகளும் முறையானது முறையற்றது எனும் அடிப்படையில் ஈடுபடுவது இல்லை. அமெரிக்கா, சீனா, ரஸ்யா, இந்தியா, மேற்கத்திய நாடுகள், கியூபா என அனைத்து நாடுகளுக்கும் இது பொருந்தும். தத்தமது நாடுகளின் புவியியல், பிராந்திய, பொருளியல் நலன்களின் அடிப்படையில்தான்

31ஆம் பக்கத்தொடர்ச்சி

# மங்கலதேவி...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

குறவர்களிடம் தனக்கு நேர்ந்த துன்பத்தை சொல்லி வருந்துகிறாள். அப்போது விண்ணில் பிரகாசமான ஒளி தோன்ற அவ்வொளிக்கிடையே தேவர்களுடன் தோன்றிய கோவலன், கண்ணகிக்கு மாங்கல்யம் அணிவித்து தேவலோகம் அழைத்துச் சென்றான் என்பது ஐதீகம். (இதனால்தான் கண்ணகி, மங்கலதேவி என்ற பெயர் பெற்றாள் என்கிறார்கள் கேரளாவில்.) இதைக் கண்டு வியப்படைந்த குன்றத்துக் குறவர்கள் முல்லைப் பெரியாறு ஆற்றங்கரையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சேரநாட்டின் மன்னன் செங்குட்டுவனிடம் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் கூறினர். சேரன் செங்குட்டுவன் அந்த இடத்தில் கண்ணகிக்கு கோயில் ஒன்றைக் கட்டினான். இந்த கண்ணகி கோயில் அமைந்துள்ள பகுதி இப்போது மங்கலதேவி கண்ணகி கோட்டம் என்று அழைக்கப்படுகிறது. கண்ணகி கோவிலின் முகப்பு வாயில், மதுரையை நோக்கியே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கண்ணகி கோயிலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பூசாரிகள்தான் வழிபாடுகளை நடத்துகின்றனர். கண்ணகி கோயிலின் அருகில் சிவபெருமான் ஆலயம் ஒன்றும் துர்கையம்மன் கோயில் ஒன்றும் உள்ளன.

கண்ணகி கோயிலில் சித்திரை முழுநிலவு விழா மிகவும் பிரசித்தமானது. ஆரம்ப காலத்தில் சித்திரை மாதத்தில் ஒரு வாரம் இந்த விழா நடைபெற்று வந்தது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு அந்த நடைமுறை கேரள மாநில வனத்துறையின் கட்டுப்பாடுகளால் மூன்று நாட்களாகக் குறைக்கப்பட்டு, தற்போது சித்திரை மாதம் முழுநிலவு (பவுர்ணமி) தினத்தன்று மட்டும் ஒரு நாள் விழாவாக காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை கொண்டாடப்படுகிறது. கண்ணகி கோயில் இருக்கும் பகுதி சம்பந்தமாக தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் இடையே எல்லைப் பிரச்சினை ஏற்பட்ட பிறகு, இந்த ஒரு நாள் மட்டும்தான் பக்தர்கள் வனப்பகுதிக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, வருடத்திற்கு ஒரு முறை சித்திரை முழுநிலவு தினத்தன்று மட்டுமே இங்கு செல்ல முடியும். மற்ற நாட்களில் அனுமதி கிடையாது.



**- வழிப்போக்கன் -**

அடர்ந்த மலைக் காட்டுப் பகுதி வழியாக, கண்ணகி கோயிலை நோக்கிச் செல்லும் பயணம் ஒரு தனி சுற்றுலா அனுபவம். இந்த கோவில் பகுதியில் இருந்து பார்த்தால் காட்டின் அழகை கண்குளிர ரசிக்கலாம். கண்ணகி கோயிலில் இருந்து ஒரு பக்கம் கிழக்கு மலைத்தொடர்களையும் அதனுடன் தமிழ்நாட்டில் இணைந்திருக்கும் சில கிராமப் பகுதிகளையும் நன்றாக காணலாம். தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தில் இருக்கும் சுருளி அருவி, கண்ணகி கோயிலுக்கு அருகில்தான் இருக்கிறது.

கண்ணகி கோயில் போலவே, தேக்கடி சுற்றுலாவில் கட்டாயம் பார்க்க தவறக்கூடாத இன்னொரு இடம் புல்லுமேடு. தேக்கடியில் இருந்து 45 கி.மீ. தூரத்திலும் பெரியாறில் இருந்து 26 கி.மீ. தூரத்திலும் இருக்கிறது புல்லுமேடு மலை நகரம். பச்சை வெல்வெட் போர்த்தியது போல காணப்படும் புல்லுமேடு. பெரியாறு ஆற்றுடன் சேர்ந்து இந்த நகரத்திற்குப் பயணம் செய்யும்போதே, சுற்றுப்புறத்தின் பசுமையும் குளுமையும் உங்களைக் கிளர்ச்சிகொள்ளச் செய்யும். இப்பகுதியில் உள்ள அபூர்வ மலர்களைப் பார்த்துக் களிக்க வேண்டும் என்றால் ஜீப் பயணம்தான் ஏற்றது. புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலையும், மகரஜோதி ஏற்றும் காலமாயிருந்தால் அதன் சுடரையும் இங்கிருந்து காணமுடியும். இப்படிப் பல சிறப்புகள் இருந்தாலும் புல்லுமேடு காட்டிலாகா கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இடம் ஆதலால், வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரியிடம் அனுமதி பெற்றுத்தான் இங்கு செல்லவேண்டும்.

எல்லா இடங்களுக்கும் அனுமதி பெற்றுதான் செல்ல வேண்டும் என்றால், எப்படி எனத் தயங்குகிறீர்களா? அனுமதிபெறாமல் செல்லகூடிய இடங்களும் தேக்கடியில் உள்ளன. தேக்கடியில் இருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது, வண்டிப் பெரியாறு. முல்லைப் பெரியாறு அணையின் பிரதான ஆறான பெரியாறு இந்நகருக்கு நடுவில் ஓடி, தேயிலை, காபி, மிளகுத் தோட்டங்களுக்கு நீரை அருளுகிறது. பிரதான வர்த்தக மையமாக உள்ள வண்டிப் பெரியாறில் பல தேயிலை நிறுவனங்களும் உள்ளன. அரசு விவசாயப் பண்ணை மற்றும் பூந்தோட்டத்தில் பலவகை ரோஜாச் செடிகள் மற்றும் அபூர்வ மலர் செடிகள் கிடைக்கும்.

தேக்கடியில் இருந்து, 5 கி.மீ. தொலைவில் உள்ள இடம் முரிக்கடி. இந்த இடத்தின் காற்றே வாசனைத் திரவியங்களின் மணத்தோடுதான் வீசும். அந்த அளவு சுற்றுப்புறமெங்கும் ஏலக்காய், மிளகு, காபித்தோட்டங்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஏலக்காய் என்றதும் ஞாபகம் வரும் வண்டன்மேடும் தேக்கடி பகுதியில்தான் உள்ளது. குமுளியில் இருந்து 25 கி.மீ. தூரம். உலகின் மிகப் பெரிய ஏலக்காய் சந்தைகளில் ஒன்று இது. இங்குள்ள ஏலக்காய் தோட்டத்தில் நீங்கள் நடந்து சென்றால் நீங்களே மணம் வீசுவீர்கள்!

தேக்கடி பகுதியில் குழந்தைகள் மட்டுமல்லாது பெரியவர்களையும் மகிழ்ச்சிப்படுத்தும் விசயம் யானை சவாரி. கம்பீரமாக நடந்து செல்லும் யானை மீது அமர்ந்து சரணாலயத்தின் இயற்கை அழகை ரசிப்பது மறக்க முடியாத அனுபவம். காட்டு வழியே யானைச்சவாரி செல்வதற்கான வசதிகளை தேக்கடி வனத்துறை அலுவலகம் ஏற்பாடு செய்து வைத்துள்ளது. நேரம்: காலை 10 மணி முதல் 5 வரை. ஒரு முறை சவாரி போவதற்கான கால அளவு 30 நிமிடங்கள். கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.30. வன விலங்கு தகவல் நிலையத்தில் சவாரி அனுமதிச்சீட்டு கிடைக்கும்.

இயற்கையுடன் சில நாட்கள் இணைந்திருக்க நினைப்பவர்கள் தேக்கடியை தேர்ந்தெடுக்கலாம்.

### எப்படிச் செல்வது, எங்கு தங்குவது?

நேராக கண்ணகி கோயில் செல்ல, தேனி மாவட்டத்தின் தென்மேற்கு எல்லைப் பகுதியான மேற்குத் தொடர்ச்சி மலையில், கூடலூர் அருகிலுள்ள பளியன்குடி எனுமிடத்திலிருந்து வனப்பகுதியில் நடந்து சென்றால் 6 கிலோமீட்டர் தொலைவில் கண்ணகி கோயில் வரும். கேரள தென் கிழக்கு எல்லைப் பகுதியான குமுளியிலிருந்து வனப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஜீப் போன்ற வாகனங்கள் செல்லும் பழைய சாலை வழியாகச் சென்றால் 16 கிலோமீட்டர் தொலைவு. சித்திரை விழாவின் போது தமிழ்நாட்டில் தேனியில் இருந்தும், கேரளாவில் குமுளியிலிருந்தும் தனியார் ஜீப்கள் இயக்கப்படும். மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய ஊர்களிலிருந்து குமுளிக்கு அரசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கேரளாவில் கோட்டயம், வண்டிப் பெரியார், கட்டப்பனை, பீர்மேடு போன்ற ஊர்களில் இருந்தும் குமுளிக்கு பேருந்து வசதி இருக்கிறது.

# "உலக விடுதலை...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகின் 'பிற' பிரச்சினைகளை எந்த நாடும் அணுகும். இலங்கையைப் பொறுத்து சிங்கள-தமிழ் இனப்பிரச்சினை இருக்கிறது என்பதனை இந்தியா அறிந்திருக்கிறது. ஈழத் தமிழர்களோடு உறவுகொண்ட தமிழகத் தமிழர்கள், தமிழகத்திற்கு வரும் ஈழ அகதி-மக்களின் பெருக்கம் என்பது அதனது பிரச்சினை. இலங்கை நிலைமையில் தனது அதிகார நலன்களை இலங்கையில் வைத்திருக்க தமிழர்களைச் சார்ந்திருப்பதா அல்லது சிங்களவரைச் சார்ந்திருப்பதா எனும் தேர்வு இந்தியாவின்முன் இருக்கிறது. இந்தத் தேர்வுகளையும் இந்தியாவின் பிராந்திய அரசியல் பொருளியல் நலன்கள் எனும் அடிப்படையில்தான் அது மேற்கொள்ளும்.

பிற எந்த நாடுகளின் தலையீடு அல்லது ஈடுபாடு எனப் பார்க்கும்போது இந்தியாவின் அரசியல் சக்தியை ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் திருப்பக்கூடிய வாய்ப்பும் சாத்தியமும் இருக்கிறது. அது தமிழகத் தமிழர்களின் வாக்கு வங்கியின் சக்தி. இந்த அழுத்த அரசியலை தமிழகத் தமிழர்கள் ஒருங்கிணைந்து செய்கிறபோது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமான மாறுதல்கள் இலங்கைத் தீவில் உருவாகச் சாத்தியம் உண்டு. அமெரிக்கா முன்னிலை வகித்து ஐநா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது இலங்கை அரசைப் பொறுத்து ஒரு மீளமுடியாத பொறி. இலங்கை அரசின் வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானது எனத் தமிழர்கள் அறிந்து கொண்டிருந்ததனை இப்போது முழு உலகமும் அறிந்து கொண்டிருக்கிறது. இலங்கை அரசு உலக நாடுகளிடம் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு இதுவே காரணம். விடுதலையை அவாவி நிற்கிற மக்கள் உயிருக்கமுள்ள வெகுமக்கள் அரசியலைக் கொண்டிருக்க வேண்டும். வெளிச்சக்திகளை எவ்வாறு கையாள்வது என்பதனைத் தெரிந்திருக்க வேண்டும். இந்த இரு செயல்பாடுகளும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போது இந்தியா என்ன செய்யும் அல்லது பெற்றுத்தரும் என்பது முதன்மையான கேள்வியாக இருக்காது. தொடரும்....


## 'தமிழர் மத்தியில்' நந்தாவுக்கு

## அஞ்சலிக்கூட்டம்

யூன் மாதம், முதலாம் தேதி, வெள்ளிக்கிழமை காலம் சென்ற 'தமிழர் மத்தியில்' நந்தா (நந்தகுமாரன் இராஜேந்திரம்) அவர்களின் மறைவை நினைவு கூர்ந்து அஞ்சலிக் கூட்டமொன்று மாலை 6.00 மணியிலிருந்து 9.30 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அஞ்சலி நிகழ்வு நடைபெறுகின்ற இடம் ஸ்காபுரோ சிவிக் சென்ரர். (150 Borough Drive, North-west corner of McCowan Road and Ellesmere Road, Toronto ON M1P 4N7).

அவரது நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு -: **647-237-3619**

அஞ்சலி ஏற்பாடு சார்பாக 'நந்தாவின் நண்பர்கள்'

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது




Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# வைரவிழா காணும் எலிசபெத் மகாராணி II

இவ்வருடம் இரண்டாம் எலிசபெத் மகாராணி (Queen Elizabeth II) அவரது வைர விழாவை (Diamond Jubilee) அதாவது முடிசூடி 60வது வருடத்தை கொண்டாடுகிறார். அவர் ஏப்ரல் 21, 1926 இல் பிறந்தார். அவரது தந்தையின் அண்ணன் அரச பதவியை ஏற்காததால், அவரது தந்தை அரசர் ஆனார். இதனால், எலிசபெத் இளவரசிக்கு அடுத்து ஆளும்தகுதி வந்தது. இளவரசி பெப்ரவரி 1945 இல் இரண்டாம் உலகப் போரின் போது (WW2), இராணுவ வாகனங்கள் திருத்துபவராகவும் வாகன ஓட்டியாகவும் பயிற்சி பெற்றார். இளவரசி எலிசெபத் இளவரசர் பிலிப்பை நொவம்பர் 20, 1947 இல் திருமணம் செய்தார். பின்னர் 1948 இல் அரசகுமாரன் சாள்ஸ் உம் 1950 இல் அரசகுமாரி ஆன் அவருக்குப் பிறந்தார்கள். அவரது தந்தை (அரசன் George VI) பெப்ரவரி 06, 1952 இல் இறக்கும்போது இளவரசி பொதுநலவாய நாடுகளின் (Commonwealth Nations) அரசியானார். யூன் 02, 1953 இல் முடிசூட்டப்பட்டார். இதுதான் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட முதலாவது முடிசூட்டும் விழாவாகும். அவரது முடிசூட்டப்படும் போது அணிந்திருந்த ஆடையில் பொதுநலவாய நாடுகளின் பூக்கள் இருந்தன. இதில் கனடாவின் Maple Leaf இலையும், இலங்கை, இந்தியாவின் தாமரைகளும், இங்கிலாந்தின் ரோசாப்பூவும் இருந்தன.



1957இல் அவர் கனடாவின் 23ஆம் நாடாளுமன்றத்தை திறந்து கனடாவின் நாடாளுமன்றத்தை திறந்த முதல் அரசர் ஆனார். 1959 இல் அரசகுமாரர் அன்றூ Andrew வும் 1963 இல் அரசகுமாரர் எட்வேட்டும் பிறந்தனர்.

1977 இல் அவர் வெள்ளி விழாவை (Silver Jubilee) அதாவது, முடிசூடி 25ஆம் வருடத்தை கொண்டாடினார். 2002 இல் அவர் பொன் விழாவை (Golden Jubilee) அதாவது, முடிசூடி 50 ஆம் வருடத்தை கொண்டாடினார். மகாராணி எலிசபெத், இங்கிலாந்தின் முதிய அரசரும், இரண்டாவது நீண்ட காலம் ஆண்ட அரசரும் ஆவார். உலகில் அதிகூடிய காலம் இப்பொழுதும் ஆண்டு கொண்டிருக்கும் அரசர்களில் எலிசபெத் மகாராணி இரண்டாவது அரசர் ஆவார்.

இவ்வருடம் கோடைகால ஒலிம்பிக்கை யூலை 27 இலும் வலுவளர் அமைப்பினர் களுக்கான ஒலிம்பிக்கை ஓகஸ்ட் 29 இலும் இலண்டனில் திறந்து வைக்க உள்ளார். மகாராணிக்கு சில விருப்பங்கள் உண்டு. ஒன்று, அவர் குதிரைகளையும், நாய்களை யும் வளர்ப்பார். மற்றது அவர் தொப்பிகளை



**ஞா. ஆரணி**
அகவை 13

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

**HomeLife / GTA Realty Inc.,** Brokerage*



*Independently Owned and Operated

**Gulshan Sharma, B. Eng.**
Broker

**Cell: 416.407.5911**

5215 Finch Ave. E. # 203 Toronto, ON.
**Office: 416.321.6969**

**MARKHAM & 14TH AVE.**
Spacious new 1220 Sq.ft Retail or Restaurant use unit. Great exposure in a new plaza (New Delhi Drive).
Available for Sale / Lease.
Immediate occupancy.

Busy supermarket Convenience. Long established and well known in Scarborough **(MIDDLEFIELD RD.) area.**
Lotto 649.
video income.
Asking only $139, 900.

**KENNEDY & FINCH**
Prime Office / Retail / Restaurant.
Can be divided into smaller units.
Lots of parking. Upto 4600 Sq.ft.
Situated on Finch Ave.

**MARKHAM & DENISON**
Busy Supermarket / Sri Lankan South Indian. Well known and long established
Very resonable price.

# நாவல் உலகின் மிகப்பெரும் ஆளுமை

## 'தஸ்தயேவ்ஸ்கி'

சுசீலாவின் தமிழ் மொழிபெயர்ப்பில் தஸ்தயேவ்ஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்' நாவலை வாசித்துக் கொண்டிருக்கின்றேன். அதில் கல்குதிரை சிறப்பிதழில் வெளியான தஸ்தயேவ்ஸ்கி யின் மனைவியான அன்யாவின் 'என் கணவரைப் பற்றிய சில நினைவுகள்' என்ற பகுதி பிரசுரிக்கப்பட்டிருந்தது. நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு பிறந்த பியோதர் தஸ்தயேவ்ஸ்கியைக் காட்டிலும் சிறந்த உரைநடை, புனைகதை மேதை உலகில் தோன்றியதில்லை என்று கருதுபவர்கள் இன்றிருக்கிறார்கள். அந்த மாபெரும் எழுத்தாளனின் மனைவியின் (அன்யா) வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து சில வரிகள் இவை. புத்தக வெளியீடு பொருளாதார ரீதியில் வெற்றி பெற்று எங்கள் குடும்பம் ஓரளவு தலைநிமிர்ந்து நிற்க முடிந்தது. சற்றும் எதிர்பாராத வகையில் எனக்குப் பெருந்தொகை கிடைத்தது. எனவே தஸ்தயேவ்ஸ்கியின் கடன்கள் சிலவற்றை அடைக்க முடிந்தது. இந்தக் கடன்களைத் தீர்க்க முடியவில்லையே என்று தமது மரணத்துக்கு முன்பு தஸ்தயேவ்ஸ்கி அடிக்கடி வருந்தினார்.

பிரசுரகர்த்தாக்களின் வெற்றியால் என் கணவர் இறந்த பிறகு இவ்வளவு பெருந்தொகை கிடைத்தது. இது அவர் இருந்த காலத்தில் கிடைத்திருந்தால் அவருக்கு நிம்மதி ஏற்பட்டிருக்கும். தனது குழந்தைகளின் வருங்காலக் கல்வியைப் பற்றியும், தனது குடும்பத்தின் வறுமையைப் பற்றியும், சாகும் தறுவாயில் அவர் கவலைப்பட்டிருக்க மாட்டார். அவர் கையில் பத்தாயிரம் ரூபிள்கள் பணம் அதிகமாக இருந்திருந்தால் அவர் நிதானமாக எழுதியிருப்பார். தன் வாழ்நாளில் ஒரு தடவையாவது அவசரமில்லாமல் ஒரு நூலை எழுதி முடித்திருப்பார். பணத்திற்

**- நடராஜா முரளிதரன் -**

காக அவசர அவசரமாக எழுதியதால், அவர் பல நூல்களைத் திருப்திகரமாக எழுத முடியவில்லை. அவற்றில் ஏகப்பட்ட குறைகளையும் தவிர்க்க முடியவில்லை.

இலக்கிய உலகிலும், சமுதாயத்திலும் அவரது படைப்புகள் துர்கனோவின் படைப்பு களுடனும் இதர எழுத்தாளர்களின் படைப்புகளுடனும் அடிக்கடி ஒப்பிடப்படு கின்றன. என் கணவரின் படைப்புகளை விட துர்கனோவின் படைப்புகள் முழுமையாக இருக்கின்றன என்றும் அவற்றின் வேலைப்பாடு அருமையாக உள்ளது என்றும் மக்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரு எழுத்தாளர் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தார், எழுதினார் என்பதைப்பற்றி அவர்கள் அதிகம் சிந்திப்பதில்லை. நல்ல ஆரோக்கியமும், பொருளாதாரப் பாதுகாப்பும், உறுதியான வேலையும் உடைய எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை மீண்டும், மீண்டும் திருத்தி எழுதவும், முழுமைப்படுத்தவும் வாய்ப்பு இருந்தது. ஆனால் என் கணவரின் நிலை அப்படியில்லை. இரண்டு தீவிர நோய்கள் அவரைப் பிடித்திருந்தன.

குடும்பச் சுமையும், கடன் சுமையும் அவரை அழுத்தின. அன்றாட வாழ்க்கையை எப்படிக் கழிப்பது என்ற பிரச்சினை அவரை எப்பொழுதும் வாட்டிக் கொண்டேயிருந்தது. பல சமயங்களில் கீழ்காணும் நிலை ஏற்பட்டதுண்டு. அவரது நாவலின் முதல் மூன்று அத்தியாயங்கள் அச்சில் வந்திருக்கும் நான்காவது அத்தியாயம் அச்சகத்தில் இருக்கும் ஐந்தாவது அத்தியா யம் பத்திரிகை ஆசிரியரை நோக்கித் தபாலில் சென்று கொண்டிருக்கும். அதற்குப் பிந்திய அத்தியாயங்களை எழுத முடியாதபடி பணத்தொல்லைகளும், கவலைகளும் அவரை வாட்டும். எனவே பாக்கியுள்ள அத்தியாயங்கள் அவர் மனதில் தங்கி விடும். அவரது நாவலின் அச்சான அத்தியாயம் ஒன்றை அவர் படிப்பார். அதிலுள்ள குறையைத் திடீரென்று கண்டுபிடிப்பார். அந்தக் குறை என் நாவலைக் கெடுத்து விட்டதே என்று துயரத்தில் முழ்கி விடுவார்.

'அந்த அத்தியாயத்தை திருத்தி எழுத முடியுமானால்!' என்று ஏங்குவார். அந்த அத்தியாயம் அச்சாகவில்லையானால் நான் அதைத் திருத்தியிருப்பேன்! அதில் என்ன குறை என்பதும், அதை ஏன் தொடர்ந்து எழுத முடியவில்லை என்பதும் இப்பொழுதுதான் தெரிகிறது. இந்தத் தவறால், சொல்ல வந்த விசயத்தையே நான் கொன்றுவிட்டேனே! என்று அவர் வருந்துவார். தனது பிழையைக் கண்டுபிடித்து, ஆனால் அதைத் திருத்த முடியாது அவதிப்படுகிற உண்மையான துயரம் அது. துரதிருஷ்டவசமாகத் தனது படைப்புகளிலுள்ள பிழைகளைத் திருத்தும் வாய்ப்பே அவருக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் எங்களுக்கு எப்பொழுதும் பணக்கஷ்டம் இருந்தது. அன்றாடம் வாழ்வதற்கும் கடன்களை அடைப்பதற்கும் போதிய பணமில்லை. எனவே வலிப்பு நோய் கண்ட மறுநாளினில் கூட அவர் எழுதத் தொடங்குவார். அவசர அவசரமாக எழுதுவார். எழுதிய அவற்றை மீண்டும் படிக்க நேரம் இருக்காது. அவற்றை உடனே பிரசுரகர்த்தருக்கு அனுப்பிவிடுவார். அப்படியானால்தான் குடும்பச் செலவுக்குப் பணம் கிடைக்கும். 'ஏழை மக்கள்' என்ற ஒரு நாவலைத் தவிர ஏனைய நாவல்கள் அனைத்தையும் அவர் வெகு வேகமாக எழுதினார். அவற்றை நிதானமாக எழுதவோ, திட்டமிட்டு உருவாக்கவோ சூழ்நிலைகள் இடம் தரவில்லை. அமைதியான சூழ்நிலையில் பிழை ஏதுமின்றி எழுத வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் சாகும் வரையில் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. 'ரஸ்கிவெஸ்தினிக்' என்ற சஞ்சிகை அவரது நாவல்களை



பிறந்த இடம் - ரஷ்யா, மொஸ்கோ
பிறந்த வருடம் - 1821
இறந்த வருடம் - 1881

வெளியிட்டு வந்தது. ஏதாவது ஒரு காரணத்தால் (மற்றொரு எழுத்தாளனின் நாவல் கைவசம் இருப்பதால்) அந்தச் சஞ்சிகை தனது நாவலை வெளியிடாமல் இருந்துவிடுமோ என்று தஸ்தயேவ்ஸ்கி அடிக்கடி வருந்தினார். எனவே, கதை எழுதுவது, அதை எவ்வாறு எழுதி முடிப்பது, யாரிடம் விற்றுப் பணமாக்குவது என்பதைப் பற்றி அவர் மிகுந்த கவலைப்பட்டார்.

அந்த சமயத்தில் தனது மிக முக்கிய தேவைகளையும், மிகச் சாதாரண வசதிகளையும் அவர் துறக்க நேரிட்டது. நகரில் நடந்து கொண்டிருந்த மிகச் சிறந்த நாடகங்களைப் பற்றியும், கச்சேரிகளைப் பற்றியும் அவரது நண்பர்கள் அவரிடம் கூறுவார்கள். ஆனால் மிக அவசரமான எழுத்து வேலையில் அவர் ஈடுபட்டிருப்பார். அப்பொழுது அவர் கூறுவார். 'அன்யா! என் நிலை உனக்குத் தெரியும். இந்த வேலையை முடித்து விடுகிறேன். பிறகு இருவரும் அந்த நாடகத்தைப் பார்க்கப் போவோம்'. நான் பதில் சொல்ல மாட்டேன். அவர் எழுதி முடித்ததும், நீங்கள் சென்று வாருங்கள் என்பேன். அதற்கு ஏதாவது காரணம் கண்டுபிடிப்பேன். எனக்கு உடல் நலமில்லை என்றோ, குழந்தைகளைத் தனியாக விட்டு வர முடியாது என்றோ சொல்லுவேன். அவர் தனியாகச் செல்ல மறுத்து விடுவார். சோகத்துடனும் சில வேளைகளில் எரிச்சலுடனும் இவ்வாறு கூறுவார். 'அன்யா! எப்பொழுதும் இப்படித்தான் கூறுகிறாய். ஆனால் உன்னுடன் நாடகம் பார்க்கச் செல்ல வேண்டுமென்றும், ஒன்றாகச் சிரிக்க வேண்டுமென்றும் சிறிது நேரம் ஓய்வெடுக்க வேண்டுமென்றும் , புதிய உற்சாகத்தையும், கருத்துக்களையும் பெற வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். உனது கிழட்டுக் கணவனுடன் வெளியே வர உனக்கு இஷ்டமில்லை அவ்வாறு வெளியே வந்தால் உன் தோழிகள் கேலி செய்வார்கள் என்று நீ பயப்படுகிறாய். அப்படித்தானே ?

அவரது கேலிப் பேச்சுகள் எனக்கு வேதனை அளித்தன. ஏனெனில் அவற்றுக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. அவரைக் கணவராக அடைந்தது குறித்து நான் எப்பொழுதும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். அவரைவிட அன்பும், அழகும் நிறைந்தவரை நான் காணவில்லை. கவலைகளும், ஏமாற்றங்களும் நிறைந்த எங்கள் வாழ்க்கை யிலிருந்து, அதன் சுமைகளிலிருந்து சற்று விடுபட்டு ஓய்வு எடுக்க அவரைப் போல நானும் விரும்பினேன். ஆனால் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. எங்கள் பொருளாதார நிலை அவ்வளவு மோசமாக இருந்தது. நானும் அவரும் நாடகத்திற்கோ கச்சேரிக்கோ போவதுண்டு. அப்பொழுது என் அருமைக் கணவர் ஆனந்தக் கடலில் மிதப்பார். ஒவ்வொரு கோடை காலத்திலும் அவர் 'ஏம்ஸ்' என்ற ஊருக்கு ஓய்வெடுக்கச் செல்லுவார். ஆனால் குடும்பத்தோடு செல்ல வேண்டும் என்று அவர் மிகவும் ஆசைப்படுவார். 'ஏம்ஸில்' தனியாக இருப்பதை விட, சிறைவாசம் மேல் என்று தோன்றுகிறது. நீயும் குழந்தைகளும் இல்லாமல் எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை' என்று கடிதம் எழுதுவார்.

அவர் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, புத்தக வெளியீட்டிலிருந்து இவ்வளவு பணம் கிடைத்திருந்தால் அவரும் நாங்களும் எவ்வளவு மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்திருப்போம்!




**AYURVEDA**

**MASSAGE GOOD FOR HEALTH & PAINS**

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

**Women For Women, Men For Men - 416.434.9251**

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at **Scarborough & Stouffville**

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com**

# இன்னொரு... அப்படியா?

பாகம் - 4
பகுதி 41

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

◊ சி.வி. நாதன் ◊

மணியன் தனது அறையில் எழுதிக் கொண்டிருந்தான். தங்களுக்குக் கொடுக்கப் பட்ட பணி முடிந்துவிட்டது. அதுபற்றிய அறிக்கையை மூவரும் தனித்தனியாக எழுதிக் கொடுப்பது என்று முடிவு செய்து அதன்படி எழுதிக் கொண்டிருந்தான்.

டொக், டொக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்க்க? கதவின் கண்ணாடியின் ஊடாகத் தெரிந்தான் மைக்கல். மணியனின் நண்பன், சீன தேசத்தவன். கதவைத் திறந்தவன் உள்ளே வரவில்லை. 'மணியன் உன்னை சான் அழைக்கிறார்' மைக்கல் உள்ளே வராதது மணியனுக்கு அதிசயமாக இருந்தது. பொதுவாக உள்ளே வந்து விடுவான், ஏதோ அவசரம் போலும்.

'சரி, நான் போகிறேன்'

'இல்லை உடனே வரட்டாம். புதிய இடம் உனக்குத் தெரியாது. வேலையை அப்படியே வைத்து விட்டு வா. நான் கூட்டிக் கொண்டு போகின்றேன்' மணியனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எல்லாவற்றையும் அப்படியே மேசைமேல் வைத்துவிட்டு, 'சரி, வா' என்றவன் அறைக்கு வெளியே வந்து கதவைப் பூட்டிவிட்டு, மைக்கலுடன் சென்றான்.

இருவரும் வராண்டா வழியே சென்று வராண்டாவின் முடிவில் இருந்த 'பிரத்தியேகம்' என்று அடையாளமிடப் பட்டிருந்த கதவண்டை வந்தார்கள். அந்த அறைக்குள் மணியன் இதுவரை சென்றதில்லை. கையில் இருந்த பிளாஸ்ரிக் அட்டையை கதவின் அருகில் இருந்த கறுப்புப் பட்டையின் முன் பிடிக்க, கிளிக் என்ற சத்தத்துடன் கதவு திறந்து கொண்டது. உள்ளே நுழைந்ததும் கதவு தானாகவே மூடிக் கொண்டது. உள்ளே ஒரு உயர்த்தி. ஏறிக் கொண்டார்கள். அதில் பயணித்தவர் கள், இன்னொரு அறைக்கு வந்தார்கள். அங்கே இன்னொரு உயர்த்தி. அதிலும் பயணப்பட்டு, ஓரிடத்திதை வந்தடைந்தார்கள்.

இந்த இடங்கள் எல்லாம் அவனுக்குப் புதியன. மைக்கல் நன்கு பழகியவன் போல் இயல்பாகவே மணியனைக் கூட்டி வந்தான். இறுதியில் இருவரும் இன்னொரு கதவண்டை வந்ததும், கதவைத் திறந்த மைக்கல், இந்த வரண்டா வழியே போ. முதலாவது வலது கைப் பக்கத்திலே திரும்பி, முதலாவது வலது அறைக்குள் போ. கதவு திறந்துதான் இருக்கும். நேராக, எதுவும் கேளாது அறைக்குள் போ. அங்கை சான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார், என்றவன் திரும்பிவிட்டான்.

மைக்கல் கூறியபடியே வந்த மணியன் அறைக்குள் வந்தான்.

அங்கே சான்- இன்னொருவருடன். அறைக்குள் எந்தவொரு தளபாடங்களும் இல்லை. இருவரும் சுவருடன் சாய்ந்து கொண்டு நின்றார்கள். அந்த மற்றவர் நல்ல உயரமாக, கறுப்பு நிற உடையில் கறுப்புக் கண்ணாடியுடன் நின்றிருந்தார் கோட்டின் நடுப்பகுதியில் வெள்ளைச் சட்டையின் ஒருபகுதி தெரிந்தது. முகத்தைத் தவிர மற்றைய எல்லாப் பாகமுமே மறைக்கப் பட்டது போல் இருந்தது. மணியனுக்கு ஒருநாளுமே அவரைக் கண்டதாக ஞாபகம் இல்லை.

'வாருங்கள் மணியன். ஒரு சில நிமிடங்கள்தான். உடனேயே போய்விடலாம். இவரைச் சந்தியுங்கள். இவர் மிஸ்டர் ஜோன்சன்' என்று அந்தப் புதிய மனிதரை அறிமுகப்படுத்த, ஜோன்சன் 'ஹாய் மணியன்' என்று கூறிவிட்டு மணியனின் வலது கையை சிநேகமாகக் பிடித்துக் குலுக்கினான். பிடி நல்ல இறுக்கமாக இருந்தது. கையைக் குலுக்கிய அதே நேரத்தில் ஜோன்சனின் இடது கை மணியனின் தோளின் பின்னால் பிடரிப் பகுதியிக்கு வந்து பிடரியில் மெதுவாகத் தட்டியது. பிடரியில் ஏதோ மெதுவாகக் குத்துவது போல் இருந்தது. ஜோன்சனின் மோதிரத்தில் இருந்த வைரக்கல் குத்தியிருக்கலாம். பின்னர் கையை விட்டுவிட்டார்.

'மணியன், கடந்த மூன்று மாதங்களாக நீங்கள் எந்தவொரு சிறப்புப் பணியிலும் ஈடுபடவில்லை. உங்களது சாதாரண பணியையே இங்கு செய்து கொண்டிருந்தீர் கள். இன்பன் நாகராசன் என்ற பெயர்களை நீங்கள் கேட்கவில்லை. நீங்கள் எந்த இடத்திற்கும் போகவில்லை. வேற்றுக் கிரக மனிதர்களையோ அல்லது இன்னொரு பிரபஞ்சம் பற்றியோ நீங்கள் எதுவும் தெரிந்து கொள்ளவில்லை' என்றார். அவரது குரலில் அதிகாரத் தொனியிருந்தது.

'சரி நாங்கள் பிரிந்து செல்வோம்' சான் கூற,

ஜோன்சன் மீண்டும் சிநேகமாக மணியனின் வலது கையைப் பற்றிக் குலுக்க, மணியனும் இயல்பாகவே கைகுலுக்கினான்.

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# தெரிஞ்ச சினிமா தெரியாத செய்திகள் இளையராஜா - வைரமுத்து பிரிவுக்கு என்ன காரணம்?


தமிழர்களுக்கும் சினிமாவுக்கும் இடையே யான பந்தம் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பொழுதுபோக்கு கலைஞர்கள் தொடங்கி, தங்களை ஆளப் போகிறவர்கள் வரைக்கும் எல்லாவற்றும் தமிழர்கள் சினிமாவைத்தான் சார்ந்திருக் கிறார்கள். ஆனால், இத்தனை பெரிய வெகுஜன கலையாக இருந்தும், ஏனோ தமிழ் சினிமா வரலாறு முறையாக தொகுக்கப்பட வில்லை. சமீப காலமாகத்தான் தமிழ் திரைப்பட வரலாறு (வரலாறுன்னா ஹிஸ்டரி தான்!) முக்கியம் என்பது உணரப்பட்டு, ஃபிலிம்நியூஸ் ஆனந்தன், ஞானம் போன்ற புகைப்பட தொகுப்பாளர்கள், தியடோர் பாஸ்கரன், ராண்டார் கை போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் போன்றவர்களின் முயற்சி யால், தமிழ் சினிமா வரலாறு கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வருகிறது. தமிழ் சினிமா வரலாற்றின் இருண்ட பக்கங்களில் வெளிச்சம் பாய்ச்சுபவர்களுடன் இப்பொழுது பேஸ்புக், பிளாக் இரண்டு இணைய தளங்களிலும் பிரபலமாக இருக்கும் 'தெரிஞ்ச சினி-மா தெரியாத விஷயங்கள்' பக்கத்தையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். அவ்வளவு விஷயங்கள் இதில் உள்ளன. உதாரணத்துக்காக சில இங்கே....



இயக்குனர் - நடிகர் - அரசியல்வாதி என்று பன் முகங் களைக் கொண்ட ராமராஜனின் இயற்பெயர் 'குமரேசன்'. இந்தப் பெயர் சினிமாவ-ிற்கு செட்டாகாது என்று நினைத்து, தனது தந்தை 'ராமய்யா' மற்றும் தனது அபிமான நடிகர் 'எம்.ஜி.ராமச்சந்திரன்' ஆகியோர் பெயரில் உள்ள 'ராம' என்ற எழுத்துக்களோடு, தான் வேலை செய்த மேலூர் 'ராஜா' தியேட்டரின் பெயரையும் சேர்த்து, 'ராமராஜன்' என்று தனக்குதானே பெயர் வைத்துக்கொண்டாராம்.



'ஆடுகளம்' படத்தின் நாயகி டாப்ஸி, நடிக்க வருவதற்கு முன்பு, சாஃப்ட்வேர் இன்ஜினியராக வேலை செய்துள்ளார். ஆப்பிள் நிறுவனத்தின் ஐ-போன்களில் தற்போது பயன்படுத்தப்படும் 'ஃபாண்ட் ஸ்வாப்' (Font Swap) என்ற அப்ளிகேஷனை ஐ உருவாக்கிய குழுவில் டாப்ஸி பணி புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




ரஜினிகாந்தின் 'வெற்றிப் படங்கள் முதல் பத்து' பட்டியல் தயாரித்தால், நிச்சயம் அதில் 'மூன்று முகம்' இருக்கும். இந்தப் படத்துக்கு முதலில் வைத்த பெயர் 'அலெக்ஸ் பாண்டியன்'. மூன்று ரஜினி காந்தில் ஒரு ரஜினிகாந்த், போலீஸ்காரராக வருபவர் பெயர், அலெக்ஸ் பாண்டியன். ஆனால், இந்த பெயர் கிராமங்களில் எடுபடாது என்று சிலர் கருத்து தெரிவிக்க, 'அலெக்ஸ் பாண்டியன்' 'மூன்று முகம்' ஆனது.

அக்காலத்தில் பெரிய தயாரிப்பாளரான தேவர், எம்.ஜி.ஆரை வைத்து பல படங்களை எடுத்துள்ளார். ஆனால், சிவாஜியை வைத்து ஒரு படம்கூட எடுக்கவில்லை. தேவர், சிவாஜியை வைத்து ஏன் படம் எடுக்கவில்லை என்பது பலருக்கும் பல



## ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன்

வருடங்களாக உள்ள கேள்வி. எம்.ஜி.ஆர். - சிவாஜி இருவரும் நண்பர்களாக இருந்தாலும் தொழில் முறையில் போட்டியாளராகவே இருந்துள்ளனர் என்பதால் இக்கேள்வி முக்கியமுடையதாகிறது. சமீபத்தில் இதற்கான பதிலை தேவரின் ஆஸ்தான வசனகர்த்தா அருர்தாஸ் தனது புத்தகத்தில் கூறியுள்ளார். தேவர், எம்.ஜி.ஆரிடம், 'எப்பவும் சிவாஜியை வைத்து படம் பண்ணமாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடுத்திருந்தாராம். இதனால்தான் கடைசிவரை சிவாஜியை வைத்து தேவர் படம் பண்ணவேயில்லை.

கேப்டன் விஜயகாந்தின் மகன் ஷண்முக பாண்டியன் நடிக்க வந்துவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியும். தெலுங்கில் மிகப்பெரிய வெற்றியை பெற்ற, ஜூனியர் வாசு, காஜல் அகர்வால், சமந்தா ஆகியோர் நடித்த 'பிருந்தாவனம்' படத்தின் தமிழ் பதிப்பில்தான் ஷண்முகபாண்டியன் நாயகனாக அறிமுகம் ஆக உள்ளார் என்பதும் தெரிந்திருக்கும். தெரியாத விஷயம்: 'பிருந்தாவனம்' படத்தின் தமிழ் உரிமையை வாங்குவதற்கு தமிழில் பலரும் முயற்சித்திருக்கின்றனர். இவர்களில் நடிகர் விஜய் கடுமையாக போராடினாராம். ஆனால், கிடைத்தது என்னவோ சண்முகபாண்டியனுக்குதான்!

இரட்டை இயக்குநர்களான கிருஷ்ணன் - பஞ்சு இருவரும் சந்திரபாபுவை வைத்து ஒரு நகைச்சுவைப்படம் பண்ணலாம் என யோசித்திருக்கிறார்கள். சம்பளமாக ஒரு லட்சம் கேட்டிருக்கிறார், சந்திரபாபு. கட்டுபடியாகாது என்று கூறிவிட்டு நாகேஷை வைத்து எடுக்கலாம் என திட்டமிட்டனர் இரட்டையர்கள். ஆனால், அந்நேரம் நாகேஷ், கே.பாலச்சந்தரின் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். கிருஷ்ணன் - பஞ்சு, கே.பாலசந்தரைச் சந்தித்து, "நீங்கள் நாகேஷை வைத்து ஒரு நாடகத்தை உருவாக்கி மேடையேற்றுங்கள். பிடித்திருந் தால் அதை நாம் படமாக எடுக்கலாம். இல்லையென்றால் உங்களுக்கு 1000 ரூபாய் தந்து விடுகிறோம்" என்றிருக்கிறார்கள். பாலசந்தர் உருவாக்கிய நாடகம் பிடித்துப் போகவே கிருஷ்ணன் - பஞ்சு அந்த நாடகத்தை திரைப்படமாக்க சம்மதித்தனர். ஏ.வி.எம். செட்டியார் தயாரிப்பில், பாலசந்தர் கதை - வசனத்தில் அந்தப் படம் வெற்றிப் படமானது. இப்படி திரைக்கு வந்த நாடகம்தான் 'சர்வர் சுந்தரம்.'

'ஆயிரத்தில் ஒருவன்' படம் உருவான காலத்தில் எம்.ஜி.ஆருக்கும் கண்ணதாசனுக் கும் சிறு உரசல்



ஏற்பட்டிருந்தது. இதனால், 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தின் அனைத்துப் பாடல்களையும் கவிஞர் வாலியே எழுதினார். ஆனால், வாலி எழுதிய ஒரு பாடலில் மட்டும் எம்.ஜி.ஆருக்கு திருப்தியில்லை. அந்த சூழலுக்காக மற்றும் சில பாடலாசிரியர்களைக் கொண்டும் எழுதிப் பார்த்தார்கள். எதுவும் எம்.ஜி.ஆருக்கு பிடிக்கவில்லை. இதற்கு கண்ணதாசன் மட்டும்தான் எழுதமுடியும் என்று எம்.ஜி.ஆரும் மற்றவர்களும் நினைக்க, கடைசியில் கண்ணதாசனிடமே வந்திருக்கிறார்கள். அப்படி, 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் கண்ணதாசன் எழுதிய பாடல்தான்...

'அதோ அந்த பறவை போல வாழவேண்டும்
இதோ இந்த அலைகள் போல ஆடவேண்டும்
ஒரே வானிலே ஒரே மண்ணிலே
ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்'

தலைப்புச் செய்தியான, இளையராஜா - வைரமுத்து பிரிவுக்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பீர்கள். இளையராஜாவின் - வைரமுத்து வெற்றிக் கூட்டணி பயணத்தில் முதன் முதலில் விரிசல் விழத் தொடங்கியது, வைரமுத்து பிற இசையமைப்பாளர்களின் படங்களுக்கும் அதிகமாக எழுத்தொடங்கிய போதுதான். ஆரம்ப காலங்களில், பாடல் ஒலிப்பதிவுகளின் போது, பாடல் வரிகளில் திருத்தம் தேவைப்பட்ட நேரத்தில், கூப்பிட்டதும் ஓடிவந்த வைரமுத்துவால், பிறருக்கும் எழுத ஆரம்பித்ததும் அப்படி வர முடியாமல் போனது. இதில் உரசல் உண்டாகி, அது

தொடர்ச்சி 39ஆம் பக்கம்






# மெய்மறந்து...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்நிகழ்ச்சி ஊடாக உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நிகழ்ச்சியை வழங்கிய இராக சங்கமத்தின் தயாரிப்பாளர் திரு. நாதன் மற்றும் அனைத்து TVI கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள். அத்துடன் இப்பெரிய தொடர் போட்டி நிகழ்ச்சியை வழங்குவது எமது கலைஞர்களுக்கு நாம் வழங்கும் காணிக்கையாகும். கடந்த ஒரு வருடகாலமாக கலந்து கொண்டு கர்நாடக சங்கீதத்தில் ஆழ்ந்த அனுபவம் மிக்க நடுவர்கள் ஊடாக கர்நாடக சங்கீத இசையின் நுணுக்கங்களை கற்றுக் கொண்டமை பங்குகொண்ட போட்டியாளர்களுக்கு கிடைத்த



தொலைக்காட்சியிலும், நேரடியாகவும் நிகழ்த்துவதற்கு சாத்தியமாக்கிய வணிகர்கள் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். TVI தொலைக்காட்சியில் நேரடியாக இராகசங்கமம் இறுதிப்போட்டி ஒளிபரப்பப்பட்டது மட்டுமல்லாது கனடியத் தமிழ் வானொலியிலும் (CTR) நேரடியாக ஒலிபரப்பாகியது இங்கு குறிப்பிடத்தக்கது. இனிவருங்காலங்களில் எமது வீடுகளில் இருந்து தொலைக்காட்சியூடாக பார்ப்பதை விடுத்து நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்குச்சென்று பார்ப்பதுடன் ஆதரவு வரப்பிரசாதமாகும். TVI இன் இராகசங்கமம் நிகழ்ச்சி வட அமெரிக்கா மட்டுமல்ல ஐரோப்பா, அவுஸ்ரேலியாவிலும் ஒளிபரப்பாகிவருவது எமது கலைஞர்கள் உலகெங்கும் அறியப்படுவதற்கும் இனங்காணப்படுவதற்கும் கிடைத்த வாய்ப்பாகும். நிச்சயமாக இராகசங்கமம் Season 2 இல் பல புதிய இளம்கலைஞர்களை எதிர்பார்க்கலாம். TVI தொலைக்காட்சியின் பணி தொடர வாழ்த்துக்கள்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com


# இன்னொரு

33ஆம் பக்கத்தொடர்ச்சி

கைகுலுக்கும் போது ஜோன்சனின் விரல்கள், தேவையில்லாது மணியனின் புறங்கையை விரல்களுக்கு மேலாக அழுத்துவது போல் இருந்தது, மணியனுக்கு.

மணியன் ஒன்றுமே பேசவில்லை. 'சரி வாருங்கள் மணியன், நாங்கள் போவோம்' எனக் கூறிய சான் மணியனை அழைத்துக் கொண்டு, சர்வசாதாரணமாகக் கதைத்துக் கொண்டு போய் மணியனின் அலுவலக அறையின் முன் விட்டுவிட, மணியன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அவனது மேசை துப்பரவாக இருந்தது. கதிரையில் வந்து அமரவும், மைக்கல் உள்ளே வந்தான். அவனது கையில் ஒரு கவர். 'மணியன் நீ அதிட்டக்காரன். உனக்கு மூன்று மாத விடுமுறை' கையில் இஐந்த கவரை மைக்கல் கொடுக்க, வாங்கித் திறந்து பார்த்தான். இந்தமுறை மூன்று மாதங்களையும் இந்தியாவில்தான் கழிக்க வேணும். மணியன் மனதுக்குள் கூறிக் கொண்டான்.

முடிந்தது, ஆனால்'. இன்னமும் முடியவில்லை.

(வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன)

# ஜீவயாத்திரையில் முன்னேற்றம்!

ஜீவியம் என்னும் யாத்திரையின் ஒவ்வொரு அனுபவமும் அதைவிடப் பெரிய, அதைவிட முக்கியமான சமாசாரங்களை நான் அனுபவிப்பதற்குத் தகுந்தவாறு எனது இதயத்தை விசாலமாக்கித் தயாராக்குகின்றது என்ற உண்மை விளங்கியதும் பயமெல்லாம் பறந்தோடிட என் மனதில் இனிமேல் புதிதாய் விசுவாசம் துளிர்க்கும்.

வழக்கமான நாளாந்த யதார்த்தங்களில் ஆகக்கூடிய பற்றினை நீ வளர்த்திருந்தால் அவற்றைக் கைவிட்டு மாற்று நடவடிக்கைகளை ஆர்வத்துடன் ஆரம்பிப்பது உனக்கு மிகவும் கடினமானதாகவே இருக்கும். ஏற்கெனவே உனக்கு நன்கு பரிச்சயமானவற்றை அறவே கைவிட்டு வேறெதிலும் நம்பிக்கை வைப்பது பிரச்சினையைக் கிளப்பலாம் என நீ அஞ்சலாம். மிகவும் விருப்பத்துடன் நீ யாசிக்கும் விளைவுகள், வெகுமதிகள், ஆசீர்வாதங்களை வாழ்வு உனக்குத் தரும் எனும் உனது நம்பிக்கை தளர்ச்சியடையலாம். உனது யாத்திரையில் உன்னை எதிர்கொள்ளப் போகும் எந்தச் சவாலையும் உன்னால் சரிவரச் சமாளித்துக் கரையேற முடியுமா என்ற பயம் உனக்கு ஏற்படலாம். நம்பிக்கை இல்லாவிட்டால் பொறுப்பும் உழைப்பும் உனக்கு எப்படி வரும். அவநம்பிக்கையுடன் உனக்குத் தெரிந்தவற்றை மட்டுமே உடும்புப்பிடியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு தேங்கி நிற்கத்தான் உன்னால் முடியும். இப்படிச் செயற்பட்டாயானால் எவ்வாறு நீ வாழ்வில் முன்னேறுவாய்?

அறவே மாற விரும்பாது, பழக்கமான ஒன்றிற்குள் மட்டுமே கட்டுப்பட்டுத் தேங்கி நீ நிற்பது 'எனக்கு இது மட்டும்தான் தெரியும்! இதற்குமேல் எதையும் என்னால் சமாளிக்க முடியாது. புதிதான வேறு எதற்குள்ளும் என்னால் நம்பி இறங்க முடியாது' என்ற உனது நிலைப்பாட்டினைத்தான் வெளிப்படுத்துகின்றது. உனது சகல அனுபவங்களையும் பதில் நடவடிக்கைகளையும் உனது கட்டுப்பாட்டிற்குள் அடக்கி வைத்திருக்க நீ விரும்பலாம். ஆனால் இதனால் என்ன நடக்கும் தெரியுமா? அதிகாரத்திற்காக உன்னுடன் மல்லுக்கட்டி சண்டையிட விரும்பாத வாழ்வு உன்னைப் படுகுழிக்குள் தள்ளித் தேங்கி நிற்கப் பண்ணிவிடும். இது உனக்கு எவ்வளவு துன்பத்தைத் தரும் தெரியுமா?

ஒன்றை மட்டுமே இடைவிடாது கட்டிப்பிடித்து கொண்டிருப்பது உனது கற்றுக்கொள்ளும் திறமையில் உனக்கு நம்பிக்கை இல்லாததையே எடுத்துக் காட்டுகின்றது. மூன்று விதங்களில் ஒருவர் கற்றுக்கொண்டு முன்னேறலாம். முதலாவது பலாத்காரத்திற்குப் பயந்து படிப்பது.




இரண்டாவது படிக்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பதால் கற்றுக்கொள்வது. மூன்றாவது பலாத்காரமாகத் தேர்ந்தெடுக்கப் பண்ணுவதால் படிப்பது. உனக்கு நன்கு பரிச்சயமானவற்றை உனது அதிகாரத்திற்கு உட்பட்டிருப்பவற்றை நீ கைகழுவிவிடத் தயங்கினால் சில சமயங்களில் நீ ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டிவரலாம். கைவிட விருப்பமில்லாதவற்றை இறுகப் பற்றிக்கொண்டு முன்னேறாமல் ஒரே இடத்தில் மட்டுமே தேங்கி நின்று துன்புற்று வாடி வதங்கலாம். அல்லது எனக்கு இப்போது எது தேவை என்பது புரியாவிடினும் அடுத்த அனுபவம் அத்தியாவசியமான சகலதையும் நிச்சயம் தரும் எனும் நம்பிக்கையுடன் பழையதைக் கைகழுவி விடலாம்.

வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்ற மாதிரியே எப்படியும் சுழன்று கொண்டிருக்கும் எனும் தவறான எண்ணத்துடன் நீ இதுவரை அப்படியே தேங்கி நின்றிருக்கலாம். உனது எதிர்கால வாழ்வில் எத்தனையோ ஆசீர்வாதங்கள், இன்பங்கள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை இன்று நிச்சயம் நம்பு. பயத்தினால் கைவிடாது நீ பிடித்து வைத்திருக்கும் சகலதையும் இன்று கைகழுவி வீசிவிட்டு இனிமேல் உனக்கு நிச்சயம் மனநிறைவு கிட்டும் எனும் நம்பிக்கையுடன்

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 205


மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி




முன்னேறு.

**எனக்குத் தெரிந்த எல்லாவற்றிற்கும் மேலாக இன்று எனது நம்பிக்கையை உயர்த்திக் கொண்டு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கிறேன்.**

நகைச்சுவைத் தொடர் 247

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



நாளை நமதே
இன்றிருப்போர் நாளை இங்கே இருப்பதென்ன உண்மை

எங்கு போவதென்று மனதை அங்குமிங்கும் அலைத்துக் கொண்டிருந்தா ஆட்டிலறி அன்னம்மா



அப்ப இத்தாலிக்கு போகட்டே என கேட்கமுதலே எழும்பிப் பாய்ந்தா. போனமுறை போய் அவை ஓரிடமும் கூட்டிக்கொண்டு போகேல்லை. பிசா கோபுரம் கூட்டிக்கொண்டபோய் காட்டேல்லை. ஒவ்வொருநாளும் பிசா தான் சாப்பாடு. இஞ்சையும் அதுதான். அங்கையும் அதுதான். அங்கை நிண்டு எனக்கு கோல் கொலக்ற் எடுத்து இவையைப்பற்றி திட்டிப்போட்டு பேந்தும் அங்கை… என இழுத்தா…



ஆட்டிலறி அன்னம்மா அழாக்குறையா கதைக்கத்..தொடங்கினா… வத்திகான், பிசாகோபுரம், கொலோசியம், சின்னச்சின்ன போட் ஓடற வெனிஸ், நாப்பொலி பலர்மோ…ஒண்டும் கூட்டிக்கொண்டுபோய் காட்டேல்லை. சின்னப் பிள்ளையிலை அக்கான்ரை மேள் நந்தினியை எத்தினை நாள் மருதடிக்கும் நல்லூருக்கும் கூட்டிக்கொண்டு போயிருப்பன் என்று சொல்லியபடி சீரியல் நாடகங்களில் கதாநாயகிகள் அழுது கண்துடைப்பது போல் கண்களைத் துடைத்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

உலகருக்கு கள்ளிக்காட்டு கவிஞர் வைரமுத்து அவர்களின் வரிகள் அவரின் குரலிலேயே எங்கோ கேட்டது ஞாபகம் வந்தது.
தாஜ்மகால் பார்க்காத இந்தியனுமுண்டு..
நையகரா பார்க்காத அமெரிக்கனுமுண்டு..

வந்த காலத்திலிருந்து எலிவேற்றரில் ஏறப்பயமெண்டு ஆட்டிலறிஅன்னம்மா சி.என்.ரவர் கூட கிட்டப்போய் பார்த்ததில்லை.
(சி.என் ரவர் பார்க்காத கனேடியர்களும் உண்டு)

உலகருக்கு ஒரு பக்கம் சிரிப்புத்தான் வந்தது. ஆட்டிலறி அன்னம்மாவுக்கும் செக்கண்ட புளோர் செல்லம்மாவிற்கும் வவுனிக்குளம், மடுமாதா, கதிர்காமம், மட்டக்களப்பு... பல இடங்கள் தெரியாது. போர்ச்சூழலால் பங்கரையும் பாதுகாப்பு வலயத்தையும் தவிர பிறந்த ஊரையும் அயலூரையும் தெரியாத எத்தனைபேருண்டு.



பெற்றதாயும்..பிறந்த நன்நாடும்?...
வெளிநாடுகளுக்கு உறவினர்களிடம் சென்று 2…3..வாரத்தில் பூமிசாத்திரம் சரித்திரத்தில் (பெயில் விட்டு) படித்த இடங்களையெல்லாம் பார்க்கவேணுமென்றால் முடியுமா?
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

### யூன் 2012 ஞாபகம் வருகிறதா

2. சர்வதேச குழந்தைகள் தினம்
3. பண்டிதர் தா. முருகேசுபிள்ளை நினைவுநாள்
4. பூமாலை நடவடிக்கை அனுமதியின்றி இந்திய விமானங்கள் இலங்கை வான்பரப்பில் உணவுப்பொதிகளை வீசிய தினம் (அனுமதியுடன் வந்து குண்டுகள் வீசியது பிற்காலம்)
5. 1956 யூன் 5 சிங்களம் மட்டும் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
5. உரும்பிராய் பொன். சிவகுமாரன் 1974 இல் பொலீஸ் சுற்றி வளைப்பின்போது சயனைட் அருந்தி தன் இன்னுயிரை மாய்த்த தினம்.
5. மறைந்த இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோவிலை தாக்க உத்தரவிட்ட தினம். (படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்)
5. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றோனால்ட் றீகன் நினைவு தினம் (2004)
5. உலக சுற்றுச்சூழல் நாள்.
5. மு. சிவசிதம்பரம் நினைவுதினம் (2002) தமிழர் கூட்டணித்தலைவர்.
6. 1930 இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது.
7. உலகக்கடல் நாள்.
11. ஈழத்துப்புலவர் சோ இளமுருகனார் (நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மகன் (1975) (ஈழத்து சிதம்பர புராணத்தை எழுதியவர்)
12. உலகக்குழந்தைத்தொழிலாளர் ஒழிப்புதினம்.
14. சர்வதேச இரத்த வழங்கல் நாள்.
14. ஈழத்துப்பெரியார் தென் புலோலியூர் கந்தமுருகேசனார் நினைவுதினம் 1965 (1902-1965) (வறுமையின் காரணமாக கல்வியைத் தொடரமுடியாமலும் 25 வயதில் கால்கள் வலுவிழந்ததாலும் வீட்டையே திண்ணைப்பள்ளிக்கூடமாக்கி பலருக்கு கல்வி போதித்தவர்)
15. ஆன்மீகவாதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம் 2008 (1925-2008)









# குடும்ப வன்முறை

18ஆம் பக்கத்தொடர்ச்சி

கடினமாகும். இன்று உலகெங்கும் உள்ள இளம் குற்றவாளிகளை உருவாக்கிய முதல் குற்றவாளிகள் பெற்றோர்களே என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளைத் தாக்குகின்றார்கள். பிள்ளைகள் மீது எவ்வாறு குற்றமிழைக்கின்றார்கள் என்பது பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பிள்ளைகள் மீது நடைபெறும் குற்றச் செயல்கள் (Child Abuse) பல்வேறு முறைகளில் நிகழ்கின்றன. இது பற்றி அறிய பாடசாலைகளில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1992 இல் Brinegar என்பவரது ஆய்வுப்படி தொடர்ந்தும் அடிவாங்கும் பிள்ளைகள் பாடசாலைகளில் பிரச்சினையை உருவாக்கும் வன்செயலாளராக மாறுவதினை உணர முடிகிறது. இதனையே வீடுகளிலும் நோக்கும் போது அடிப்பதால் எந்தப் பிள்ளையையும் திருத்த முடியாது என்று கருதுகின்றனர். சிறுவயது முதல் அடித்து வளர்க்கப்பட்ட பிள்ளைகள் எதிர்காலத்தில் வன்செயலாளர்களாக மாறியுள்ளனர் என்பதே இவர்களது வாதம். அடிப்பதால் பிரச்சினை தீர்வதில்லை. பிரச்சினைகள் உருவாகின்றன என்பதே உண்மையாகும். 1988 இல் Decker செய்த ஆய்வுப்படி பிள்ளைகளாக உள்ளபோது அடி வாங்கியவர்கள் பெற்றோர்களாக மாறிய வேளையில் தமது பிள்ளைகளை அடிக்கவே செய்வார்கள் என்பதனை உறுதிப்படுத்தி யுள்ளது. 1996 இல் கனடா சுகாதார (Health Canada) அறிக்கையின்படி அதில் ஆய்வு செய்துள்ள Smith Thornery என்பவரது கருது கோள்படி அடிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பிள்ளைகளில் 30 வீதத்தினர் நெறிபிறழ்வு பெற்றுள்ளனர் என்று கருதமுடிகின்றது. எமது



பெற்றோர்களும் பிள்ளைகளை மிகவும் தண்டித்து வளர்க்க முற்படுவது தெரிகின்றது. பலர் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளனர். உண்மையில் உளவியல் ரீதியில் அடித்து வளர்க்க முற்படும் பெற்றோர்கள் பின்பு பரிதாபமாக வாழ வேண்டி ஏற்படலாம். அன்பு மூலம் பிள்ளைகள் வளர்க்கப்படல் இன்றியமையாத ஒன்றாகும். பல பெற்றோர்கள் பிள்ளை வளர்ப்பில் முதிர்ச்சி பெறவில்லை. அறிவு பெறவில்லை. அனுபவம் பெறவில்லை என்பதே உண்மை யாகும். அருமையாக வளர்க்க வேண்டிய பிள்ளைகளை மழுங்கடிக்கும் பல பெற்றோர்கள் நம்மிடையே உள்ளனர்.

பிள்ளைகள் எவ்வாறு உடலியல் ரீதியில் தண்டிக்கப்படுகின்றார்கள். உளரீதியில் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்பதே இன்று ஆய்வுக்கு உட்பட்டுள்ளது. உடலியல் ரீதியில் (Physical) குற்றம் செய்யும்போது தள்ளுதல் (Pushing), அடித்தல் (Hitting), சவுக்கால் அடித்தல் (Whipping), கடித்தல் (Biting) கீழே அமுக்குதல் (Holding Down), முகத்தில் அறைதல் (Slapping), குத்துதல் (Punching) போன்றன உள்ளன. இதனால் பிள்ளைகள் மீது சிராய்வுக் காயங்கள் (Bruises), மூளையில் கண்டல்கள் (Concussions), எலும்புகள் உடைதல் (Broken Bones) என்பன ஏற்படுகின்றன. 90 வீதி அமெரிக்க குற்றவாளிகள் பிள்ளைகளாக வாழ்ந்த வேளையில் வன்செயலுக்கு உள்ளானவர் கள் என்னும் போது பிள்ளைகளை அடித்து வளர்ப்பது உண்மையில் வேண்டப்படாத ஒன்றாகும். உளரீதி என்று கூறும்போது பாலியல் ரீதியில் பலர் துன்புறுத்தப் பட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்காவில் 40,000 பேர் சென்ற வருடம் பாலியல் குற்றத்திற்கு உட்பட்டுள்ளனர். இதில் 70வீதம் பாலியல் வல்லுறவு சம்பவங்களாகும். 4 பெண்களுக்கு ஒருவர், 7 ஆண்களுக்கு ஒருவர் இக்குற்றத்திற்கு உள்ளானவர்களாவர். உளப்பாதிப்பு நிகழ்வதால் மனமுடைந்து வாழ்கின்ற யுவதிகள், இளைஞர் பலராவர். இவ்வாறான பாலியல் குற்றவாளிகள் பொருட்களை உடைப்பது முதல், பல வன்செயல்களுக்கு உள்ளாகி வருகின்றமை கண்டறியப்பட்டுள் ளது. இறுதியாக சமூகத்தில் நாம் காணுகின்ற வன்செயலாளர்கள், வலுத் தாக்கல் செய்பவர்கள், குற்றவாளிகள், நெறிபிறழ்ந்தோர் அனைவரும் தமது வன்முறைத் தன்மையினைக் குடும்பத்தி லிருந்தே பெற்றுள்ளனர் என்பதும், இவர்களைத் திருத்துவதற்கு எடுக்கின்ற முயற்சிகள் பல வெற்றியளிக்கவில்லை என்பதும், அதனால் முதலில் பெற்றோர்க ளையே திருத்த வேண்டியுள்ளது என்பதும் தெளிவாகின்றது.


## மணமகள் தேவை

வன்கூவரில் அரசாங்க நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பிராமண குல 33 வயது ரேவதி நட்சத்திரம் சாதகத்தில் பாவம் குறைந்த மணமகனுக்கு நல்ல மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பரம் ***5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA***

# வைரவிழா....

33ஆம் பக்கத்தொடர்ச்சி



விரும்பி அணிவார். மகாராணிக்கு (அப்போது இளவரசி) 18வது வயதில் அவரது தந்தை 'Susan' என்று ஒரு Corgi இன நாயை அன்பளிப்பாக கொடுத்தார். இந்நாயின் பரம்பரைகளில், மகாராணி 30 நாய்களை அன்புடன் வளர்த்திருக்கிறார். அவரது ஆட்சி காலத்தில் அவர் சுமார் 5,000 தொப்பிகளை அணிந்திருப்பார். அதனால் அவரை 'Queen of hats' என்றும் அழைப்பார்கள். Queen பல குதிரைகளை வளர்த்து, அதன் மீது பயணமும் செய்திருக்கிறார். அதில் அவருக்கு மிகவும் விருப்பமானது 'Burmese' என்னும் கனடா RCMP அளித்த குதிரையாகும். அரசர்களை வாழ்த்தும் அரச கீதம் (Royal Anthem) 1619 இல் இயற்றப்பட்டது. அது பலமுறை மாற்றப்பட்டு தற்போது பின்வரும் வடிவம் உள்ளது.

"God save our gracious Queen
Long Live our noble Queen
God save the Queen
Sent her Victorious
Happy and Glorious
Long to reigin over Us
God save the Queen"

# "தமிழ்நாட்டை...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

நாளடைவில் ஒருவரை ஒருவர் சமயம் கிடைக்கும் போது தாக்கிக் கொள்ளும் அளவிற்கு பெரியதாகியது. அடுத்ததாக பாடல் வரிகளில் இளையராஜா தலையிட்டு மாற்றங்களைச் சொல்லும்போது அது விரிசலை மேலும் பெரியதாக்கியது. உதாரணமாக, 'சிந்து பைரவி' படத்தில் வைரமுத்து எழுதிய பல்லவியை மாற்றிவிட்டு கிராமிய பாடலில் இருந்து இளையராஜா எடுத்து போட்ட பல்லவிதான், 'பாடறியேன் படிப்பறியேன்' என்ற பல்லவி. பொதுவாக, ஒரு படத்தில் உள்ள அனைத்து பாடல்களையும் தானே எழுதவேண்டும் என்று வைரமுத்து விரும்புவார். இதை அவரே பலமுறை தெரிவித்துள்ளார்.

இந்த சூழலில் 'தாய்க்கொரு தாலாட்டு' படத்தில் அனைத்துப் பாடல்களையும் வைரமுத்து எழுதிக்கொடுக்க, அவை ஒலிப்பதிவாகி படமாக்கப்பட்ட பின்னர், ரீ-ரெக்கார்டிங்கின் போது மேலும் ஒரு பாடலை சேர்த்து அதை கவிஞர் வாலியை வைத்து எழுதச்சொல்லி, பாடல்கள்: வாலி, வைரமுத்து என்று டைட்டில் கார்டு போட வைத்தார் இளையராஜா. அவர் இவ்வாறு நடந்துகொள்ள காரணம், ஒரு பாடலின் வரிகளில், 'பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை' என்று வைரமுத்து எழுதி இளையராஜாவை சீண்டியதுதான். இப்படி ஒவ்வொன்றாகச் சேர்ந்து, கடைசியாக எல்லாம் சேர்ந்து ஒரு நாள், 'இசை பாடும் தென்றல்' படப் பாடல் கம்போஸிங்கின் போது மோதலாக வெடித்தது. 'எந்தன் கைக்குட்டையை யார் எடுத்தது' பாடலுக்கு வரியை எழுதி வைரமுத்து, இளையராஜா விடம் காட்ட, "என்னய்யா பாட்டு எழுதச் சொன்னா, உரைநடை எழுதியிருக்க? இப்ப பாரு நான் எழுதுறேன்" என்று ஒரு பாடலை இளையராஜா எழுதி, வைரமுத்துவிடம் காண்பித்திருக்கிறார். வைரமுத்து, "உரை நடை மாதிரி இருக்கு" என்று கூறிவிட்டு கோபமாக அந்த அறையில் இருந்து உடனடியாக வெளியேறிவிட்டார். அதன் பின்னர் எத்தனையோ பேர், எவ்வளோ விதமாக சமாதானம் செய்தும் பலனேதும் இல்லை.

சிவாஜி - பத்மினி காதல் போல் மர்மங்கள் நிறைந்தது, இந்தி நடிகர் அமிதாப் பச்சன் - இந்தி நடிகை ரேகா காதலும். இவர்களுக்குள் காதல் இருந்ததா இல்லையா என்று இன்று வரை வட இந்திய சினிமாவில் பெரும் சர்ச்சையே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த ஜோடியின் கடைசி படமான 'சில்சிலா'வின் போது, 'இருவரும் மிக காதலுடன் இருந்ததாக' இந்த படத்தின்



தயாரிப்பாளர் யஷ்ராஜ் ஒரு பத்திரிகை பேட்டியில் கூறியதாக தகவலும் இருக்கிறது. 'சில்சிலா'வுக்கு பின் கிட்டத்தட்ட 31 வருடங்கள் அமிதாப்பச்சன் - ரேகா இருவரும் இணைந்து நடிக்கவே இல்லை. இந்நிலையில் சமீபத்தில் ஒரு பத்திரிகை பேட்டியில், "நல்ல கதையும் பொருத்தமான தயாரிப்பாளரும் இருந்தால் ரேகாவுடன் நடிப்பதில் தனக்கு ஒன்றும் தயக்கம் இல்லை" என்று கூறி இருக்கிறார் அமிதாப்.




# புதிய $20 பல்படிவச்சேர்மானத்தாள்

போலியான டொலர் தாள்களைத் தடுக்கும் வகையில் புதிய பல்படிவச் (polymer)



சேர்மானமுள்ள $20 தாள் கனேடிய வங்கி (Bank of Canada) அறிமுகப்படுத்தியுள்ளது. கனடிய பணத்தின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை பாதுகாக்கவே புதிய $20 தாள் வெளியிடப்பட்டுள்ளதாக கனடிய வங்கியின் ஆளுநர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

எலிசபெத் மகாராணியின் படம் புதிதாக வெளியாகியுள்ள $20 தாளின் முகப்பில் அச்சிடப்பட்டுள்ளது. தாளின் பின்புறத்தில் கனேடிய ராணுவ சேவையினை பாராட்டும் வகையிலான படங்களும் பிரான்சில் உள்ள கனேடிய தேசிய விமி நினைவகத்தின் படமும் இடம் பெற்றுள்ளது.

முதலாம் உலகப்போரின் போது நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த படை வீரர்களின் நினைவினை குறிக்கும் கனேடிய தேசிய விமி நினைவகத்தின் படம் புதிய $20 தாளில் இடம்பெற்றுள்ளது பெருமைப்படத்தக்க வகையில் அமைந்திருப்பதாகவும் ஆளுநர் மார்க் கார்னி தெரிவித்தார். நிதி முறைகேடு மற்றும் குற்றங்களில் ஈடுபடுவோரைத் தடுக்கவே புதிய பல்படிவச் சேர்மானமுள்ள தாள்களை கனேடிய வங்கி வெளியிட்டுள்ளதாவும் இது குறித்து காவல்துறையினருக்கு விரிவான பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்படிவச் சேர்மானமுள்ள $5 மற்றும் $10 தாள்களை 2013 ஆம் ஆண்டில் வெளியிடவும் கனேடிய வங்கி முடிவு செய்துள்ளது. $100 மற்றும் $50 பல்படிவச் சேர்மானமுள்ள தாள்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

REAL AUTO FINISH
Experience • Integrity • Quality
அனுபவம் • நாணயம் • தரம்
FREE ESTIMATES • இலவச மதிப்பீடு
Call: Anton @ 416. 629. 7047
• Body Work
• Insurance Work
• Frame Straightening
• Complete Collision & Repairs
"உங்கள் வாகனங்களை திருத்த நாங்கள் வல்லுநர்கள்"
Business Hours: Mon to Fri; 8am - 6pm & Sat; 8am - 2pm
435 MIDWEST ROAD, UNIT # B3, SCARBOROUGH, ONTARIO, M1P 3A6
Email: auto@realautofinish.com
www.realautofinish.com

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

Thayalan (Thaya) Gobalakrishnan
Mortgage Development Manager
Scarborough North, Markham and Stouffville
Call me for any Mortgage Financing questions
* New Mortgages
* Refinance
* Equity take out
you're richer than you think.
Cell: 416-575-3211
Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@scotiabank.com
Scotiabank

NILAVAN PAINTING
Interior & Exterior Painting
For Residential & Commercial
Free Estimate Home & Office Interior & Exterior Painting
Using High Quality Materials
Ugee: 647.456.3079 Baskar: 416.833.5620

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☒ Virus Removal
☒ Internet Sharing
☒ Computer Tune Up
☒ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute